Registered as a Newspaper in Srilanka


தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 93 • 21.05.2017



இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா

உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60

தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்




# விக்கி VS கூரே

நடுவில் புகுந்து
விளையாடும் அதிகாரிகள்!

## மாபியாக்களின் பிடியில் நெல்லியடி பொதுசந்தை

## வவுனியாவில் மீண்டும் ஊழலா?

# "டெனீஸ்வரன் என்னுடன் கதைப்பதில்லை... அடுத்த தேர்தல் வரட்டும்"

கொதிக்கும் சிறிதரன்




27 வருடங்களாக தாலாட்டும் தாய்மடிகள் தந்து சாதனை படைத்து வரும்
ஐஸ்வர்யா மகளிர் மருத்துவமனை
எமது யாழ் நகரில்
நடாத்தும்
குழந்தையின்மை சிகிச்சை
உலகத்தில் முதல் முறையாக IVF சிகிச்சை இலவசம்
மாபெரும் இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

எதிர்வரும் மே மாதம் 19,20
மற்றும் 21 ஆம் திகதிகளில்
வேம்படி மகளிர் கல்லூரியில்.

முற்பதிவுகளுக்கும்
மேலதிக விபரங்களுக்கும்
அழைக்கலாம் - 0777370337



# VIKKI LEARNERS

எமது சேவை உங்களுக்கானது
உங்களுக்கு அருகாமையில் நாம்
எமது புதிய கிளை தற்போது சுன்னாகம் நகரில்.

வடபுலத்தில் தரமான சாரதி ஆக இன்றே எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.




அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பாடசாலை




தலைமை காரியாலயம்
136/1 பரமேஸ்வரா சந்தி
பலாலி ரோடு

No125/1 kks road
Chunnagam.
Phone:
0778308390,
021722 3201



10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

Bright Inn
# BRIGHT INN
பிறையிட் இன் ஹோட்டல்




அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | | |

இவை அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் BRIGHT INN

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு
0112 329664, 0117 242233, 0117 242244
E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel: 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933



# திருமண வாழ்த்து



17.05.2017 அன்று இறைவன் திருவருள்
துணை கொண்டு வழக்கம்பரை
முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில்
நண்பர்களால் வாழ்த்தி வழங்கிய



## திருமண வாழ்த்துப்பா மாலை

இரு மனம் இணையும் இன்னாள் இன்பம் பொங்கும் பொன்னாள்
இல்லற கூடக் கதவுகள் திறக்க இரு இதயங்கள் இணைய
நல்லறம் ஆரம்பிக்கும் நல்லதோர் இப் பொழுதில்
நண்பர்கள் புடை சூழ நலமுடன் வாழ்த்துகின்றோம் வாழி வாழி

குன்றாத குணமுடையான் குறிப்பறியும் செயல் மிக்கான்
மணவிழாக் காணும் மணாளன் மதி மிகு எங்கள் கஜமுகன்
நல்லறம் செய முனைந்து இல்லறம் காணும் இந் நாள்
வாழ்வியலில் புது விடியல் காண வாழ்த்துகின்றோம் வாழி வாழி

சந்திர வதனம் மிக்காள்-எம் சரித்திர நாயகி பிரியா
சுந்தரக் கோலம் கொண்டு மந்திரம் ஒலிக்கும் மணப்பந்தலில்
மங்கல நாண் ஏற்கும் மணவிழாக் கண்டு-எம்
மனம் நிறைய அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம் வாழி வாழி

விண்ணவரும் வியந்திட்ட விதியிணைத்த நின் காதலினால்
வரம்பில் இன்பம் சூழ்ந்து வர-ஈர் எண் செல்வங்கள் சிறந்து வர
அன்பும் அறனும் இணைந்து வர பண்பும் பயனுமாய் இல்லறம் செய்ய
இனிமை மிகு இப் பொழுதில் பிரியமுடன் வாழ்த்துகின்றோம் வாழி வாழி

செம்புலம் சேர் நீர்த் துளியாய் எழுந்த உம் காதல்
தெளிந்த நீரின் தெவிட்டாத சுவையாய் தொடர்க உம் வாழ்க்கை
கடல் கொண்டும் அழியாத் தமிழாய் அமைக உம் சரித்திரம்-என
இம் மடல் கொண்டு மகிழ்ந்துருகி வாழ்த்துகின்றோம் வாழி வாழி

இந்நாள் சுகம் எந்நாளும் மலர, வளர வாழ்த்தும்,
இணைபிரியா நண்பர்கள்
பண்ணாகம்





NO 1 TOPAZ
# TOPAZ
No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees, Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPZ | TOPAZ TAILORING | TOPZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna | No 80/24, Kasthuriyar Road Jaffna | No 195, Power House Road Jaffna |
| Tel 021 222 4743 | Tel 021 222 4643 | Tel 021 222 4933 |
| Fax 021 222 7645 | Email : topazagni@gmail.com | 021 221 9933 |




## கறுப்பு பூனைகளிற்கு டிமிக்கி விட்டவர்!

இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். மோடியின் விஜயத்தை முன்னிட்டு பெருமெடுப்பிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மோடியின் பயணம், பாதுகாப்பிற்காக ஹெலிகொப்டர் மற்றும் கறுப்பு பூனை பாதுகாப்பு பிரிவினர் என இந்தியர்கள் பாதுகாப்பில் மிரட்டினார்கள். மோடியின் இலங்கை பயணம் முழுவதும் இந்திய கறுப்பு பூனை பாதுகாப்பு பிரிவினர் உச்சபட்ச பாதுகாப்பு கொடுத்தனர்.

கறுப்பு பூனைகளின் பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு ஊடகவியலாளர் ஒருவர் மோடியை நெருங்கிய சம்பவமொன்று நடந்துள்ளது. அட்டன் விஜயத்தின் போது ஊடகவியலாளர் ஒருவர் படமெடுப்பதற்காக மோடியை நெருங்கிச் சென்றுள்ளார். கறுப்பு பூனைகள் அசட்டையாக நின்றதை பயன்படுத்திமோடியைகையெட்டும்தூரத்திற்கு நெருங்கி, புகைப்படம் எடுத்துள்ளனர். விட்டால் மோடிக்கு பக்கத்திலேயே போய் உட்கார்ந்துவிடுவார் என்ற நிலை ஏற்பட்ட பின்னர்தான், கறுப்பு பூனைகள் சுதாகரித்துக் கொண்டு, அவரை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

## சம்பந்தர் குடித்த வைனிற்கு கணக்கு பார்க்கும் மகிந்த!

தமிழ் பிரமுகர் ஒருவர் தேவையின் நிமித்தம் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்திருக்கிறார். பல விடயங்களை பேசிவிட்டு, புதிய அரசியலமைப்பு உருவாக்க பணிகளிற்கு மகிந்த ஒத்துழைக்க வேண்டுமென அந்த பிரமுகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதைக் கேட்டதும் மகிந்த ராஜபக்சவிற்கு கோபம் வந்துவிட்டதாம்.



"யுத்தம் முடிந்தவுடன் தமிழர்களின் இனப்பிரச்சனையை தீர்க்க வேண்டுமென ஈடுபாட்டுடன் செயற்பட்டேன். சம்பந்தருடன் எத்தனை தரம் பேசினேன். அவர் மவந்து மது அருந்தி, எல்லாவற்றையும் கேட்டு தலையாட்டிவிட்டு, பிறகு எல்லாவற்றையும் குழப்பிவிட்டார்" என பொரிந்து தள்ளியுள்ளார்.


இந்தகதையை இத்துடன் விடவில்லை. இந்தநாட்களில் அவரை காணும் தமிழ் பிரமுகர்களிடம் எல்லாம் சொல்லி புலம்பிக் கொண்டிருக்கிறாராம். இதில் ஹைலைட் என்னவென்றால், ஒரு ஊடகவியலாளரிடமும் இதை சொல்லியுள்ளார். அவர் அந்த கதையை சம்பந்தரை சந்தித்து சொல்லியுள்ளார். கண்ணைமூடி கேட்டுக் கொண்டிருந்த சம்பந்தர், ஒரு நமுட்டு சிரிப்புடன் இருந்தாராம்.

## சுரேஷின் வாயை மூட சம்பந்தர் விட்ட அஸ்திரம்!

தமிழ்தேசிய கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் ஆளுக்கொன்றாக முறுகிக்கொண்டிருப்பது ஊறிந்ததுதான். இதுவரை காலம் கட்சி கூட்டங்களில் முறுகுப்பட்டவர்கள் இப்பொழுது பகிரங்கமாகவே முறுகுப்பட தொடங்கிவிட்டனர். அதுகூட பரவாயில்லை. வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான சந்திப்பிலும் ஆளுக்கு ஒரு கதை கதைப்பது. மென்மையாக அணுகுவோம் என ஒரு கட்சி நினைக்க, மற்றைய கட்சி வெட்டு ஒன்று துண்டு இரண்டாக பேசி நிலைமையை சிக்கலாக்குவதென ஒவ்வொரு திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். சில மாதங்களின் முன் இந்திய வெளியுறவுத்துறை செயலர் ஜெய்சங்கர் வந்தபோது கூட்டமைப்பினர் சந்தித்திருந்தனர். இதன்போது வடக்கு கிழக்கு இணைப்பு விவகாரத்தில் சுரேஷ் பிரேமசந்திரன் சற்று கடுமையாக விவாதித்திருந்தார்.

இந்த அனுபவமோ என்னவோ இம்முறை மோடியை சந்திக்கும்போது கூட்டமைப்பு தலைமை புது ஐடியா ஒன்று போட்டது. மோடியை கட்டுநாயக்க விமானநிலையத்தில் சந்திக்க கூட்டமைப்பினர் சென்றிருந்தனர்.

விமானநிலையத்தில் மோடிக்காக காத்திருந்த சமயத்தில், பேச்சிற்கான முன் தயாரிப்புக்கள் நடந்துள்ளன.



அப்போது சம்பந்தர் சொல்லியுள்ளார் "நான் மட்டும் கதைப்பதைதான் இந்தியா விரும்புகிறது" என. இதன் அர்த்தம், கூட வருபவர்கள் சத்தமில்லாமல் வந்து உட்கார்ந்துவிட்டு போகவேண்டுமென்பது. ஜெய்சங்கரை சந்தித்த சமயத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் நடந்து கொண்டதை வைத்துதான் சம்பந்தர் இந்த அஸ்திரத்தை எய்ததாக கூறப்படுகிறது.


பிறகென்ன, அன்றைய சந்திப்பில் சம்ந்தர்தான் வில்லுப்பாட்டுக்காரன். கூடப்போனவர்கள் ஆமாம் சாமியும் போடாமல்தலையாட்டிக்கொண்டிருந்து விட்டு வந்தார்களாம்!

## மஹிந்த வீழ்த்தும் ஐதேகவின் முதல் விக்கெட்!

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலரும் தம்முடன் இணையப்போவதாக மகிந்த அணி அண்மையில் அறிவித்திருந்தது. இது சற்று மிகைப்படுத்தப்பட்ட கூற்று என்றபோதிலும், முற்றாக பொய்யும் அல்லவென தெரிகிறது. ஐக்கிய தேசியக்கட்சியின் விக்கெட் ஒன்று விழுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது போல்தான் தெரிகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்த சுஜீவ சேனசிங்க, சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கிறார். கடந்த 14ம் திகதி கொலன்னாவவில் நடந்த மக்கள் சந்திப்பொன்றில் கட்சி தலைமையை விமர்சித்திருந்தார். சாதாரண அலுவலக பணியாளருக்கு உள்ள அதிகாரம் கூட தனக்கு இல்லை, கட்சித் தலைவர் எதேச்சரிகாரமாக செயற்படுகிறார், எந்த நேரத்திலும் கட்சியை விட்டு வெளியேற தயாராக இருக்கிறேன் என கூறினார்.

அதற்குள் இன்னொரு செய்தி அரசல்புரசலாக வெளியானது. ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் ஒருவர் மகிந்தவுடன் இரகசிய பேச்சில் ஈடுபட்டதாக. அது சுஜீவ சேனசிங்கதான் என மகிந்த முகாம் தகவல்கள் மூலம் அறிய முடிந்தது. இந்நிலையில், மகிந்தவின் மரணமான சகோதரியின் ஏழாம் நாள் நிகழ்வுகள் அண்மையில் நடந்தன. இதற்கு சுஜீவவும் சென்று மகிந்தவுடன் சிறிய சந்திப்பில் ஈடுபட்டார். அதை முடித்துவிட்டு, நாமலுடன் நீண்டநேரம் தனிமையில் உரையாடிக்கொண்டிருந்தார். அந்த வீட்டில் நீண்டநேரம் இருந்துவிட்டு சுஜீவ கிளம்பியுள்ளார்.




## விக்கி, சுமந்திரன், சுரேஷ் இந்தியாவின் செய்தி!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்தபோது, பயணத் திட்டங்கள், யார்யாரை சந்திப்பதென்றெல்லாம் இந்திய வெளியுறவுத்துறை முன்னரே திட்டமிட்டிருந்தது. இந்த திட்டத்திற்கு புறம்பாக நடந்த ஒரே சந்திப்பு மகிந்த மோடி சந்திப்பு. மற்றைய சந்திப்புக்கள், அதில் யார் யார் கலந்து கொள்வதென்பதெல்லாம் இந்திய அதிகாரிகளின் திட்டம்தான்.

கூட்டமைப்புடனான சந்திப்பில் தன்னை அழைக்கவில்லை, கூட்டமைப்பிற்கு நான் வேண்டாதவன் என்று வடக்கு முதலவர் விக்னேஸ்வரன் அண்மையில் கூறியிருந்தார். வடக்கு முதல்வரை கூட்டமைப்பு சார்பில் சந்திப்பதில்லை என்பதை இந்திய தரப்பே திட்டமிட்டு தவிர்த்துள்ளதாக தெரிகிறது. தமிழ்தேசிய கூட்டமைப்பை நெருக்கடிக்குள்ளாக்கும் அரசியல் நகர்வுகளை அவர் செய்வதை இந்தியா ரசிக்கவில்லையென்பதை குறிப்பால் உணர்த்தவே இந்த தவிர்ப்பு நடந்துள்ளது.

இதேபோல தமிழ்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனின் முக்கியத்தவத்தையும் குறைக்கும் விதமாகவே மோடியின் சந்திப்புக்கள் இருந்தன. வழக்கமாக வெளிநாட்டு பிரமுகர்கள் சந்திப்பு, சந்திப்பின் பின்னராக கருத்து தெரிவிப்பில் சுமந்திரனிற்கு முக்கிய இடமிருக்கும். இம்முறை அது கவனமாக தவிர்க்கப்பட்டுள்ளது. சுமந்திரன் இந்தியாவின் நலன்களுடன் இணைந்து செயற்படுபவரல்ல, மேற்கு நாடுகளின் அபிமானி என்ற அபிப்பிராயம் இந்திய வெளியறவுத்துறையிடம் உள்ளது. இலங்கையிலுள்ள அதிகாரிகளும் பல சந்தர்ப்பங்களில்தம்மைசந்திப்பவர்களிடம் இதை குறிப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மோடியுடனான சந்திப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தரப்பை கழற்றிவிடுவதற்காக, எதிர்க்கட்சி தலைவர் என்ற கோதாவில் பங்காளிகளை தவிர்த்துவிட்டு சம்பந்தரை மட்டும் கலந்து கொள்ளுமாறு ஒரு யோசனை தமிழரசுக்கட்சியின் சில தரப்பிலிருந்து வைக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த கருத்தை ஒரேயடியாக நிராகரித்துள்ளார் சம்பந்தர்.

## அந்த நாலு பேர் இருக்கிறார்களா?

இரட்டை குடியுரிமையை கொண்டிருந்ததற்காக பொது எதிரணியின் கீதா குமாரசிங்க பாராளுமன்ற உறுப்புரிமைக்கு தகுதியற்றவர் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இந்த தீர்ப்பை உயர் நீதிமன்றம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களில் எத்தனை பேர் இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் என்ற சர்ச்சை தோன்றியது. இதன் தொடர்ச்சியாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் இரட்டை குடியுரிமையை கொண்டுள்ளதாக ஒரு செய்தி வெளியானது.

இந்த செய்தி அடிப்படை உண்மையற்றது என கூட்டமைப்பு வட்டாரங்கள் மறுத்துள்ளன. மஹிந்த ஆதரவு பத்திரிகை ஒன்றே இந்த செய்தியை முதலில் வெளியிட்டிருந்தது.

இதை தொடர்ந்தே பரவலாக இந்த செய்தி வெளியானது. தமிழ் தேசியக்கூட்டமைப்பினரை பாதுகாத்துக் கொண்டு, எமது அணியினரை அரசு பழிவாங்குகிறது என வழக்கமாக ஏற்படுத்தும் அனுதாப அலையை ஏற்படுத்தவே இந்த செய்தியை மஹிந்த அணி பரப்பியுள்ளது.



# அபுதாபி தனவந்தர் 120 வீடு கட்டுகிறார்!

வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றத்துக்கென அபுதாபி நாட்டைச் சேர்ந்த தனவந்தர் மஹ்மூத் பேட் ஹாலி அப்துல்லாஹ் 120 வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளார். இலங்கை வந்த மேற்படி தனவந்தர் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குச் சென்று அங்கு மீளக்குடியேறியுள்ளவர்களின் நிலையை நேரில் கண்டறிந்தார்.

"ஆரம்பக் கட்டமாக மீள்குடியேறுவோருக்கான தேவைக்காக மனிதாபிமான ரீதியில் 120 வீடுகளை அமைத்துக் கொடுக்கின்றோம். மீள்குடியேறிய மக்களுக்கு இன்னோரன்ன தேவைகள் இருப்பதை அறிந்து கொண்டோம். இந்த மக்களுக்கு தண்ணீர் பெரும் பிரச்சினையாக இருப்பதால், அடுத்த கட்டமாக குடிநீர் தேவைக்கென நீர் வழங்கல் திட்டத்தினையும், விவசாயம் மற்றும் வேறு பல தேவைகளுக்கும் இன்னுமொரு நீர் வழங்கல் திட்டத்தினையும் ஏற்படுத்திக் கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம்" என்று இதன்போது, தனவந்தர் மஹ்மூத் பேட் ஹாலி அப்துல்லாஹ் கூறினார்.

அமைச்சர் றிஷாட் பதியுதீனின் வேண்டுகோளின் பேரிலேயே அவர் இந்த திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

# கல்முனை பள்ளிவாசலில் காணாமல்போகும் தலைக்கவசம்!

கல்முனை நகர ஜும்மா பள்ளிவாசலில் பெறுமதியான தலைக்கவசங்களை இனந்தெரியாத நபர்கள் திருடிச் சென்றுள்ளனர். கடந்த 13ம் திகதி நடைபெற்று முடிந்த ஜும்மா தொழுகையின் பின்னர் சுமார் 3,500 ரூபா பெறுதியான இரு தலைக்கவசங்கள் திருடப்பட்டுள்ளன.

தொழுகை முடிந்த பின் சலாம் கொடுத்ததன் பின்னர் பள்ளிவாசல் ராக்கையில் வைக்கப்பட்ட தலைக்கவசங்களை உரியவர்கள் எடுக்கச் சென்றபோது அவை மாயமாக மறைந்திருந்தன.

இதனால் கோபமடைந்த தலைக்கவசத்தை இழந்த நபர் பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஜவாத்திடம் தெரிவித்தார்.

எனினும் அவர் உங்கள் உடமைகளை நீங்கள் தான் பார்க்க வேண்டும்.இங்கு பாதுகாப்பு எதுவும் கிடையாது என கூறிவிட்டு சென்றுவிட்டார்.

இந்நிலையில் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் குறித்த நபரிடம் வந்து சாதாரணமாக தொழ வந்தவர்கள் மாறி எடுத்து சென்றிருக்கலாம் என குறிப்பிட்டனர். இதனால் கோபமடைந்த தலைக்கவசத்தை இழந்த நபர் பெறுமதி கூடிய தலைக்கவசத்திற்கும் சாதாரண தலைக்கவசத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்களா தொழுவதற்கு வருகின்றார்கள் என திட்டியபடி சென்றார்.

குறித்த பள்ளிவாசலில் அண்மைக்காலமாக தலைக்கவசங்கள் செருப்புகள் ஜும்மா தொழுகையின் பின்னர் மாயமாகி வருகின்றன. ஆனால் அவற்றை இழந்தவர்கள் எதுவித முறைப்பாடுகளையும் நிர்வாகத்தினருக்கு தெரிவிப்பதில்லை என கூறப்படுகின்றது.

# வாகனம் விற்ற எம்.பிக்கள்!

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எச்.எம்.சல்மான், எம்.எஸ்.தௌபீக் ஆகியோரின் வாகன அனுமதிப்பத்திர விவகாரம் பரபரப்பை கிளப்பியுள்ளது. தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை விற்றார்கள், அல்லது வாகனத்தை இறக்குமதி செய்து விற்றார்கள் என்பது ஆதாரபூர்வமாக உறுதியானதையடுத்து, முஸ்லீம் காங்கிரசிற்குள்ளும் இந்த விவகாரம் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

தேசியப்பட்டியல் நியமனம் பெற்ற இந்த இரண்டு உறுப்பினர்களும் வாகனப் பத்திரங்களை விற்பனை செய்துள்ளனர். இதன்மூலம் பெற்ற பணத்தை கட்சிக்கு வழங்க வேண்டும் என்ற கருத்து காங்கிரசிற்குள்ளேயே .வலுப்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. உயர்பீட உறுப்பினர்கள் சிலரும் இதை வலியுறுத்துவதாக தெரிகிறது.

சல்மானின் தனது பத்திரத்தை சுதந்த ரோகண என்பவரிற்கு விற்பனை செய்துள்ளார். இதன்மூலம் டொயாட்டோ லான்ட் குரூசர் வாகனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தௌபீக் தனது பத்திரத்தை பிரைம் லான்ட்ஸ் பிரைவேற் லிமிட்டெட் என்ற நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளார். இதன்மூலம் மெர்சிடஸ் பென்ஸ் காரும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் பெரும்பாலும் விற்பனை செய்யப்பட்டு விடும். விருப்பு வாக்குமுறை தேர்தலால் பெரும் பணம் செலவிட்டு வெற்றி பெறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊழல் மூலம் அந்த பணத்தை சேர்க்காமலிருக்க, தீர்வையற்ற வாகன வரிப்பத்திரம் வழங்கப்படுகிறது என்ற கருத்து உள்ளது.

முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களில் கபீர் ஹாசீம், எம்.சி.எம்.பைசல், எச்.எம்.எம். ஹரீஸ், எஸ்.எம்.மரிக்கார், அப்துல்லா மஹ்ரூப், எம்.ஐ.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோரும் வாகன பத்திரங்களை விற்பனை செய்துள்ளனர். இதன்மூலமும் லான்ட் குரூசர் வாகனங்களே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

# அஸ்மினிடம் கேள்விகேட்கும் ஷிப்லி!

வடக்கு கிழக்கு இணைப்பிற்கு ஆதரவாக கருத்து தெரிவித்த நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வடமாகாணசபை உறுப்பினர் அயூப் அஸ்மினை கண்டித்துள்ளார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஷிப்லி பாரூக்.

"அஸ்மினின் இந்த கருத்தின்மூலம் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு கிழக்கு முஸ்லீம்கள் ஆதரவு தெரிவிப்பது போன்ற தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தக் கருத்தால் கிழக்கு முஸ்லீம் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். வடக்கு கிழக்கு இணைப்பு தமிழ்தேசியக்கூட்டமைப்பினதும், தமிழ் மக்களினதும் அபிலாசையாக இருக்கலாம். ஆனால் கிழக்கு முஸ்லீம்கள் இதற்கு ஒருபோதும் ஆதரவு வழங்கவில்லை.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதும், அந்த முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அஸ்மின் இணைப்பை ஆதரிப்பதும் மக்களை ஏமாற்றும் கருத்தாகும்.

சுழற்சிமுறையில் மாகாணசபைக்கு இன்னொருவரை நியமிக்க அஸ்மினை மீளழைப்பதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கூறுகிறது. மீளழைப்பதில் கடந்த நான்கு ஆண்டுகளாக சட்டச் சிக்கல் இருந்ததாகவும், இதனாலேயே கடைசி நிர்வாக ஆண்டில் மீளழைப்பதாகவும் கூறுகிறார்கள். ஆனால் மாகாண சபைகளை சுழற்சிமுறையில் மாற்றுவதில் இப்படியான சட்டச்சிக்கல் எதுவும் எமது நாட்டில் இல்லை. நான்கு வருடமாக இருந்த சட்டச் சிக்கல் இப்பொழுது தீர்ந்து விட்டதா?" என ஷிப்லி பாரூக் கேள்வியெழுப்பியுள்ளார்.

# ஹம்பாந்தோட்டை சிக்கல் இதுதான்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீன விஜயம் செய்யும்போது ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தமெதையும் செய்ய வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால வலியுறுத்திக் கூறியுள்ளார். ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை 70 வருடங்கள் சீனாவிற்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு ஜனாதிபதி விரும்பவில்லையென தெரிகிறது. நிதி மற்றும் பொருளாதார விடயங்களில் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வற்ற தன்மையே இந்த இழுபறிக்கு காரணமென தெரிகிறது. ஐக்கியதேசியக்கட்சியின் பொருளாதாரக்கொள்கை தவறானது, நிதியமைச்சு ஊழலில் ஈடுபடுகிறதென பெரும்பாலான சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் கருதுவதால், ஜனாதிபதி இந்த நிலைப்பாட்டை எடுத்ததாக தெரிகிறது. இதனால் 30 வருட குத்தகை தொடர்பாக கலந்துரையாட தயாராக இருப்பதாக ஜனாதிபதி தனக்குநெருக்கமானவர்களிற்கு கூறியுள்ளார்.

துறைமுக ஒப்பந்தம் தொடர்பான இறுதி அறிக்கையை சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். எனினும், ஜனாதிபதி இதில் இறுதி தீர்மானம் எடுக்கவில்லையென தெரிகிறது.

இதேவேளை ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குவதால் எந்த பலனுமிருக்காதென்ற கருத்தும் கூட்டரசின் ஒரு தரப்பிடம் எழுந்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதியில் 60% பொருட்கள் பிரித்தானியாவிற்கே செல்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறியுள்ளதால் ஜிஎஸ்பி பிளஸ் சலுகையால் பலனில்லை என்ற கருத்தை மலிக் சமரவிக்கிரம தொடர்ந்து மறுத்து வருகிறார்.

தற்போதைய நிலையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு அதிக காலத்திற்கு ஒப்படைக்கும் சாத்தியம் குறைவாக உள்ளதாக தெரிகிறது.

# பேரீச்சம்பழ அரசியல்!

நோன்பு காலத்திற்கு யாழ் முஸ்லீம் மக்களுக்கு வழங்கப்பட்ட பேரீச்சம்பழங்களை பதுக்கியுள்ளதாக தெரிவித்து துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. யாழ் கிளிநொச்சி முஸ்லீம் சங்கம் என பெயரிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லீம் மக்களின் வீடுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பேரீச்சம்பழ அரசியலும் யாழ் கிளிநொச்சி உலமா கிளை சபையின் கையாலாகாத்தனமும் என்ற தலைப்பிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள இந்த துண்டுப் பிரசுரத்தில், பெறப்பட்ட பேரீச்சம்பழங்கள் தொடர்பாகவும் அதனை பெற்று யாழுக்கு கொண்டு வந்த குழு என்ன செய்தது என்றும் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. அத்துடன், யாழ் கிளிநொச்சி உலமா சபை கிளையின் திறமையின்மை தொடர்பாகவும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

இந்த துண்டு பிரசுரத்தின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது உறுதி செய்யப்படவில்லை.



# பகைவர்களையும் நண்பர்களையும் தீர்மானிக்கட்டும்!

இலங்கை செல்லும் திசை குறித்த அச்சம் மீண்டும் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. இருண்ட யுகத்தை நோக்கி சென்று கொண்டிருந்த இலங்கையில் 2015 இல் ஏற்பட்ட சடுதியான மாற்றம் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருந்தது. சிறுபான்மையினங்களின் இருப்பு, பொருளாதாரம், சர்வதேச அபிப்பிராயம், ஊடக சுதந்திரம் என அனைத்துமே அச்சமூட்டும் நிலைமைநோக்கி சென்றது. இந்த ஆட்சி இன்னும் பத்தாண்டுகள் நீடித்திருந்தால் கொழும்பில் ஒலித்த இனவாத பேச்சின்படி நாமெல்லோரும் கடலுக்குள் விழுந்திருக்க வேண்டும். அல்லது தென்னிந்தியாவிற்கு கப்பலேறியிருக்க வேண்டும்.

2015 இல் ஏற்பட்ட மாற்றம் ஆசுவாசத்தை ஏற்படுத்தியது. இந்த மாற்றம் முழுமையாக உள்ளிருந்து நிகழாமல், வெளியிலிருந்தும் நிகழ்த்தப்பட்டதாலோ என்னவோ, பழைய இனவாத சூழலை எதிர்கொள்வதில் சிரமங்களை சந்தித்து கொண்டிருக்கிறது. நல்லாட்சியின் வாக்குறுதிகளை இனவாத செயற்பாடுகள் சவாலுக்கு உட்படுத்திக் கொண்டிருக்கின்றன.

நாடு முழுவதும் இனவாதத்தின் எழுச்சி ஆபத்தான அளவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சிறுபான்மையினங்கள் ஆபத்தான காலத்தை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளனர். அரச நிர்வாகமும், மத துவேசமும் கூட்டாக இணைந்து கடந்த ஆட்சியில் சிறுபான்மையினங்களிற்கு அச்சுறுத்தலாக செயற்பட்டன. இன்று மத துவேசம் மீண்டும் தலை தூக்குகிறது. முழு இலங்கையிலும் சிறுபான்மையினங்கள் அச்சுறுத்தலை சந்திக்கின்றனர். வாழிட, வழிபாட்டிடங்கள் குறிவைக்கப்படுகின்றன. சாதுவாக அறியப்பட்ட பௌத்த பிக்குகள் சிலர் ரௌத்திரம் மிக்கவர்களாக மாறி சிறுபான்மையினங்களின் இருப்பிற்கே உலைவைக்கிறார்கள். அரசும் இவற்றை தடுக்க முடியாமல் திண்டாடுகிறது.

அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ள இனவாத முன்னெடுப்புக்களின் பின்னால் வலுவான அரசியல் கைகள் இருக்கலாம். அந்த கைகளிற்கு அரசியல் நோக்கங்கள் இருக்கலாம். அரசியல் நோக்கமுடைய கைகள் ஒவ்வொரு ஆட்சிக்காலத்திலும் காய்களை நகர்த்தினால் சிறுபான்மையினங்கள் எப்படி வாழ்வது?

சிறுபான்மையினங்கள் ஆட்சியை தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுகிறார்கள் என்பதால், ஆட்சியை பிடிக்க எத்தனிப்பவர்கள் சிறுபான்மையினங்களை கொதிநிலைக்கு தள்ளுவதை ஒரு ஆயுதமாக பாவிக்கிறார்கள். அவர்களின் கருவிகளாக இனவாத, மதவாத அமைப்புக்கள் செயற்படுகின்றன.

சிறுபான்மையினத்தவரும் இலங்கையர்களே. அவர்களிற்கும் இலங்கை சொந்தமானது. தனித்த எந்த மதத்திற்கும் இலங்கை சொந்தமானதல்ல. இந்த புரிதல் ஒவ்வொருவரிற்கும் அவசியம். குறிப்பாக அரசியல் செய்பவர்களிற்கு. சிறுபான்மையினங்களை நெருக்கடிக்குள்ளாக்கி ஆட்சியை பிடிப்பது அசிங்கமானது, மனிதம் அல்லவென்ற சிந்தனையும், அரசியல் கலாசாரமும் அவசியம். துரதிஷ்டவசமாக அது இலங்கையில் கிடையாது. ஆட்சியை கைப்பற்ற எதையும் செய்யலாம் என்ற சிந்தனைதான் இலங்கை அரசியல்வாதிகளின் இயல்பு. சிறுபான்மையினர் தொடர்பான சமத்துவ சிந்தனை சுட்டுப்போட்டாலும் நமது அரசியல்வாதிகளிற்கு ஏற்படாது என்பதை காலம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாற்று ஏற்பாடுகளின் மூலமே சிறுபான்மையினங்களின் உரித்துக்களும், பாதுகாப்பான வாழ்வும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.


சட்ட ஏற்பாடுகள் மூலம் இதை செய்வதே பொருத்தமானது. இனவாத செயற்பாடுகள் தண்டனைக்குரிய குற்றம் ஆக்கப்பட வேண்டும். இனவாதத்தை எப்படி கண்டறிவது என்பதில் சிக்கல் ஏற்படும். வடக்கில் வீதிவீதியாக தீபம் கொண்டுசெல்லும் சிவாஜிலிங்கம் இனவாதம் வளர்க்கிறார் என்கிறார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர். சிறுபான்மை மக்களின் வாழிடங்களை மதத்தின் பெயரால் அகற்றுவதும், சிறுபான்மையினரின் வாழிடங்களை தாக்குவதும், கொல்லப்பட்டவர்களை அஞ்சலிப்பதும் ஒன்றல்ல. இரண்டும் வேறுவேறானவை. சிவாஜிலிங்கம் பேசும் எல்லாமே இனவாதமற்றவை என்று சொல்ல முடியாமலிருக்கலாம். ஆனால் அஞ்சலி ஒரு இனத்தின் உரிமை. அதை தடுப்பதே இனவாதமாகும்.

அஞ்சலி நிகழ்வுகளை தமிழர்கள் நிதானமாக செய்கிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அஞ்சலி நிகழ்வுகள் இன்னொரு இனத்தின் மீதான வெறுப்புணர்வை தூண்டுபவை அல்ல. அப்படி ஏற்பாடு செய்யப்படுவதுமில்லை. தென்னிலங்கையில் மேலெழும் இனவாத அலையை சமாளிக்க அதனுடன் சேர்ந்து ஓடும் ஒரு முடிவை ஆட்சியாளர்கள் எடுப்பதை போல் தெரிகிறது. அதை எதிர்த்து நின்றால் மூழ்கடித்துவிடும் என அவர்கள் நினைக்கலாம். மகிந்த ராஜபக்சவும் ஆட்சியதிகாரத்தில் இருந்த சமயத்தில் இதே முடிவைத்தான் எடுத்தார். அவர் ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கும் தருணத்தில் மைத்திரி ரணில் கூட்டரசும் இதேவிதமான கொள்கையை கடைப்பிடிக்க எத்தனிக்கிறது. ஒரு இனவாத பூதத்தை அனுசரித்துக்கொண்டு இன்னொரு இனத்துடன் உறவாட முடியாது. கள்ள உறவுதான் வைத்திருக்கலாம். தமிழ், முஸ்லீம் இனங்களை குறிவைத்து வளர்க்கப்பட்டு வரும் இனவாத பூதத்துடன் என்ன வகையான உறவை வைக்கப் போகிறோம் என்பதை கூட்டரசின் தலைவர்கள் தெளிவாக முடிவெடுக்க வேண்டும். பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் அரசியல் செய்ய முடியாது. அது ஆபத்தான அரசியல்.

யார் நண்பர்கள், யார் பகைவர்கள் என்பதை ஆட்சியாளர்கள் செயலால் நிரூபிக்க வேண்டிய காலமிது.

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk



**துமிந்த திசாநாயக்க**
**– செயலாளர், சிறிலங்கா சுதந்திரக்கட்சி**

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனை தவிர, மற்றைய அனைத்து முதல்வர்களும் ஜனாதிபதியுடன் இருக்கிறார்கள். இதனால் மாகாணசபைகளில் ஆட்சி மாற்றம் நடக்காது. மாகாணசபை தேர்தல் வரை இதே நிலைமைதான் தொடரும். எந்தவொரு தேர்தலுக்கும் சுதந்திரக்கட்சி தயாராகத்தான் இருக்கிறது. இந்த வருடத்தில் சில மாகாணசபைகளின் ஆயுள்காலம் முடிவடைகிறது. அப்போது அவற்றை கலைத்துவிட்டு தேர்தல் நடத்துவோம்.



**ஹாபீஸ் நசீர் அஹமட்**
**– முதலமைச்சர், கிழக்கு மாகாணம்**

முஸ்லீம் சமூகத்தின் அரசியல் உரிமையை பெற உருவாக்கப்பட்ட கட்சி இது. எமது இலக்கு இந்த சில்லறை பிரச்சனைகள் அல்ல. யாருக்கும் பதவிகள் கொடுக்க வந்த கட்சியல்ல சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ். முஸ்லீம்களின் அபிலாசைதான் எமது இரத்தத்தில் ஊறியது. முஸ்லீம் சமூகத்தில் பல கட்சிகள் உள்ளன. ரிசாட் பதியுதீனை எடுத்துவிட்டால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்ற கட்சி இருக்குமா? புத்தளத்தில் இருப்பவர் எஸ்.எல்.எப்.பியில் சேர்கிறார். அனுராதபுரத்தில் இருப்பவர் யு.என்.பியில் சேர்கிறார். அமீர்அலி எங்குபோவதென தெரியாமல் அங்கு நிற்கிறார். இதொரு கட்சியா? தனி மனிதனில் தங்கியிருப்பது கட்சியல்ல.



**ருவான் விஜயவர்த்தன**
**– பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்**

வடக்கு கிழக்கிலும் இராணுவம் மக்களுக்கு செய்யும் சேவை என்னவென்பது மக்களுக்கே நன்றாக தெரியும். எனினும், முதலமைச்சர் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் போன்றவர்கள் தவறான கருத்துக்களை பரப்பி வருகிறார்கள். நினைவேந்தல் தினமென தீபம் ஏந்திக்கொண்டு இராணுவத்தை குற்றம் சுமத்திக்கொண்டு தமது அரசியலை செய்கிறார்கள். தீபம் ஏந்தவும், இராணுவத்தை குறைகூறவும் தடையில்லாத நிலையேற்பட்டது இராணுவத்தின் தியாகத்தாலேயே. புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருந்து பணம் பெற்றுக்கொள்ளவே இப்படியான நாடகங்களை நடிக்கிறார்கள்.



**லக்ஸ்மன் கிரியெல்ல**
**– உயர்கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சர்**

வடக்கு கிழக்கு இணைப்பை நீதிமன்றத்தான் தீர்மானிக்க வேண்டும். மக்களின் அபிப்பிராயம் என்னவென்பதையும் கவனிக்க வேண்டும். அரசியல்வாதிகளின் அபிப்பிராயம் இதில் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. புதிய அரசியலமைப்பிலும் வடக்கு கிழக்கு இணைப்பை யாரும் வலியுறுத்தவில்லை. இதில் இணைப்பு என்ற கதைக்கு இடமும் இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் அபிப்பிராயத்தின்படி நாம் செயற்பட முடியாது.



**எஸ்.கிருஸ்ணகுமார்**
**– சுகாதார வைத்திய அதிகாரி**

கலுவாஞ்சிக்குடியில் இரத்த பரிசோதனை செய்தவர்கள் மலேரியா தடுப்பு பிரிவினரே. இதற்காக மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. மாவட்டம் முழுக்க நடக்கும் இரத்த பரிசோதனையின் ஒரு அங்கமாகவே கலுவாஞ்சிக்குடியிலும் நடந்தது. இந்த பரிசோதனைகளிற்கு சுகாதார திணைக்களமே பொறுப்பு. இனிவரும் நாட்களில் ஒலிபெருக்கி மூலம் மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கையை செய்வோம்.



**எம்.ஏ.சுமந்திரன்**
**– பேச்சாளர், தமிழ்தேசிய கூட்டமைப்பு**

காணாமல் போனவர்களில் அனேகர் பாதுகாப்பு தரப்பினராலேயே காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளனர். 2008,2009 காலப்பகுதியில் முப்பதாயிரம் பேர் வரை காணாமல் போயுள்ளனர். இதில் 90 95 வீதமானவர்கள் பாதுகாப்பு தரப்பால் கடத்தப்பட்டு காணாமல் போனதாக கூறப்படுகிறது. காணாமல் போகச்செய்வதை குற்றவியல் சட்டமாக்க வேண்டும். எதிர்காலத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல், கடந்த காலத்தில் நடந்த காணாமல் போன சம்பவங்களையும் உள்ளடக்கும் வகையில் செயற்படுத்த வேண்டும்.

## பொலிற்றிக்கல் கிரிக்கெட்



### பொங்கியெழு மனோகரா!


சில அணிகளில் சில வீரர்கள் இருப்பார்கள். அவர்கள் இருப்பது அணிக்கே தெரியாது. மொக்கை ஆட்டம் ஆடிக்கொண்டிருப்பார்கள். எப்பொழுதாவது திடீரென பொங்கியெழுந்து அதிரடி ஆட்டம் ஆடுவார்கள். ரெலோ கட்சியும் அண்மைக்காலமாக அப்படியானதுதான். அண்மைக்கால நெருக்கடிகளில் தியானத்தில் இருந்த கட்சி, கடந்தவாரம் தலைமைக்குழு கூட்டத்தை கூட்டி, புதிய பயங்கரவாத சட்டமூலத்திற்கு எதிராக பரந்துபட்ட போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

### பிரீ ஹிட் சிக்சர்

இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்கும் ஆயுதமாக, மனிதஉரிமைகளை காரணம் காட்டி ஜிஎஸ்பி சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் பயன்படுத்தியது. தற்போதைய கூட்டரசு, ஐரோப்பிய ஒன்றியத்தின் பந்தை நோ போலாக்கி, பிரீ ஹிட் சிக்சரடித்து மீண்டும் ஜிஎஸ்பியை பெற்றுள்ளது.

# “டெனீஸ்வரன் என்னுடன் கதைப்பதில்லை... அடுத்த மாகாணசபை தேர்தலிற்காக காத்திருக்கிறேன்”

## கொந்தளிக்கிறார் சிறிதரன் எம்.பீ



செல்வம்

தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதானிற்கு எதிராக இணையத்தளங்கள், சமூக ஊடகங்களில் அண்மையில் ஒருதரப்பினர் கடுமையான விமர்சனங்களை வைத்து வந்தனர். ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க உதவினார் என்பதும், அவரது உதவியாளர் மீதான பாலியல் இலஞ்ச குற்றச்சாட்டும் முக்கியமானவை. இவற்றின் உச்சமாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், சிறிதரன் விலைபோய் விட்டார் என பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தனர். இணையத்தளங்கள் பரபரத்துக்கொண்டிருக்க, வழக்கத்திற்கு மாறாக சைலண்ட் மோடில் இருக்கிறார் சிறிதான். இந்த குற்றச்சாட்டுக்கள், சர்ச்சைகள் பற்றியெல்லாம் விரிவாக பதிலளித்துள்ளார்.

**தீபம்: இலங்கைக்கு ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை வழங்க வேண்டும் என இலங்கையில் இருந்து ஒருகுழு சென்று வாதிட்டதாகவும், அதில் நீங்களும் அங்கம் வகித்தீர்கள் என்றும் இணையத்தளங்களில் சகட்டுமேனிக்கு விமர்சிக்கப்பட்டு கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இதுவரை அதுபற்றி வாய்திறக்காமல் இருக்கிறீர்களே?**

சிறிதரன்: கடந்த மாதம் 23ம் திகதி பாராளுமன்ற கணக்குழு, கோப்குழு சார்பாக பெல்ஜியம் சென்றிருந்தேன். தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு தேவைகளிற்காக நாடுகளிற்கு சென்று வருவது வழக்கம். அப்படியான ஒரு பயணத்தைதான் செய்தேன். ஐரோப்பிய பாராளுமன்றத்தில் இருக்கும் கணக்குகுழு, கோப்குழு, நிர்வாககுழு, பட்ஜெட்குழு, வரவுசெலவு திட்டகுழு உள்ளிட்ட சில குழுக்களின் செயற்பாட்டு முறை தொடர்பான விளக்கத்தை பெற்று, ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு வழங்குவதற்காக அழைக்கப்பட்டிருந்தோம்.

ஜேவிபியின் சுனில் ஹந்துன்னெத்தியின் தலைமையில் சென்றோம். பல கட்சிகளை சேர்ந்த ஒன்பது பேர் சென்றோம். மியான்மரிலிருந்தும் ஒன்பது பேர் வந்திருந்தனர். மூன்று நாட்கள் முழுமையாக அங்கிருந்து ஐரோப்பிய பாராளுமன்றம் எப்படி இயங்குகிறது, நடைமுறைகள் என்ன என்பதை அவதானித்தோம். 751 அங்கத்தவர்களை கொண்ட ஐரோப்பிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி இல்லாமல் குழுக்களின் அடிப்படையில் இயங்கி வருகிறது.

பல்வேறு குழுக்கள், அமைச்சரவை இருந்தாலும் தீர்மானங்களை எப்படி எடுக்கிறார்கள் என்பதை புரிய வைக்கவே இந்த ஏற்பாடு. அந்த பாராளுமன்ற செயற்பாடு ஒரு சமஷ்டி முறையிலானது. இலங்கையில் சமஷ்டி முறை ஏற்படுத்தப்படுவதால் இடையூறுகள் வராது என்பதை புரிய வைப்பதற்கான ஏற்பாடுதான் இந்த அழைப்பு.

ஜிஎஸ்பி பிளஸ் என்றால் என்ன என்பதை தெரியாதவர்கள்தான், நாங்கள் ஜிஎஸ்பியை பெற்றுக்கொடுத்ததாக பிழையாக கூறுகிறார்கள்.

**தீபம்: இலங்கைக்கு ஜிஎஸ்பி பிளஸ் சலுகை கிடைப்பதில் தனிப்பட்ட உங்கள் கருத்து என்ன?**

சிறிதரன்: நான் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர். இனப்படுகொலையை நேரடியாக கண்ட ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர். யுத்தகளத்தில் இருந்து இன்றுவரை மக்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவன். இப்படியான நான், ஜிஎஸ்பியை வழங்கி ஜெனீவா தீர்மானங்களை, மக்களிற்கு நடந்த அநியாயங்களை மறைக்க துணைபோகமாட்டேன்.

புலம்பெயர்ந்தவர்களின் முயற்சியால் தான் இந்த ஜிஎஸ்பி பிளஸ் வாக்கெடுப்பு நடந்ததாக சொல்கிறார்கள். இதில் சரி பிழை எனக்கு தெரியாது. ஆனால் இந்த வாக்கெடுப்பால் எங்களுக்கு பெரிய பின்னடைவு வந்துள்ளது. இலங்கைக்கு ஆதரவாக 419 உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர். சில புலம்பெயர்ந்த அமைப்புக்களின் ஆர்வக்கோளாறுதான் இப்படியான பிரச்சனைகளிற்கு காரணம்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்தந்த நாடுகளை சரியாக வெற்றிகொள்ளவில்லை. சில அமைப்புக்கள் இடதுசாரிகளை பிடித்திருந்தன. இவை பலனற்ற நடவடிக்கைகள். அந்த நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நெருங்கி பழகி இராஜதந்திரமாக செயற்படாததன் விளைவுதான் இலங்கைக்கு ஜிஎஸ்பி பிளஸ் கிடைத்தது.

**தீபம்: காணாமல் போனவர்கள், நில அபகரிப்பு விடயங்களில் முன்னர் தீவிரமாக குரல்கொடுத்தீர்கள். இப்போது அப்படியான தீவிரத்தை காண முடிவதில்லையே. கிளிநொச்சியில் கூட பல நாட்களாக காணாமல் போனவர்களின் உறவுகள் போராடிக் கொண்டிருக்கிறார்களே?**

சிறிதரன்: வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் அரசு மெத்தனமாக இருக்கிறது. சம்பந்தன் ஐயா, ஜனாதிபதியுடன் பேசியுள்ளோம். பேசிக்கொண்டிருக்கிறேன் என்கிறார். ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மருதங்கேணி, வவுனியா, திருகோணமலையில் மக்கள் பல நாட்களாக போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிற்கு நமது முழு ஆதரவும் உள்ளது. எங்களால் இயன்ற முழு முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறோம்.

காணாமல் போனவர்களை கண்டறிவதற்கான காரியாலயங்களை உருவாக்கினால் இந்த விவகாரத்தை தீர்க்கலாம்.

இராணுவ புலனாய்வு பிரிவு, பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு, கோத்தபாய உருவாக்கிய இரகசிய புலனாய்வு பிரிவுகள் இன்றும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவர்களிடம் காணாமல் போனவர்கள் இருக்கலாம்.

**தீபம்: புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகள் எந்தக்கட்டத்தில் உள்ளது?**

சிறிதரன்: இனப்பிரச்சனையை தீர்க்க வேண்டுமென்பதற்காக ஒரு அரசியலமைப்பை உருவாக்க முயல்கிறார்கள். ஆனால் தமிழர்களின் தேசிய அபிலாசைகள் இதில் இருக்குமா என்பது சந்தேகம்தான். தமிழர்கள் ஒரு தேசிய இனம். தனி பண்பாட்டை கொண்டவர்கள். வடக்கு கிழக்கு அவர்களின் தாயக பூமி என்பன அங்கீகரிக்கப்படுவதுதான் முழுமையான தீர்வாக அமையும். இந்த அடிப்படையிலான சமஷ்டி தீர்வைத்தான் தமிழர்களும் கேட்கிறார்கள்.

அரசியலமைப்பு உருவாக்க முயற்சியின் முன்னோடியாக எட்டுவரையான குழுக்கள் அமைத்து, அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் வரைபொன்றை தயாரித்துள்ளனர். ஆனால் இன்னும் வெளியிடவில்லை. இதை நான் பார்க்கவில்லை.

கடந்த வருடம் டிசம்பருக்கு முன்பாக அது சமர்ப்பிக்கப்படும் என சொல்லப்பட்டது. ஆனால் இந்த வருடம் 5 மாதம்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

முடியும்வரையும் அது சமர்ப்பிக்கப் படும் வாய்ப்பு தெரியவில்லை. அரசாங்கம் உளப்பூர்வமாக செயற்படவில்லை யென்பது இதிலிருந்து தெரிகிறது.

**தீபம்: நீங்கள் கிளிநொச்சியில் இருக்கிறீர்கள். வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தனது அமைச்சின் ஊடான அபிவிருத்தி திட்டங்களில்** வைத்து மக்களை வதைத்தவர்கள், அரச அதிகாரிகளை துஷ்பிரயோகம் செய்தவர்கள் இன்று பதவிகள் இல்லாமல் தெருவில் திரிகிறார்கள்.

இப்படி முகவரி இழந்தவர்களை தங்களது முகவரியூடாக கொண்டு செல்ல எங்களுக்குள்ளும் ஒருசிலர் முயற்சிக் கிறார்கள். எனக்கு இதில் அக்கறையில்லை. டெனீஸ்வரன் என்னுடன் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை. கிளிநொச்சியில் தனது அமைச்சின் மூலமாக செய்யும் வேலைத்திட்டங்களில் இந்த மாவட்ட பாராளுமன்ற உறுப்பினன் அல்லது இந்த மாவட்டத்தில் அபிவிருத்திக்குழு தலைவன் என்ற வகையிலும் எந்த தொடர்பையும் வைத்துக்கொள்வதில்லை. இதற்காக அவருடன் சண்டை பிடிக்க, வலிந்துபோய் கேட்டுப்பெற எந்த தேவையும் எனக்கில்லை. ஏனெனில் நாங்கள் சத்திய இலட்சியத்திற்காக பயணிப்பவர்கள்.

எங்களை காட்டிக்கொடுத்தவர்கள் அல்லது போராட்டகாலத்தில் எமக்கு எதிராக செயற்பட்டவர்கள் திருந்திவிட்ட தைபோல மாயாஜாலம் செய்ய, அவர்களை வைத்துக்கொண்டு டெனீஸ்வரன் அரசியல் செய்கிறார்.

ஆனால் இன்னும் ஒரு வருடத்தில் மாகாணசபை தேர்தல் இருக்கிறது. நாங்கள் அதற்காக காத்திருக்கிறோம்.

**தீபம்: வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சனைக்கு தீர்வு என்ன?**

**சிறிதரன்:** தென்பகுதியில் உள்ள பட்டதாரிகள் இராணுவம், கடற்படை, விமானப்படையில் பொலிசில் சேர்வதற்கு வாய்ப்புள்ளது. இதைவிட பல நிறுவனங் களில் வேலை செய்ய வாய்ப்புள்ளது. சிங்கள, முஸ்லீம் மக்களை அவதானித்தால் ஒன்றை அவதானிக்கலாம். சாதாரண அலுவலக ஊழியராகவோ, கூலித்தொழி லாளியாகவோ வேலைக்கு போவார்கள். ஆனால் நம்மவர்கள் கலாசாரரீதியான தாழ்வுமனப்பான்மை காரணமாக தகுதி வாய்ந்த வேலையை மட்டும் எதிர்பார்க் கிறார்கள்.

அரசு இவர்களிற்கான வேலையை கொடுத்திருக்கலாம். ஆனால் செய்ய தயங்குகிறது. வேலையில்லா பட்டதாரி களை பிழையாக வழிநடத்த அரசியல் கட்சிகள் முயற்சிக்கின்றன. வேலை கேட்டு நடக்கும் போராட்டத்தின் பின்னால் எமது அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். தென்பகுதி அரசியல்வாதிகளும் இருக்கி றார்கள். பாராளுமன்றத்தில் இந்த பிரச்ச னையை பேசி வருகிறேன். இவர்களுடன் நேரில் சென்று பேசியிருக்கலாம். ஆனால் இவர்கள் எங்களுடன் அணுகும் முறை விரோதமாக இருந்ததால் தவிர்த்து கொண்டேன்.

**தீபம்: வடமாகாண அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. இதை எப்படி பார்க்கிறீர்கள்?**

**சிறிதரன்:** அமைச்சர்கள் மீது கொண்டு வரப்பட்ட ஊழல் விசாரணை ஆரோக்கி யமானதல்ல. அதை அப்படி கையாண்டி ருக்க தேவையில்லை. அது எங்களை பலவீனப்படுத்தியுள்ளது. கூட இருந்த வர்களே விமர்சனங்களை வைத்து விசாரணை செய்வது, அந்த விசாரணையில் ஒன்றுமே இல்லையென வரும்போது வீணாண குற்றச்சாட்டால் காலமும், நிதியும் வீணாணதுதான் மிச்சமாகும். குற்றச் சாட்டுக்களை உறுதிப்படுத்தி நடவடிக்கை எடுக்கும் சூழல் அங்கு இல்லை.


**தீபம்: உங்களது வலதுகையாக செயற்படுபவர் வேழமாலிகிதன். அவர் மீது பாலியல் குற்றச்சாட்டு அண்மையில் பரவலாக முன்வைக்கப்பட்டதே? இதை ஆராய்ந்தீர்களா?**

**சிறிதரன்:** சிறிதரன் பதிவில்லாத இணையத்தளங்கள், முகநூலில் வைக்கப் படும் விமர்சனங்களிற்கு பதில் சொல்லத் தேவையில்லை. பல பெயர்களில் ஒருவரே முகநூல் வைத்திருக்கிறார். சொந்தப்பெயரில் வைத்திருக்க மாட்டார். இவர்கள்தான் இப்படியான பிரசாரங்களை செய்பவர்கள். இவர்களிற்கு பதில் சொல்ல, அக்கறைப்பட வேண்டியதில்லை.

> **ஊழல் விசாரணை ஆரோக்கியமானதல்ல. அது எங்களை பலவீனப்படுத்தியுள்ளது. கூட இருந்தவர்களே விமர்சனங்களை வைத்து விசாரணை செய்வது, அந்த விசாரணையில் ஒன்றுமே இல்லையென வரும்போது வீணாண குற்றச்சாட்டால் காலமும், நிதியும் வீணாணதுதான் மிச்சமாகும்.**

**உங்கள் அரசியல் போட்டியாளர் சந்திர குமாரையும் இணைத்து செயற்படுகிறார். உங்களிற்குள் ஏதாவது முரண்பாடுகள் உண்டா?**

**சிறிதரன்:** அபிவிருத்தி என்பது ஒரு மாயை. விடுதலைக்காக போராடும் இனத்தை திசைமாற்றும் சொற்பிர யோகம்தான் அபிவிருத்தி. அபிவிருத்தி என்ற பெயரில் மகிந்த, கோத்தாவுடன் ஒன்றாக இருந்து காட்டுச்சட்டங்களை



# கல்குடாவும் கணக்கறிஞரும் சில வெங்காயங்களும்!

அஸ்ரப் சிஹாப்தீன்



கல்குடாவின் முஸ்லிம் அரசியல்களத்தின் பேசு பொருள் இவ்வளவு சீக்கிரம் மாறி விடும் என்று நான் நினைத்திருக்கவில்லை. அதுவும் வெங்காயமாக!

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாத் தொகுதியில் ஸ்ரீ.மு.கா. சார்பில் களமிறக்கப்பட்ட கணக்காளர் சகோதரர் ரியாழ் அவர்களை ஒரு வெங்காயம் என வர்ணித்து முதலமைச்சர் மற்றும் சகோதரர் ஷிப்லி பாருக் போன்றோர் கலந்து கொண்ட ஸ்ரீ.மு.கா வின் கூட்டம் ஒன்றில் மற்றொரு மு.கா. போராளியான சகோதரர் சாட்டோ மன்ஸூர் பேசியிருந்த வீடியோக் காட்சியை பார்க்க நேர்ந்தது.

இந்த வர்ணிப்பை இரண்டு விதமாகப் பார்க்கலாம்.

01. ஸ்ரீ.மு.கா. போராளிகள் என்று கருதப்படுவோர் எதிர் அரசியல்வாதிக ளையும் அவர்களது ஆதரவாளர்களையும் தமிழ் மொழியில் உள்ள அனைத்துக் கெட்ட வார்த்தைகளையும் தகாத சொற்களையும் பொதுவெளியில் பிரயோகித்துத் திட்டி வருகின்றனர். அந்த வகையில் பார்த்தால் இது ஒரு மேட்டரே கிடையாது.

02. கல்குடா மு.கா. வின் ஏனைய அரசியல் செயற்பாட்டாளர்களை விட சகோதரர் ரியாழ் ஒப்பீட்டளவில் நல்லவர் மட்டுமல்ல படித்தவரும் கூட. கூடவே இருந்து அரசியல் செய்து விட்டு அன்றோ இன்றோ வெங்காயம் என்று சொல்வது முறையானது அல்ல, காரணம் அவர் புதிதாக அரசியலுக்குள் நுழைந்தவர்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், சகோதரர் ரியாழின் போதாமையை உணர்ந்து தான் முதலமைச்சரைப் பொதுக் கூட்டங்களுக்கு அழைத்து வந்ததாக சகோதரர் மன்ஸூர் கூறியிருக்கிறார். அவ்வேளையிலேயே அவரை ஒரு வெங்காயம் என்று உணர்ந்திருந்துந்தாலும் கூடவே இழுபட்ட காரணத்தால் சகோதரர் மன்ஸூரும் ஒரு வெங்காயம்தானே! சகோதரர் மன்ஸூர் மட்டுமன்றி சகோதரர் ரியாழுடன் இணைந்திருந்த அனைவரும் வெங்காயங்கள்தாம் என்பதையும் சகோதரர் மன்ஸூர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நமது முஸ்லிம் அரசியலில் ஒருவரைத் தூக்கிப் பிடிக்க வேண்டுமெனில் அதி உச்சத்துக்குத் தூக்கிப் பிடிப்பார்கள். கைவிடத் தீர்மானித்தால் தொப்பென்று கீழே விட்டு விடுவார்கள். இது ஸ்ரீ.மு.கா. அரசியலில் அதிகம். அதுதான் சகோதரர் ரியாழுக்கும் தற்போது நடந்துள்ளது.

ஸ்ரீ.மு.காவின் அரசியலுக்கு ஒருவர் வந்து விட்டால் அவரைப் போன்ற அதியுச்சத் தகுதி கொண்டவர் கிடையாது என்று புகழ்வார்கள். சகோதரர் ரியாழ் ஒரு கணக்காளர். நாட்டில் உள்ள பல்லாயிரம் கணக்காளர்களில் ஒருவர். அரசியலுக்குள் சகோதரர் ரியாழ் வந்தவுடன் அவரை கணக்கறிஞர் என்றனர். இன்று வரை அவரது ஆதரவாளர்களும் அப்படியேதான் அழைத்து வருகின்றனர். எனக்குத் தெரிந்த அளவில் சகுந்தலாதேவி என்று ஒருவரையும் ராமானுஜம் என்று ஒருவரையும்தான் கணக்கறிஞர் என்று உலகம் அழைத்து வந்திருக்கிறது. (ராமானுஜம் சரியா என்று சந்தேகம் உண்டு.)

கணக்கறிஞர் என்று புகழப்பட்டவர் அதிருப்தி கண்டதுடன் வெங்காயம் என்று வர்ணிக்கத் தொடங்கி விட்டனர். கணக்கறிஞர் என்று தன்னை வர்ணிப் பதை உணர்ந்தவுடனே அவர் ஜாக்கிரதை யாகியிருக்க வேண்டும். எனது கணிப்பில் அவர் பல விடயங்களை அரசியலில் கற்றுக் கொண்டார் என்று நினைக்கிறேன். கூட இருந்தவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? என்னென்ன நோக்கம் ஒவ்வொருவருக்கும் இருந்தது என்பதையெல்லாம் அவர் தெள்ளத் தெளி வாகப் புரிந்து கொண்டு விட்டார் என்று நான் யூகிக்கிறேன்.

அவரது அடுத்த கட்ட நகர்வு என்னவென்று சொல்ல முடியவில்லை.

இந்த விடயத்தை சகோதரர் ரியாழ் பெரிது படுத்தத் தேவையில்லை. சட்டை கிழியத்தான் செய்யும் என்று தெரிந்து கொண்டுதான் சண்டையில் இறங்க வேண்டும். அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்று போய்க்கொண்டே இருக்க வேண்டியதுதான்!




# மாபியாக்களின் பிடியில் நெல்லியடி பொதுச்சந்தை!

## விவசாயிகள், மக்கள் திண்டாட்டம்

நம்மாழ்வார்

விவசாயம்தான் இந்த தேசத்தின் அடிப்படை. தேசத்தின்முதுகெலும்பாக இருப்பவர்கள் விவசாயிகள் என பதவிக்கு வரும் ஒவ்வொரு அரசுகளும் சொல்கின்றன. என்றாலும் எந்த அரசும் விவசாயிகளை வாழ வைப்பதில்லை. நவீன பொருளாதாரக்கொள்கை, நிர்வாக செயற்பாடுகள் விவசாயிகளையும் விவசாயத்தையும் பிரித்து, இணையவே முடியாத பிளவை உண்டு பண்ணுபவைகளாக உள்ளன.

இது மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சி. இடதுசாரிய சிந்தனை மரபில் வளர்ந்த மைத்திரி பொலன்னறுவயில் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். இன்றும், வீட்டு தோட்டம் வைத்திருப்பதாக கூறுகிறார்.

அவர் சுகாதார அமைச்சராக இருந்த சமயத்தில், தனது வீட்டுத்தோட்டத்தில் விளைந்த மரவள்ளியுடன் ஒரு போஸ் கொடுத்திருந்தார். இன்றும் கூகிளில் மைத்திரியை தேடுபவர்கள் அந்த படத்தை காணலாம்.

நன்றாக விளைந்த மரவள்ளி அது.

நெல்லியடி பொதுச்சந்தைக்கு உற்பத்திகளை கொண்டு வரும் விவசாயிகள் மூன்று வகையினர். முழுநேர விவசாயி,பகுதிநேர விவசாயி, பொழுதுபோக்கு விவசாயி. கடைசி இரண்டு வகையினரும் அரச, தனியார் உத்தியோகம் அல்லது வெளிநாட்டு பிரஜைகளாக உள்ளனர். உற்பத்தி பொருட்களை தேடி நியாயமான விலையில் இவர்கள் சந்தைப்படுத்துவதில்லை. காலையில் அலுவலகம் செல்வதற்கு முன், வியாபாரிகளுடன் பேரம் பேசாமல் கிடைக்கும் விலையில் உற்பத்திகளை விற்றுவிடுகிறார்கள். இவர்களால்தான் முழுநேர விவசாயிகள் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

தேவைக்கு மிதமிஞ்சியது. தொழிற்முறை விவசாயியோ, வீட்டுத்தோட்டம் செய்பவரோ நிச்சயம் அதை சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்தே தீர வேண்டும். மைத்திரி அப்படி செய்திருக்கமாட்டார். அப்படி செய்திருப்பார் என வைத்தாலும், நல்லவேளையாக அவர் பொலன்னறுவயில் இருந்துவிட்டார்.

அவர் நெல்லியடியில் இருந்திருந்தால், அன்றுடன் விவசாயத்தை மூட்டை கட்டி வைத்திருப்பார். விவசாயிகள் நமது கண்கள் என இன்று பேசுவதைபோல பேசிக்கொண்டிருக்கமாட்டார். “பேசாமல் பிள்ளை குட்டிகளையாவது உருப்பட வையுங்கள்” என்றுதான் விவசாயிகளிற்கு அறிவுரை சொல்லியிருப்பார்.

அப்படியொரு பகல்கொள்ளை நெல்லியடி பொதுச்சந்தையில் நடக்கிறதென குமுறுகிறார்கள் விவசாயிகள். பிரதேசசபை நிர்வாகம், சந்தை குத்தகைகாரர்கள், உள் வியாபாரிகள் என சந்தை வர்த்தகத்துடன் தொடர்புபட்ட அத்தனை தரப்பினாலும் உறிஞ்சப்பட்டுக் கொண்டிருக்கிறது விவசாயிகளின் உழைப்பு. சந்தை நிர்வாகத்தை வழிப்படுத்த வேண்டிய அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இந்த பகல் கொள்ளையை வேடிக்கை பார்ப்பவர்களாக இருப்பதுதான் விவசாயிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

நெல்லியடி பொதுச்சந்தைக்கு தமது உற்பத்திகளை கொண்டு வருபவர்கள், தமது உற்பத்திக்கான நியாயமான விலையை பெற்றுக்கொள்ள முடியாது. இது மட்டும்தான் பிரச்சனையா என்றால்ஞ் இல்லை. நுகர்வோர் அதை கொள்வனவு செய்வதென்றால் ஆனை விலை, குதிரை விலை கொடுக்க வேண்டியுள்ளது. வெள்ளவத்தை சந்தையில் விவசாய உற்பத்திகள் விற்கப்படும் விலையை விட, நெல்லியடி பொதுச்சந்தையில் அதிக விலை விற்கப்படுகிறதென்றால், நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொள்ளுங்கள்.

தரகர்கள், உள் வியாபாரிகளின் கொள்ளை இலாப நோக்கம்தான் நெல்லியடி பொதுச்சந்தையை சார்ந்த வியாபாரிகளிற்கும், நுகர்வோருக்கும் பேராபத்தாக உருவெடுத்துள்ளது.

விவசாயிகள் சந்தைக்குள் வைத்து தமது உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாதென அண்மைக்காலம் வரை வியாபாரிகள் அடாவடி செய்தனர். எனினும், விவசாயிகள் சிலர் விட்டுக் கொடுக்காமல் போராடியதால் இன்று அந்த உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளது. என்றாலும், விவசாயிகளின் விற்பனையில் குழப்பத்தை ஏற்படுத்தும் காரியங்களை வியாபாரிகள் செய்கிறார்கள் என குற்றம்சாட்டுகிறார்கள் விவசாயிகள்.

கடந்தவருடம்வரை நெல்லியடி பொதுச் சந்தையில் காட்டுத் தர்பார்தான் நடந்ததென்கிறார்கள். விவசாயிகள் உற்பத்திகளை விற்பனை செய்ய முயன்றால் விபரீதங்கள் ஏற்பட்டது. ஒருங்கிணைப்பு குழுகூட்டம்,பிரதேசசபை,பிரதேசசெயலர் இணைந்து உருவாக்கிய குழுகூட்டங்களில் விவசாயிகள் உற்பத்திகளை விற்பனை செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றிய போதும், உள்வியாபாரிகள் அதை அனுமதிக்கவில்லை. பெண்ணொருவர் தனது உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்ய முயன்றபோது, பொருட்களை தட்டிவிட்டு வியாபாரிகள் அடாவடியில் ஈடுபட்டனர்.

இந்த விவகாரத்தில் பிரதேசசபை, அப்போதைய சந்தை குத்தகைக்காரர், பொலிசார் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து பாதிக்கப் பட்டவர்கள் உள்ளூராட்சி ஆணையாளர், அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ்மாவட்ட பொலிஸ் அத்தியட்சர் உள்ளிட்டவர்களிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். இதன்பின்னரே ஆமை வேகத்தில் நெல்லியடி பொதுச்சந்தையில் சில மாற்றங்கள் நடந்தன.

முக்கியமாக சந்தைக்கு வரும் பொருட்களை நிறுவையிட இலத்திரனியல் தராசு மாற்றப்பட்டது. முன்னர் இருந்த இரும்பு தாராசில் 1.5 2 கிலோகிராம் வரையில் குறைவாக நிறையிடப்பட்டு வந்தது. புதியவர்கள் என்றால் 4 கிலோ அளவில் வெட்டப்படுவதாக விவசாயிகள் கூறுகிறார்கள். அதுதவிர, கொண்டுவரப்படும் பொருளின் நிறையை தராசில் நிற்பவர் ஆளுக்கு தகுந்தது போல மாற்றி பதிவிட்டு வந்தனர். இப்போது இலத்திரனியில் தராசு மாற்றப்பட்டதன் பின்னர் இந்த பிரச்சனை தீர்க்கப்பட்டுள்ளது.

ஆரம்பகால சந்தை நடைமுறையில் ஏற்பட்ட மாற்றம்தான் இந்த கோளாறிற்கு காரணம். அதுவரையிருந்த சந்தைமுறை விடுதலைப்புலிகளின் காலத்தில் மாற்றமடைந்தது. இந்த சமயத்தில் உற்பத்தியாளர்கள் நட்டமடைவதில்லை. உற்பத்தி பொருட்கள் மேலதிகமாக விரயமாகாமல் புலிகள் கொள்வனவு செய்தனர். ஒரே கொள்வனவு விலை தீர்மானித்து,

நெல்லியடி சந்தை விலை என பத்திரிகைகளில் ஒரு குறிப்பு வரும். இது மக்களை ஏமாற்றும் வித்தையென்கிறார்கள் விவசாயிகள். நேற்றைய விலை என பத்திரிகைகளில் ஒரு விலை வரும். அது நேற்றைய விற்பனை விலை. அனேகமாக கவர்ச்சிகரமான விலைதான் வெளியிடுகிறார்கள். நல்ல விலையில் கொள்வனவு செய்வார்கள் என உற்பத்தியாளர்கள் சென்றால், “அது நேற்றைய விலை. இன்று மலிந்துவிட்டது” என குறைந்த விலையில் கொள்வனவு செய்கிறார்கள். கவர்ச்சிகரமான விலையை குறிப்பிட்டு, உற்பத்தியாளர்களை சந்தையை நோக்கி வரவைக்கவே இந்த உத்தியை பாவிப்பதாக சொல்கிறார்கள்.

பத்திற்கு ஒன்று கழிவு, தராசு வெட்டல் முறைக்கு எதிராக உயரதிகாரிகளிற்கு கடிதம் ஒன்று தயார் செய்தபோது, நெல்லியடியை சுற்றியுள்ள பல விவசாய அமைப்புக்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. விவசாயிகளிற்கு தமது உரிமைகளை பெற்றுக்கொள்ளும் விழிப்புணர்வின்மைதான் இந்த சிக்கலிற்கு காரணம் என்கிறார்கள்.

உள்வியாபாரிகள்ளும் புலிகளும் அந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்தனர். அப்போதுதான் பத்திற்கு ஒன்று கழிவுமுறை வந்தது. பத்திற்கு ஒன்று கழித்து, வியாபாரியின் மொத்த விற்பனையின் 15% புலிகளிற்கு கொடுக்க வேண்டும்.

பத்து கிலோவிற்கு ஒரு கிலோ கழிவு. மண்ணிற்குள் விளையும் அனைத்திற்கும் இந்த கழிவுமுறை இருந்தது. அறுவடை செய்த வெங்காயம் ஓரிரு நாட்களில் விற்கப்பட்டாலே இந்த விதிமுறைக்கு பொருத்தமானது. சில மாதங்களின் பின் வெங்காயம் விற்பவரிற்கு இது அநீதி. நெல்லியடியில் இதுதான் நடக்கிறது.

விவசாயிகளின் போராட்டத்தின்பின் அந்த நடைமுறை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், பிரச்சனையாகும் என கருதுபவர்களிடம் மட்டுமே கழிக்கப்படாமலிருக்கிறது. மற்றையவர்களிடம் இன்றுவரை கழிக்கப்பட்டு கொண்டேயிருக்கிறது. இது சர்ச்சையாகும் சமயங்களில் சில நாட்கள் மட்டும் சீராக இயங்கும். பின்னர் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிடும்.

கழிவுமுறையை பிரதேசசபையும் மறைமுகமாக ஊக்குவிப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். சந்தை வாடகையை வியாபாரிகளிடம் அதிகமாக அறவிட, இப்படியொரு சலுகையை கொடுக்கிறார்கள் என்கிறார்கள். புலிகள் தமது

தொடர்ச்சி அடுத்த பக்கம்...



டாக்சியில் சென்று கொண்டிருக்கும் போது, பின்னிருக்கையில் அமர்ந்திருந்த பயணி ஓட்டுனரிடம் ஏதோ ஒன்றைக் கேட்பதற்காக முதுகில் லேசாகத் தட்டிக் கூப்பிட்டார்.

அவர் அப்படித் தட்டிக் கூப்பிட்டவுடன் அதில் நிலை குலைந்து போனார் அந்த ஓட்டுநர்.

அந்தக் கார் சாலையில் சென்று கொண்டிருந்த இன்னொரு காரை நெருங்கி மோதாமல் தப்பித்தது, அடுத்து வந்த ஒரு லாரியின் மீது இடிக்காமல் தப்பித்தது. கடைசியாக அந்தக் கார் ஒரு மரத்தின் மீது மோதுவது போல் சென்று நின்றது.

சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது.

அதிர்ந்து போன பயணி ஓட்டுநரிடம், "என் உயிரே போகும் அளவுக்கு என்னைக் கலங்க வைத்து விட்டாயே?'' என்றார்.

ஓட்டுநர் அமைதியாக இருந்தார்.


பின்னர் அந்தப் பயணி ஓட்டுநரிடம், "தங்கள் முதுகில் லேசாகத் தட்டியது இவ்வளவு பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை'' என்றார்.

உடனே ஓட்டுனர், "இல்லை, இது என்னுடைய தவறுதான். இன்று தான் முதன்முதலாக நான் டாக்சி ஓட்டுகிறேன்''

அதைக் கேட்ட பயணி, "அப்போ, உங்களுக்கு வாகனம் ஓட்டவேத் தெரியாதா?'' என்று கேட்டார்.

உடனே ஓட்டுநர், "இல்லையில்லை, நான் கடந்த பத்தாண்டுகளாக ஓட்டுநராகத்தான் இருக்கிறேன். நான் இதற்கு முன்பாக பிணங்களை எடுத்துச் செல்லும் வேனில் ஓடிக் கொண்டிருந்தேன்"

## நகைச்சுவை



ஒரு ஊரில் ஒரு ஆட்டிறைச்சிக் கடை இருந்தது.

ஒவ்வொரு நாளும் கடையை மூடப்போகும் சமயம், ஒரு தலைக்கனம் பிடித்தவன் அக்கடைக்கு வந்து, கடைக்காரரிடம், "முதலாளி, மூளையிருக்கா...?" என்று கேட்பான்.

அதற்கு முதலாளியோ, மூளை இல்லை என்றவுடன், "என்ன முதலாளி, இன்றும் உங்களிடம் மூளை இல்லையா?'' என்று கிண்டலுடன் கேட்டுவிட்டுச் செல்வான்.

இதையே வழக்கமாகக் கொண்டிருந்த அவனை, எப்படியாவது தானும் மட்டம் தட்டிப் பேச வேண்டும் என்று அந்தக் கடைக்காரரும் நினைத்துக் கொண்டிருந்தார்.

நாட்கள் நகர்ந்தன.

ஒருநாள் அக்கடைக்காரருடன் நன்கு படித்த நண்பர் ஒருவர் அக்கடைக்கு வந்தார்.

அவரிடம் அந்தக் கடைக்காரர் தினமும் ஒருவன் தன்னைக் கேலி பேசி வருவதைச் சொன்னார்.

இதைக் கேட்ட கடைக்காரரின் நண்பர், "அட இவ்வளவு தானே, இதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறினார்.

கடையை மூடப்போகும் சமயம், அந்தத் தலைக்கனம் பிடித்தவன் வந்து, முதலாளியிடம், "முதலாளி மூளையிருக்கா...?" என்று வழக்கம் போலக் கேட்டான்.

அதற்குக் கடைக்காரரின் நண்பர் அவனைப் பார்த்து, "இதுவரை வந்த அனைவருக்கும் மூளை இருந்தது, ஆனால் துரதிஷ்டவசமாக உங்களுக்குத்தான் இல்லை" என்றான்.

தலைக்கனம் பிடித்தவனுக்கு உச்சந்தலையில் யாரோ குட்டியது போலிருந்தது. நண்பனின் சாதுர்யமான பதிலைக் கேட்ட கடைக்காரர் முகத்திலும் மகிழ்ச்சி தெரிந்தது.

---

வரிக்காக வியாபாரிகளுக்கு கொடுத்த பத்திற்கொன்று கழிவை, அதிகரித்த வாடகையை பெற பிரதேசசபை கண்டும் காணாமலும் விடுகிறதா?

இன்றைய நிலவரப்படி உற்பத்தியாளர்களிடம் இருந்து ஐம்பது ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படும் மரவள்ளி கிழங்கு நூறு ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. மரவள்ளி நட்டு ஒன்பது மாதத்தின் பின் அறுவடை செய்யும் வியாபாரியின் நிலைமையையும், சந்தை மாபியாக்களின் கொள்ளை இலாபத்தையும் புரிந்து கொள்ளுங்கள். எண்பது ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படும் முருங்கைக்காய் இருநூற்று நாற்பது ரூபாவிற்கு விற்பனையாகிறது. கொழும்பில் இருநூறு ரூபாவிற்கு முருங்கைக்காய் வாங்கலாம். முப்பது ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படும் வாழைப்பழம் தொண்ணூறு தொடக்கம் நூறு ரூபா வரை விற்கப்படுகிறது.

விவசாயிகளை மோசமாக வஞ்சிக்கும் சந்தைமுறை இது. மரக்கறி உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாவிட்டால், தானிய உற்பத்திக்கு மாறப் போவதாக விவசாயிகள் கூறுகிறார்கள். அப்படி நடந்தால், நெல்லியடி பிரதேசத்தில் மரக்கறி விலை பவுண் விலையாகும்.






முன்னர் கொள்வனவிற்காகவெளியிடங்களில்இருந்தும்வர்த்தகர்கள் நெல்லியடிக்கு வந்தனர். இன்று யாரும் வருவதில்லை. இதற்கு காரணம் உள்ளூர் தரகர்கள் என்கிறார்கள். இப்பொழுது தரகர்கள் மூலம் அவர்களிற்கு விவசாய உற்பத்திகள் கிடைக்கின்றன.

விவசாயிகளின் உற்பத்தி செலவு கண்மண் தெரியாத அளவிற்கு உயர்ந்துள்ள நிலையில், விவசாய உற்பத்திகளை பொருத்தமான விலையில் விற்க முடியாமலிருப்பது விவசாயிகளிற்கு செய்யும் அநீதி. விவசாயம் செய்வதில் உள்ள சிரமத்தை ஒரு விவசாயி சொன்னார். தோட்டத்தில் மாடு கட்ட முடியாது. களவுபோய்விடும். ஒரு லோட் எரு முப்பத்தெட்டு ஆயிரம் ரூபா. இந்த விலைக்கு எரு வாங்கி விவசாயம் செய்து, நெல்லியடி சந்தைக்கு உற்பத்திகளை கொண்டுவரும் விவசாயி எப்படி வாழ்வது?

உள்ளூர் விவசாயிகளிடம் கழிவு வெட்டுபவர்கள், தம்புள்ள, வலிகாமம், தென்மராட்சி பிரதேசங்களில் இருந்து மரக்கறி கொண்டுவரும் வியாபாரிகளிடம் கழிவு வெட்டுவதில்லை. அவர்கள் தங்குதடையில்லாமல் சில்லறை வர்த்தகத்திலும் ஈடுபடுகிறார்கள். இது சட்டமீறல்.

அந்த சமயத்தில் கரவெட்டி பிரதேச செயலர், "நீங்கள் என்ன விலைக்கென்றாலும் வாங்கி விற்பனை செய்யுங்கள்" என கூறி, வியாபாரிகளின் காட்டுதர்பாரிற்கு வழியேற்படுத்தி கொடுத்தார் என வருத்தத்துடன் கூறுகிறார்கள் விவசாயிகள். அதுதவிர, விவசாயிகள் தமது உற்பத்திகளை வியாபாரிகளிடம்தான் விற்பனை செய்ய வேண்டுமென்றும் உத்தரவிட்டு, விவசாயிகளின் வயிற்றில் அடித்தார் இந்தபிரதேசசெயலர்.

தற்போதைய நெல்லியடி சந்தையின் நிர்வாகமுறை கஸ்ரப்படும் விவசாயிகளிற்கு அனுகூலமாக இல்லை. நோகாமல் நொங்கு குடிக்கும் வியாபாரிகளிற்கு சாதகமானது. இது அங்கு வியாபார மாபியாவாக உருவெடுத்து, உற்பத்தியாளர்கள், நுகர்வோரிடம் இருந்து பகல்கொள்ளையிடுகிறது.

இதை தடுக்க, விவசாயி வாழ, மக்கள் நியாயமான விலையில் பொருள்களை கொள்வனவு செய்ய உழவர் சந்தையே பொருத்தமானது. உற்பத்தியாளனிற்கும் நுகர்வோருக்கும் இடையில் பாலமாக இருப்பவைதான் சந்தை. புறோக்கர்களை உருவாக்குபவை அல்ல.

---

தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்.

தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.

ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 5 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.

விக்கி learners வழங்கும் 2500 ரூபா பெறுமதியான கட்டண கழிவினை வெல்வதற்கு அரியசந்தர்ப்பம்.

நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.

முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.

முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

Issue Number 93.


Full Name ..........................................

Address ..........................................

Nic ..........................................

Phone Number ..........................................








# மக்கள் பிரதிநிதிகளிற்காக காத்திருக்கும் குளுவினமடு மக்கள்

திலக்ஸ் ரெட்ணம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும் பகுதியுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளே. இங்குள்ள கிராமங்கள் பல இன்னும் குறைபாடுகளுடனே உள்ளன. போக்குவரத்து, குடிநீர், மின்சாரம், கல்வி, வீதி, யானைத் தொல்லை போன்ற பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்க்கையை கொண்டு செல்லும் பல்வேறு கிராமங்களில் ஒன்றே, மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட குளுவினமடு கிராமம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட குளுவினமடு கிராமம் வயல்வெளிகளையும், புற்தரைகளையும், மண்மேடுகளையும் ஆங்காங்கே வீடுகளையும், சிறுசிறு குளங்களையும், ஆலயங்களையும் கொண்டமைந்த அழகிய கிராமம். 229 குடும்பங்களைச் சேர்ந்த 772 நபர்கள் வசிக்கின்ற பிரிவில் க.பொ.த(சா.த) பாடசாலை ஒன்றும் தரம் 5 வரையான பாடசாலையொன்றும் இரு பாலர் பாடசாலைகளும் உள்ளன. இப் பிரதேசத்து மக்களது வாழ்வாதர தொழிலாக விவசாயமும், விலங்கு வளர்ப்பும், கூலித்தொழிலும் உள்ளது. ஒரு சிலரே அரச உத்தியோகத்தர்கள்.

பிரதேசத்தின் நகரான கொக்கட்டிச்சோலையில் இருந்து எட்டு கிலோமீற்றர் தூரத்தில் அமையப்பெற்றுள்ள இக்கிராமத்தின் மக்கள் சகலவிதமான அலுவல்களை மேற்கொள்வதற்கும் கொக்கட்டிச்சோலைக்கு செல்லுகின்றனர்.

கல்வியை இழந்தவன் கண்களை இழந்தவனாகின்றான். அவ்வாறான கல்வியை பெற்றுக் கொள்வதில் இப் பிரதேசத்து மாணவர்கள் அதிக அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயற்பாட்டாலும் நகர்புற மாணவர்களுக்கு கிடைக்கின்ற வசதிகளும், வாய்ப்புக்களும் இம் மாணவர்களுக்கு கிடைக்காமை குறித்து ஆதங்கப்படுகின்றனர்.

பாடசாலையையே நம்பி கல்வி கற்கின்ற இம் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களுக்கான வசதிகளும் இல்லை என கூறுகின்றனர். மறுபுறத்தில் பாடசாலையிலும்மிக முக்கியமான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. அரச தொழிலுக்காக அரசாங்க திணைக்களத்தினால் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களை முதன்மைப்படுத்தி, திறமைச்சித்தி இருக்க வேண்டும் என விண்ணப்பங்களில் கோரப்படுகின்றது. ஆனாலும் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு இன்றும் ஆசிரியர்கள் தங்களது பாடசாலைக்கு நியமிக்கப்படவில்லை என மாணவர்கள் கூறுகிறார்கள். எதிர்கால தொழில்துறைக்கு தங்களை ஈடுகொடுக்க முடியாமல் தங்களது தாய் தந்தையர்கள் மேற்கொள்ளும் தொழில்களையே மேற்கொள்ள வேண்டியிருக்கும் என வேதனையுடன் குறிப்பிடுகிறார்கள்.

நகர்புறப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதைப்போன்று அனைத்துபாடங்களுக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால் நாங்களும் அவர்களைப் போன்று சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வோம். ஆனால் உரிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமையால் சிறந்த பெறுபேற்றை பெறுவது எப்படி என மாணவர்கள் கேட்கிறார்கள். அதுதவிர, பாடசாலையில் கட்டிடவசதி இன்மையால் தற்காலிக கூடாரத்திலேயே மாணவர்கள் கல்விகற்று வருகிறார்கள்.

கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையிலும் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தி பெறுகின்றனர். ஆனாலும் இவர்களது பெறுபேற்று அதிகரிப்புக்கு ஆசிரியர் இன்மை பெரிய பிரச்சினையாகவே இருக்கிறது. இதனால் பாதிக்கப்படுவது மாணவர்களும், அவர்களது குடும்பங்களுமே. சகலவாய்ப்புக்களும் வழங்கப்படும் பட்சத்தில் இம்மாணவர்களும் நாளை சிறந்த கல்விமான்களாக உருவாகி எதிர்காலத்தில் அவர்களது கிராமத்தை முன்னேற்றுவர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## போக்குவரத்து வசதி

பாடசாலைகள், வயல்நிலங்கள், ஆலயங்கள், கிளினிக் நிலையம் என பல திணைக்களங்களின் அலுவலகங்களும் இக்கிராமத்தில் அமையப்பெற்றாலும் போக்குவரத்துவசதி ஏற்படுத்தபடவில்லை என்பது இம்மக்களின் பெரும் குறையாகவிருக்கின்றது. பொதுச்சந்தை, வைத்தியசாலை, தபால்நிலையம், வங்கிகள், பிரதேச செயலகம், பிரதேசசபை, கமநலசேவை நிலையம் என அனைத்து தேவைகளிற்கும் கொக்கட்டிச்சோலைக்கே செல்ல வேண்டியுள்ளதாகவும், ஆனால் எவ்விதமான பேரூந்து போக்குவரத்தும் இல்லாமையால் 8 கிலோமீற்றர் தூரம் நடந்துதான் செல்லுவதாகவும், சிலநேரங்களில் வீதியால் செல்லுகின்ற உழவு இயந்திரங்களில் ஏறி செல்வதாகவும் குறிப்பிடுகின்றனர். வைத்தியசாலைக்கு நோயாளி ஒருவரை கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமத்தை அனுபவிப்பதாகவும் மாணவர்களும் அதிக தூரத்திற்கு கால்நடையாக காட்டுப் பிரதேசத்திற்குள்ளால் நடந்து செல்லுகின்றதாகவும் கூறுகின்றனர்.

## குடிநீர் நீர்


மனிதனதுஇருப்புக்கு குடிநீர் அத்தியாவசியமானது. இக் கிராமத்து மக்கள் வாழுகின்ற சூழல் மேட்டுப்பகுதியாகவும், மலைப்பகுதியாகவும் இருக்கின்றமையினால் கோடைகாலங்களில் கிணறுகள் அனைத்தும் நீரின்றி வற்றுகின்ற நிலையிருக்கின்றது. இதனால் குடிப்பதற்கு, குளிப்பதற்கு பெரும் சிரமங்களை வருடாந்தம் இம்மக்கள் எதிர்நோக்கி வருகின்றதாக கூறுகின்றனர். கடந்தகாலங்களில் 6ம் மாதத்திலிருந்து 10ம்மாதம் வரைநீர் பிரச்சினை ஏற்படுவதாகவும் இவ்வருடம் அதிக வெப்பம் ஏற்பட்டதினால் 4ம் மாதம் இறுதிப்பதியில் இருந்தே கிணறுகள், குளங்கள் என்பவற்றின் நீர் வற்றியுள்ளதனால் அதிக தூரம் காட்டுப் பகுதியினூடாக சென்று நீரை பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இக்கிராமத்தின் சில பகுதிகளுக்கு குழாய்கள் ஊடாக குடிநீர் வழங்கப்பட்டாலும், பல இடங்களிற்கு இன்னும் அந்த வசதி செய்து கொடுக்கப்படவில்லை.


கிராமத்தில் அமைந்துள்ள வீதிகளில் பல கிறவல் வீதிகளே. ஒருசில கொங்கிறீட் வீதிகளும் உள்ளன. மாரிகாலத்தில் அதிக வெள்ளம்; அடித்து சென்று பலவீதிகள் பெரிய குழிகளாக மாறுயுள்ளதாகவும், இதனால் போக்குவரத்து செய்ய முடியாமல் அவதியுறுவதாகவும் மக்கள் கூறுகிறார்கள். விவசாயத்தை அதிகமாக கொண்ட இந்த மக்கள், தமது விளைச்சல் நெல்லை இந்த வீதியால் ஏற்றிச்செல்வது பலத்த சிரமமான காரியமென்கிறார்கள்.


## யானைத் தொல்லை

யானையின் தாக்குதலினால் அடிக்கடி பாதிப்படையும் கிராமங்களில் ஒன்றாக குளுவினமடு கிராமமும் உள்ளது. பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்படுவதுடன், உயிரிழப்புக்களும் இடம்பெற்றுள்ளதாக கூறுகிறார்கள். மிகுந்த அச்சத்தின் மத்தியில் வாழ்க்கையை கொண்டு செல்வதாகவும் இரவுநேரங்களில் கண்விழித்திருந்தே குடும்பத்தை காப்பற்ற வேண்டியிருப்பதாக பெரும்பாலானவர்கள் கூறுகிறார்கள். இந்த கிராமத்து இளைஞர் ஒருவர் வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு வீடுவந்து சிலநாட்களில் யானையின் தாக்குதலினால் உயிரிழந்த சம்பவமும் பதிவானது.

இவ்வாறான பல்வேறு குறைபாடுகளுடன் தமது கிராமம் இருந்தாரும், தங்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் இங்கு வந்து இன்னும் பார்த்து, தீர்வை பெற்றுத்தரவில்லை என்ற அங்கலாய்ப்பு கிராமத்தில் இருப்பதை அவதானிக்க முடிந்தது.







# பேஸ்புக்கில் பெண்கள் எப்படியெல்லாம் கவிழ்கிறார்கள்?

ஜோதா அக்பர்

நிலாவறை கிணற்றின் ஆழத்தையும் அளந்து விடலாம் நம்மூர் பெண்களின் மனதை அறிய முடியாது. உள்ளத்தில் உள்ளதை வெளியில் தெரியாமல் நடிப்பதில் கில்லாடிகள். அவர்களின் மனதில் என்ன இருக்கிறதென தெரியாமலே ஆண்களின் பாதி ஜீவன் போய்விடுகிறது. இப்படி நான் சொல்லவில்லை. நமது கவிஞர்கள் எழுதினார்கள். இப்போது பையன்கள் பேஸ்புக்கில் தினம்தினம் போஸ்ற் போட்டு வறுத்தெடுக்கிறார்கள்.

உண்மைக் காதலன், உணர்வுள்ள காதலன், அன்புள்ள இதயம், துடிக்கும் மனது, காதலின் வரி என விதவிதமான பெயரில் ஆளுக்கொரு லைக் பேஜ் ஆரம்பிக்கிறார்கள். காதலிக்கும் பெண்ணுக்கு புரியும் விதமான கவிதை (ஏதோ ஒரு கருமத்தை எழுதிவிட்டு, அதை கவிதை என்றுதான் பாஸ் சொல்கிறார்கள்) எழுதி ரக் (TAG) பண்ணுகிறார்கள். அட.. அதை அந்த பெண்ணுக்கு மட்டும் ரக் பண்ணணடா பன்னி, எதற்காக நமது இரத்தத்தை எடுக்கிறாய் என மற்றவர்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கும் விதமாக ஊரிலிலுள்ள, உலகத்திலுள்ள நண்பர்களிற்கு ரக் பண்ணி கொலைவெறி ஏற்றுவார்கள்.

முன்னர்தான் பையன்கள் காதலில் தோற்றால் தாடி வளர்க்கிறார்கள். இப்போது காதலித்த பின்னர்தான் தாடி வளர்க்கிறார்கள். காரணம் கேட்டால், தாடி வைச்ச படத்தை பேஸ்புக்ல போட்டால் லவ் பெயிலியரோ என பெண்கள் நினைத்துவிடுவார்கள் என்ற எச்சரிக்கையுணர்வாம். ஆனால், காதலித்தும் தாடி வைத்துதான் புறபைல் பிக்சர் போடுகிறார்கள். கேட்டால் அதற்கும் விளக்கம் வைத்திருக்கிறார்கள். தெரியாதவர்கள் தயவுசெய்து விளக்கம் கேட்டுவிடாதீர்கள். "அமரேந்திர பாகுபலி யாகிய நான்..." என ஆரம்பித்து தெறித்து ஓடவிடுவார்கள்.

இன்றைய பையன்களின் இன்னொரு இயல்பு காதலி திரும்பி பார்க்கா விட்டால்.. அதிகமேன், யாரையாவது ஒரு பெண்ணை மனதில் நினைத்த முதல் நாளே பேஸ்புக்கில் போட்டுவிடுகிறார்கள்.

'மாலினி இதை சொல்லியே ஆகணும்', 'நீ அழகாய் இருக்கிறாய் என நினைக்கல. நான் உன்னை லவ் பண்ணல. ஆனா எங்க இதெல்லாம் நடந்திருமோ என்று பயமா இருக்கு" என்றோ, Feeling love என்றோ ஊருக்கே டமாரம் அடிக்கிறார்கள்.

இதை பார்க்கும் நண்பர்கள் நாலுபேர், என்ன மச்சி பத்திக்கிச்சா, நடக்கட்டும் நடக்கட்டும், மலிஞ்சால் கத்தரிக்காய் சந்தைக்கு வரும்தானே என்றோ அக்கறை காட்டுவார்களாம். விடிய விடிய இவர்களின் வில்லங்கம் நடக்கும்.

போதாததற்கு மணிரத்தினம் பட ஹீரோ மாதிரி வானத்தை பார்த்துக் கொண்டோ, அரையிருட்டில் சிரித்துக்கொண்டோ ஒரு போட்டோ போடுவார்கள். காதலில் விழுந்துவிட்டதை சிம்பொலிக்காக சொல்கிறார்களாம். முன்னர்தான் காதலை சொல்ல பெண்ணுக்கு முன்னாலும் பின்னாலும் சுற்றித்திரிய வேண்டும். இப்போது அப்படியல்ல. அந்தப் பெண்ணை ரக் பண்ணியே கொல்கிறார்கள். அல்லது இவர்களின் கவிதையின் கொடுமை தாங்க முடியாமல் காதலுக்கு சம்மதம் சொல்லிவிடுகிறார்கள்.

இந்த கொடுமையை கூட சகித்து கொள்ளலாம். இவர்கள் சிலவேளைகளில் விஸ்பரூபம் எடுப்பார்கள். "காதலும் உச்சாவும் ஒன்று. வரும்போதுதான் முட்டிக் கொண்டு வரும். அப்புறம் ஒன்றுமே இருக்காது" வகை கன்னாபின்னா தத்துவங்கள் எழுதுவார்கள்.

இது ஒருவகையென்றால், பெண்களை உசார் பண்ண வேறு சில டெக்னிக்குகளை பையன்கள் பாவிக்கிறார்கள். நாள் முழுக்க இருந்து பேஸ்புக்கில் மேய்ந்து, தமது நண்பர்கள் வட்டாரத்தில் இல்லாத வெளியாள் ஒருவரின் நல்ல போஸ்றை சுட்டு வந்து, தமது போஸ்ற் போல தட்டி விடுவார்கள். "மச்சி சொல்லவேயில்லை. உனக்குள்ள ஆவி புகுந்திட்டுதாடா" என நண்பர்கள் வீடு தேடிவந்து உலுப்புவார்கள். வாயைத் திறந்தால் வில்லங்கம் என சத்தமில்லாமல் இருந்துவிடுவார்கள். இப்படி சுடும்போது அடிக்கடி ஆங்கிலத்திலும் சுடுவார்கள். அதாவது அறிவுஜீவியாம் தான்.


அல்லது ரெண்டிங்கில் உள்ள புத்தகத்தை படிப்பதாக போஸ்ற் செய்வார்கள். விசாரித்தால்தான் அதையெழுதியது திருவள்ளுவரா, வைரமுத்துவா என கொன்பியூஸ் ஆவார்கள்.

இன்னும் சிலர், அநியாயத்துக்கு போராளி வேசம் போடுவார்கள். எதுஎதற்கு பொங்குவது என்றில்லாமல் அறக் கத்தியை 360 பாகைக்கும் சுழற்றுவார்கள். முள்ளிவாய்க்கால் தொடக்கம் முன்வீட்டில் நடந்த வேலித்தகராறு வரை அனைத்திற்கும் பொங்குபொங்குகென பொங்குவார்கள். இத்தனை பொங்கலிலும், நம்மஆள் லைக் பண்ணியிருக்கிறதா என்பதை கண்காணித்து கொண்டிருப்பார்கள்.

வேறு சிலர் கருத்து கந்தசாமிகளாக இருப்பார்கள். காதலையும், ப்ரெண்ட் ரெக்குவெஸ்ற்றையும் அக்சப்ற் பண்ணாத பெண்களை கவிழ்க்க, இந்த உத்தியை கடைப்பிடிப்பார்கள். அந்தப் பெண்ணின் நெருங்கிய நட்பு வட்டத்தில் உள்ள அத்தனை பேரையும் நண்பர்களாக்குவார்கள். பிறகென்ன, இருபத்து நான்கு மணித்தியாலமும் பேஸ்புக் முன்னால் குந்தியிருப்பார்கள். அவர்கள் ஏதாவது ஸ்டேட்டஸ் போட்டால் போதும், அதற்கு கீழே நீட்டி முழக்கி கொமண்ட் அடிப்பார்கள். சிலர் சம்பந்தமேயில்லாமலும் வழிவார்கள். I'm happy. My first time cooking என ஒரு ரீ கப்பையோ, ஒரு சலாட் கப்பையோ, நூடில்ஸையோ வைத்து வெள்ளைக்காரி நினைப்பில் ஸ்டேட்டஸ் போடுவார்கள். சிந்துவெளியில் எப்படி தமிழர்கள் இருந்தார்கள், லெமூரியாவில் எப்படி லெக்கின்ஸ் இல்லாமலிருந்தது என கொமண்ட் அடித்து அலறவிடுவார்கள். இப்படி கொமண்ட் அடித்தால் பெண்கள் கவிழ்ந்து விடுவார்கள் என பையன்கள் நினைக்கிறார்கள்.

"காதலும் உச்சாவும் ஒன்று. வரும்போதுதான் முட்டிக்கொண்டு வரும். அப்புறம் ஒன்றுமே இருக்காது" வகை கன்னாபின்னா தத்துவங்கள் எழுதுவார்கள்.

இதையெல்லாம் விட மிக முக்கிய ஆயுதமாக பையன்கள் நினைப்பது லாரன்ஸின் றூட்டை. அம்மா சென்டிமென்ட், பெண்கள் என்றால் நமது கண்கள் சென்டிமென்ட்டை பாவிப்பார்கள். வெள்ளைக்காரி சேலை கட்டியபடி நல்லூருக்கு வந்தால், "உலகெல்லாம் பரவும் தமிழர் கலாச்சாரம். நம்மவர்கள் மறப்பதே வேதனை" என அசால்ட்டாக அடித்து விட்டு, கலாசார காவலர்கள் வேடமிடுவார்கள். இந்த றூட் வேர்க் அவுட் ஆகுமென பையன்கள் நினைக்கிறார்கள்.



# தமிழினி

## ஒருமுனை உரையாடல்

சென்ற இதழ் தொடர்ச்சி...

சாந்தி




அம்மாவிடம் நீ கையளிக்கப்பட்டாய். ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போல ஊடகங்கள் உன்னை மீண்டும் துரத்தத் தொடங்கியது. நீ நிம்மதியை இழந்து போனாய். ஆளாளுக்குக் கதையெழு தினார்கள். பழி சொன்னார்கள்.

'தமிழினியிடம் பேட்டியெடுக்க வேணும். உங்களோடை கதைக்கிறவாம்?' தீபச்செல்வன் தொடர்பெடுத்தான்.

'நான் அவவோடை கதைக்கிறேல்ல'. நீயும் நானும் கோபம் என்பது போல அவனுக்கு நடிக்க வேண்டியிருந்தது.

உன்பற்றி தீபச்செல்வன் வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு எவ்வித பதிலையும் கொடுக்கும் நிலையிலும் அன்று நானில்லை. நீ எப்படி அந்தரிப்பாயோ என்பது தான் தொடர் கவலையைத் தந்துகொண்டிருந்தது.

நீ மகளீர் அரசியல்துறையின் பொறுப் பாளராயிருந்த காலத்தில் ஒருநாள்கூட உன்னோடு பேசி அறியாதவன். தனது தங்கையை இயக்கம் இறுதி யுத்தத்தின் போது போராளியாக்கியதற்கு நீயே காரணம் என்றான். தன் தங்கையைக் கொண்டு போனவர்களைக் கண்டித்து தனது வலைப்பூவில் கவிதை எழுதினான். தனக்கென்று வரும் போது தீபச்செல்வனின் தியாக முகம் கோரமாயிருந்தது.

உனது தொலைபேசியலக்கத்தை புனர் வாழ்வு முகாமில் இருந்து பெற்றுக் கொண்ட தீபச்செல்வன் அம்மாவை தொலை பேசியில் அழைத்தான். சக்தி தொலைக் காட்சியில் வேலைசெய்து கொண்டிருந்த தீபச்செல்வன் ரூபவாகினி தொலைக் காட்சியில் இருந்து பேசுவதாக அம்மாவின் தொலைபேசிக்கு அழைத்தான்.

தமிழினியுடன் கதைக்க வேண்டுமென் றான். அப்படியொரு ஆள் இல்லையென்ற அம்மாவின் பதிலில் திருப்திப்படாதவன் சிவகாமியுடன் கதைக்கவென்றான். அப்படியும் ஒரு ஆளில்லையெனச் சொல்லி அம்மா தீபச்செல்வனை மட்டுமல்ல தொடர்பு கொண்ட எல்லோரின் தொடர்பையும் துண்டித்துக் கொண்டா.

அம்மாவிடம் கையளிக்கப்பட்ட நீ உனது ஊருக்குப் போகவில்லை. உனக்காக உனது துணைவனால் ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் நீ வாழத்தொடங்கினாய். நீ விரும்பிய உனது காதல் துணையோடு உனக்கு பதிவுத்திருமணம் நடைபெற்றது.

> **சீருடையில் பார்த்துப் பழகிய தமிழினி முற்றிலும் மாறிப்போனாள். சேலைகட்டி பஞ்சாபி போட்டு உச்சி நெற்றி கழுத்தில் குங்குமம் வைத்து வாழ்வதில் மகிழ்ச்சியிருப்பதாய் நம்பினாய்.**

நீ பிரித்தானியா வந்து சேரும்வரை யாருக்கும் இவ்விடயம் தொடர்பாக தெரியக்கூடாது என்பதில் யோகாவும், நானும் கவனமாயிருந்தோம்.

'ஒளிவட்டத்தை கண்டவுடனும் எங்களை மறந்து போயிட்டியள் என்ன?'

திருமணம் முடிந்து சிலநாட்களில் கேட்ட போது,

'என்ரை வாழ்க்கையில உன்னை நான் எப்படி மறப்பேன்?' குரல் உடைந்து சொன்னாய்.

முகநூல் பல நல்லவர்களையும் நல்ல விடயங்களையும் தந்து கொண்டிருக்கிறது. உனது வாழ்வில் நீ மீண்டும் புதிதாய் பிறக்க உன் வாழ்க்கைத் துணையாய் அமைந்த ஜெயன்தேவாவையும் முகநூல்தான் பெற்றுத்தந்தது.

உன்னைப் பிரித்தானியா எடுப்பதற்கான முயற்சிகளில் இழுபறிகள் தொடங்கியது. அனுராஜ் சில உதவிகளை தானே முன்வந்து செய்தான். சட்ட ஆலோசனைகளை சட்டத்தரணி நண்பர் கீத்திடம் பெற்றுக் கொண்டு உனக்கான ஸ்பொன்சர் அலுவல்கள் தொடங்கியது.

பிரித்தானியா வந்ததும் உன்னை விமானநிலையத்தில் வரவேற்க நான் வர வேண்டுமென்றாய். நாங்கள் நிறையக் கதைக்க வேணும் என்றெல்லாம் கனக்கச் சொன்னாய். உன்னைச் சந்திக்கும் நாளுக்காக காத்திருந்தேன்.

உனக்குள்ளேயே குறுகிப்போன உன்னை வெளியில் கொண்டுவர விரும்பிய ஜெயன்தேவா உனக்கு கணவனாய் மட்டுமன்றி உனக்கு நல்ல தோழனாகினார். ஜெயன்தேவாவுக்கு இறுதிவரை மனைவி யாக வாழ்ந்து இறந்து போகவே நீ ஆசைப்பட்டாய்.

சமூகம் விடுதலை என நீ வகுத்த பாதைகள் யாவும் நடைமுறைக்கு சரியாகா தவையென நீ உனக்குள்ளே முடிவெடுத்து பலமுறை என்னோடு முரண்பட்டுக் கொண்டாய்.

சீருடையில் பார்த்துப் பழகிய தமிழினி முற்றிலும் மாறிப்போனாள். சேலைகட்டி பஞ்சாபி போட்டு உச்சி நெற்றி கழுத்தில் குங்குமம் வைத்து வாழ்வதில் மகிழ்ச்சியிருப்பதாய் நம்பினாய்.

ஜெயன்தேவா உன்னை முகநூலில் எழுத ஊக்குவித்தார். ஜெயன்தேவா , சிவகாமி என்ற பெயரை சுருக்கி ஜெசியாக கவிதைகள் எழுதினாய். றொமீலாவாகவும் நிறைய எழுதினாய். பின்னர் தமிழினியாக வெளிப்பட்டாய்.

அழுதழுதே சிறைக்கம்பிகளின் பின்னே காலம் போகப்போகிறதென நம்பிய நீ சிரிக்கத் தொடங்கினாய். வாழ ஆசைப் பட்டாய். வாழ்வை ரசிக்கத் தொடங்கிய உனக்கு வருடக்கணக்காய் அலைத்த வயிற்றுவலி அதிகரிக்கத் தொடங்கியது.

"என்னால இருக்கேலாதாம் அசையே லாதாம்" இப்படி நீ வலியில் துடித்து மருத்துவமனை சென்று வந்தாய். உனது நோய் கண்டுபிடிக்கப்படவில்லை.

கொழும்புக்குப் போய் ஸ்கான் பண்ணிப் பார்க்கும்படி சொன்னபோது, "போகப் பயமாயிருக்கடி. மற்ற வருத்தமோ தெரியேல்ல" சொல்லியழுதாய்.

நீ சொன்ன மற்ற வருத்தம் புற்று நோயாக இருக்குமோ என்ற சந்தேகம் உள்ளுக்குள் இருந்தாலும் உன்னை தைரியப்படுத்தினேன்.

"அப்பிடியெல்லாம் இருக்காது. இப்ப தானே மருத்துவம் நிறைய இருக்கும். எந்த வருத்தத்தையும் மாத்தலாம். மனசை குழப்பாமல் போங்கோ".

ஓரவாரம் கழித்து ஒரு செவ்வாய்கிழமை ஸ்கைப்பில் வந்தாய்.

"நாளைக்கு மெடிக்கல் றிப்போட் வரும் என்ன வருதோ தெரியேல்ல".

பழைய மகிழ்ச்சி அன்றைக்கு இல்லை. சோர்வோடு கதைத்தாய். ஸ்கைப்பில் முகம் காட்டினாய். அழுதாய்.

மறுநாள் மதியம் உன்னை தொலை பேசியில் அழைத்தேன்.

"என்னவாமக்கா றிப்போட் வந்திட் டுதோ?" கேட்ட எனக்குச் சொன்னாய்.

"ஓமம்மா கான்சராம்"

"அம்மாக்குத் தெரியுமோக்கா கான் சரெண்டு?"

"ஓ அம்மா ஒரே அழுகையா இருக்கிறா".

"கான்சரெண்டா என்னக்கா. இப்ப தானே நல்ல மருத்துவம் இருக்கு செய்யலாம். யோசிக்கப்படாது தைரியமா இருங்கோ".

புற்றுநோயாளிகளுடன் பணியாற்றிய எனக்கு அவர்களின் முடிவு என்ன என்பது தெரியும். ஆனால் என் அக்கா உனக்குப் புற்றுநோயும் மாறும் எனவே நானும் நம்பினேன்.

இந்தியா சென்று மருத்துவம் செய்யலாம் என்ற நம்பிக்கையில் இந்தியாவில் சில நண்பர்களின் ஆதரவோடு உன்னை இந்தியா அனுப்ப முயற்சித்தோம். நீ பயணம் செய்யும் வலுவை இழந்து கொண்டிருந்தாய். இந்தியாவில் தொடர்பில் இருந்த மருத்துவர் உனது ஆயுட்காலம் குறுகிவிட்டதை தெரிவித்தார்.

கீமோதெரபி சிகிச்சையை மேற் கொள்ளத் தொடங்கினாய். போக்குவரத்து பயணங்கள் என பணம் மட்டுமே உனது எஞ்சிய நாட்களையும் தீர்மானித்திருந்தது.

"உங்கடை பேரைச்சொல்லி உதவி கேட் கட்டே அக்கா?" உன்னிடம் கேட்டேன்.

ஏற்கனவே உனக்கு செய்த சிறு உதவிகளை லட்சக்கணக்கில் செய்ததாய் கதை பரப்பிய பலரது பொய்களால்



உடைந்து போயிருந்தாய். உனது பெயரை வெளிப்படுத்தி யாரிடமும் இறைஞ்ச வேண்டாமென்று நிபந்தனை விதித்தாய்.

கண்ணெதிரே நீ இறந்து கொண்டிருக்க எப்படி ஒதுங்க முடியும்? ஆனால் நீ யாரிடமும் உதவி கேட்க வேண்டாமென்ற பிடிவாதத்தை கைவிடவேயில்லை.

சிலரிடம் உன் நிலமை பற்றிச் சொன்ன போது பாவம் நீயென்ற பதில்கள் தான் வந்தது. பணம் தர முன்வரவில்லை. உனது மரணம் உன்னை நெருங்குவதை நீயும் உணரத்தொடங்கினாய்.

உனது நோயுடனான போராட்டத்தை அறிந்த நோர்வே நாட்டு ஊடகவியலாளர் நோர்வே பெண்கள் அமைப்பினரிடம் உனது நிலையைக் கூறினார். உன்னை கவனிக்காத அவர்கள் மீது கோபித்தார்.

ஒருநாள் தொலைபேசியெடுத்த நீ நோர்வே மகளீர் அமைப்பினர் உன்னை நோர்வேக்கு ஸ்பொன்சர் செய்ய சம்மதித் தாக சொன்னாய். ஆனால் அவர்கள் உன்னிடம் வைத்த நிபந்தனையை என்ன சொல்ல?

(தொடரும்)

இந்தக் காலமும் இந்த உலகமும் எமது மொழிகளை மேலும்மேலும் மௌனத்துள்ளேயே புதைப்பதால்த்தான் எமது கவிஞர்களும் கவிதைகளை சங்கேத வடிவங்களில் பேச வேண்டி வருகிறது.

ந.சத்தியபாலன்



# பூமி

தீபச்செல்வன்

கேட்டினால் மேவிப்பெருகிய பாலியாற்றைப்போல
பேராறாய்ப் பெருக்கெடுத்த நம்குருதி
உதுமானியப் பேரரசின் சிறைகளுக்குள்
சிந்தப்பட்ட ஆர்மீனியரின் குருதி

வற்றி வறண்ட நெடிய சமுத்திரம்போல்
புழுதியாய் கிளம்பி நமக்கெடுத்த தாகம்
பாலைவனங்களில் கருகிய
தார்பூரரின் தாகம்

தணல் மூண்ட பெருங்காடு போல்
தீயாய் நம்மை துவட்டிய பசி
பட்டினியோடு மூச்சடங்கிய
கம்போடிய வியட்நாமியரின் பசி

தலை அறுக்கப்பட்ட பறவைபோல்
அனல்படரத் துடித்த நம் வயிறு
பசியால் மடிந்த
உக்கிரேனியரின் ஒட்டிச்சுருங்கிய வயிறு

விசமேற்றி இறந்த மீன்களின் மூடாவிழிகள் போல்
நஞ்சுறைந்து வாடிய நம் இருதயம்
நாஸிகளின் விஷவாயுவால் முட்டிவெடித்த
யூதர்களின் இருதயம்

கிழிந்த செவ்வரத்தம் பூக்கள்போல்
விந்துக்கறை படிய குதறி வன்புணரப்பட்ட நம் யோனிகள்
உகூட்டு ஆண்குறிகள் பிய்த்தெறிந்து
குருதி உறிஞ்சிய
ருவாண்டா துட்சிகளின் யோனிகள்

எனதன்பு மகளே!
எல்லா வழிகளாலும் அழிக்கப்பட்டவர்களின்
இப் பூமியில்தான்
உன்னைப் போலவே
மீண்டெழுந்தவர்களும் உண்டு.

**கவிதை ஆர்வலர்களே...**

இது உங்கள் / உங்களிற்கான பக்கம். உங்கள் எழுத்துக்களால் இந்தப்பக்கம் அலங்கரிக்கப்படட்டும். இளங்கவிஞர்களும் தயங்காமல் உங்கள் ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம்.

**கவிதைப் பக்கம்**
தீபம் வார இதழ், 98/1, பருத்தித்துறைவீதி, நல்லியங்காடு, நல்லூர்.


# தொலைந்துபோன ஓர் இரவில்...

நா.நவராஜ்

முழி சிவத்து வெளித்தள்ளியது
இனிக் கிடந்து பயனில்லை
நித்திரை
அது என் ஜென்ம விரோதி
தலைக்குள் தெறித்தோடிய மின்னல் ஒளியில்
புரண்டு புரண்டு
என் சிந்தனைகளை
நான் வாசித்துக் கொண்டிருந்தேன்

பிடரியை மேல்நோக்கி யாரோ
தள்ளிப் பிடிக்கிறார்.
நெற்றி மெல்லச் சுடேறக்
காதுகள் இரைந்து புகைக்கின்றன
மூச்சுத் திணற நான்
என் சிந்தனைகளைப் புரட்டிக் கொண்டிருந்தேன்

காலையில் நடந்தது
முன்னாள் மாலையில் நடந்தது
சென்ற மாதத்து மதியம் ஒன்றில் நடந்தது
முன்னிரவில் நடந்தது
என் வீட்டின் முன்னே நடந்தது
தெருவில் எங்கோ நடந்தது
தொலைபேசியில் சொன்னது
லீசிங்கால் வந்து விளைந்தது




மனைவியோடு மல்லுக்கு நின்றது
பிள்ளைகள் பிடுங்கி எடுத்தது
முதலாளி மூக்கி முனகியது
இன்னும்... இன்னும்...
முன் ஜென்மத்து நினைவுகள் கூட
பாயிற் கிடந்த என்னை வறுத்தெடுத்தன.
அதனால்
இரவுகள் தோறும்
கண்கள் வெறித்தபடி காத்துக் கிடக்கிறேன்
நீ எப்போ வருவாய் என...

# இப்படியும்

நெடுந்தீவு கே.போகேஸ்

பொலுத்தீன் பைகளால்
கட்டப்பட்ட பிணங்கள்
மயான அமைதியும்
கூச்சல்களும்
மோசமான டயறிக் குறிப்புகளால்
தவிக்கும் பழைய பெட்டிகள்
இந்த தெருக்களில்
யாரும் சஞ்சரிப்பதில்லை
வழியற்றுப் போன
கவிதைகளால் நிரம்பிய வாசல்
ஊமத்தம் மலரில்
மாலை
ஆயினும் கேட்டுக் கொண்டிருக்கிறது
சித்தனின் சங்கீதம்






# சின்னத்திரை



## முத்த ராணி ஜனனி!

சினிமாவில் நடப்பது அத்தனையும் இப்பொழுது சின்னத்திரைக்கும் வந்து விட்டது. சினிமாவிற்கு நிகராக சீரியல்களையும் தயாரிக்கிறோம் என அண்மையில் பலர் கிளம்பினர். பிரமாண்டம், விறுவிறு திரைக்கதை என சீரியல்களில் மாற்றம் செய்யப்போகிறார்களாக்கும் என நினைத்தால் முத்தக்காட்சி, பாலியல் பலாத்கா காட்சிகளை இணைத்துதான் சினிமாவிற்கு நிகராக சீரியல்களை மாற்றுகிறார்கள். சின்னத்திரையில் இன்றைய திகதியில் முத்தமழை பொழிந்து கொண்டிருப்பது, மாப்பிள்ளை சீரியலின் இரண்டாவது நாயகி ஜனனி. ஒவ்வொரு எபிசோட்டிலும் முத்தம் கொடுத்து கொண்டிருக்கிறார். "அன்பை வெளிப்படுத்த முத்தம் நல்ல வழிதானே. இதுவரை சீரியலில் யாரும் அதை செய்யாததால் விமர்சனம் வருகிறது. விமர்சிப்பவர்களை விட அதை ரசிப்பவர்கள்தான் அதிகம்" என விளக்கம் வேறு கொடுத்துள்ளார்.



## பிரியாவின் தத்துவம்!

மாப்பிள்ளை சீரியலில் நடிப்பர் பிரியா. நியூஸ் 7 டிவியில் செய்தி வாசிப்பாளராகவும் இருக்கிறார். அவர் ஒரு முக்கிய கருத்தை சொல்லியுள்ளார். "சீரியல்களில் புரட்சிகர வேடங்களில் நடிக்கிறார்கள். ஆனால் நிஜ வாழ்க்கையில் அப்படியிருப்பதில்லை எந்த பெண்ணும். பிரச்சனைகளை சந்தித்து பழக வேண்டும். கணவனோ மனைவியோ சீரியலில் நடிப்பவர்கள் எனில் புரிந்துணர்வு அவசியம். பொதுஇடத்தில் ரசிகர்கள் கதைப்பார்கள். அதை தவறாக பார்க்காமலிருக்க பழக வேண்டும். இப்படியான புரிந்துணர்வின்மைதான் சின்னத்திரை கலைஞர்கள் அண்மையில் தற்கொலை செய்ய காரணமாகியுள்ளது" என்றுள்ளார். சின்னத்திரை கலைஞர்களின் தற்கொலை அதிகரித்துள்ள சூழலில் பிரியா இதை கூறியிருக்கிறார்.

## பிரமாண்ட பிக்பாஸ்!

இந்தியில் வெற்றிபெற்ற பிக்பாஸ் நிகழ்ச்சியை நடத்த விஜய் டிவி தயாராகிவருகிறது. கமல்ஹாசன் நிகழ்ச்சியை நடத்துகிறார். ஒரு வீட்டிற்குள் உலகத் தொடர்பு இல்லாமல் 100 நாட்கள் வசிக்க வேண்டுமென்பதே போட்டி. இதற்கான வீடு பிரமாண்டமாக தயார் செய்யப்பட்டு வருகிறது. ஒரு பொழுதுபோக்கு பூங்காவில் கோடிக்கணக்கான செலவில், திரைப்பட கலை இயக்குனர்கள் மூலம் தயாராகி வருகிறது. நிகழ்ச்சியில் பங்குகொள்பவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவர்களுடன் ஒப்பந்தம் இடப்பட்டு வருகிறது. இப்போதைய நிலவரப்படி இரண்டு முக்கிய அரசியல்வாதிகள், இரண்டு முக்கிய கிரிக்கெட் வீரர்கள் ஒப்பந்தமாகியுள்ளனர். இந்த நிகழ்ச்சியில் வெற்றிபெறுபவர்களிற்கு கோடிக்கணக்கான பரிசு காத்திருக்கிறது.

## மௌனிக்கு டாட்டா!

இனி சீரியல்களில் மௌனி ராய் நடிக்க மாட்டார் என்பதை கடந்த வாரம் குறிப்பிட்டோம். அதை கிட்டத்தட்ட உறுதிசெய்துள்ளார் மௌனி ராய். தனக்கு நெருக்கமானவர்களிடம் பகிரங்கமாகவே இதை சொல்லி வருகிறார். அம்மணியின் அடுத்த டார்க்கெட் பாலிவுட் சினிமா. அதுவும் சல்மான் கானின் ஆசீர்வாதத்துடன் என்ரி கிடைப்பதில் அம்மணி நெகிழ்ந்து போயிருக்கிறார்.

## மகேஸ்வரியின் ஆசை இதுதானாம்!

ஜீ தமிழ் தொலைக்காட்சியில் சில நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகிறார் மகேஸ்வரி. இவருக்கு பஷன் டிசைனராக வேண்டுமென்ற ஆசையாம். அதனால் அழகுக்கலை பயின்று, டிசைனிங் பயில்கிறாராம். தனது அக்கா ஏற்கனவே டிசைன் செய்துகொண்டிருப்பதால், அவருடன் சேர்ந்து சினிமா மற்றும் சின்னத்திரையில் பஷன் டிசைன் செய்யலாமென நினைக்கிறார். இதைவிட, ஜீ தமிழில் தமக்கு நிறைய சுதந்திரம் உள்ளதாக கூறுகிறார். ஸ்கிரிப்டை பார்த்து நிகழ்ச்சி செய்யாமல், சூழலுக்கு தக்கதாக நிகழ்ச்சி செய்வதாக கூறியுள்ளார்.




## விஜய் டிவியின் விருதுகள்!

விஜய் தொலைக்காட்சி ஆண்டுதோறும் தனது கலைஞர்களிற்கு விருது வழங்குகிறது. 3வது வருடமாக நடக்கும் நிகழ்வு அண்மையில் நடந்தது. சிறந்த நடிகராக கல்யாணம் முதல் காதல் வரை தொடரில் நடிக்கும் அமித், சிறந்த நடிகையாக சரவணன் மீனாட்சி தொடரில் நடிக்கும் ரசூஷிதா தேர்வு செய்யப்பட்டனர். சிறந்த தொடராக சரவணன் மீனாட்சி தொடர் தேர்வானது. சிறந்த காமெடி நிகழ்ச்சி கலக்கப்போவது யாரு தேர்வானது. சிறந்த தொகுப்பாளினி பிரியங்கா. சிறந்த அம்மா நடிகை சிந்து ஷியாம் (ரேவதி), அப்பா நடிகர் ராஜசேகர், மாமியார் நடிகை சாரதா, சிறந்த காமெடியன் அன்பு (மாப்பிள்ளை), சிறந்த வில்லி கவிதா, சிறந்த குழந்தை நட்சத்திரம் சாவி சர்மா (நீலி), சிறந்த இயக்குனர் பிரவீன் (சரவணன் மீனாட்சி), சிறந்த ஜோடி செந்தில் ஸ்ரீஜா (மாப்பிள்ளை) தேர்வு செய்யப்பட்டனர். நிகழ்வில் செந்தில் ஸ்ரீயாவின் கலக்கல் நடனம் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் நடந்தன. இம்மாதம் 21, 28ம் திகதிகளில் விஜய் டிவியில் இது ஒளிபரப்பாகிறது.

சந்தானா

# வண்ணத்திரை

## ஜெய்யை பார்த்து அஞ்சலி செய்த வேலை!

தொடர்ந்து தோல்விப்படங்களில் நடித்து, திரையுலகத்தில் ரிவர்ஸ் கியரில் சென்று கொண்டிருக்கிறார் ஜெய். கொடுமை என்னவென்றால் அவர் இதை உணராதது. தற்போது அவர் நடித்துள்ள படம் பலூன். காதலி அஞ்சலி மற்றும் ஜனனி ஐயர் நடித்துள்ளனர். இந்தப்படம் வெற்றிபெற்றால்தான் ஜெய்யின் திரைப்பயணம் தொடரும் என்ற நிலையுள்ளது. இந்தநிலையில் படத்தின் பரமோஷன் பணிகளை ஆரம்பிக்க தயாரிப்பாளர்கள் முடிவு செய்துள்ளனர். புரமோஷனில் கலந்து கொள்ளுமாறு ஜெய்யிடம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர் வழக்கம்போல மறுத்துவிட்டார். பின்னர் அஞ்சலியை தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளனர். அம்மணி பதிலளிக்கவேயில்லையாம். பலநாள் முயற்சியின் பின் வெறுத்துப்போன தயாரிப்பாளர், மற்ற நடிகர்களை வைத்து புரமோஷனை ஆரம்பித்துள்ளார்.

## விஜய் படம் பற்றிய புது தகவல்!

அட்லியின் இயக்கத்தில் பெயரிடப்படாத படமொன்றில் விஜய் நடித்து வருகிறார். காஜல் அகர்வால், சமந்தா, நித்தியா மேனன் என மூன்று நாயகிகள். சத்யராஜ், வடிவேலு, சத்யன் என நட்சத்திர பட்டாளம் நடிக்கும் படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசை. படத்தில் மருத்துவர், ஊர் தலைவர் என இரண்டு வேடங்களில் விஜய் நடிக்கும் தகவல் வெளியாகியிருந்தது. மூன்றாவது வேடம் பற்றிய தகவல் இரகசியமாக இருந்தது. இப்போது அதுவும் வெளியாகியுள்ளது. விஜய் மெஜிக் கலைஞராக நடிக்கிறாராம். தீபாவளிக்கு படம் ரிலீசாகிறது.

## இனி சரித்திர கதைகள்தான்!

சரித்திரகதை பின்னணியில் உருவான பாகுபலி உலகமெங்கும் தாறுமாறாக ஓடி 1000 கோடி வசூல் ஈட்டியுள்ளது. இப்போதும் பரபரப்பாக ஓடுவதால் 1500 கோடி கண்டிப்பாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வெற்றியையடுத்து இந்திய சினிமாவின் கவனம் சரித்திரகதைகளின் பக்கம் திரும்பியுள்ளது. மகாபாரதத்தை 1000 கோடி செலவில் எடுக்கப் போவதாக மலையாள இயக்குனர் பி.ஏ.குமார் அறிவித்துள்ளார். பீமன் வேடத்தில் நடிக்க மோகன்லாலுடன் ஒப்பந்தமும் செய்தாகிவிட்டதாம். இதேவேளை இராமாயாணத்தை 500 கோடி செலவில் படமாக்கவுள்ளதாக தெலுங்கு தயாரிப்பாளர் அல்லு அரவிந்த் அறிவித்துள்ளார். தமிழ், தெலுங்கு, இந்தியில் தயாராகவுள்ளது. வரும ஒக்ரோபர் மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறதாம்.

## பாகுபலி 3?

பாகுபலி 3 கிடையாதென பிரபாஸ் சொல்லியிருந்தார். என்றாலும் பாகுபலி 3 இற்கான வேலைகள் ஆரம்பிப்பதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது. பாகுபலி 2 இலாபம் தருமென எல்லோரும் நம்பியிருந்தனர். ஆனால் மகா வசூல் தருமென யாரும் எதிர்பார்க்கவில்லை. இந்தி உரிமைய வாங்கி வெளியிட்ட கரண் ஜேஹரிற்கு மட்டும் 200 கோடி இலாபமாம். அவர்தான் 3ம் பாக யோசனையை ஆரம்பித்துள்ளார். ஆரம்பத்தில் இதற்கு மறுத்த இயக்குனர் ராஜமௌலி, பின்னர் சம்மதித்தாக கூறப்படுகிறது. பாகுபலியென்ற பெயர் இவ்வளவு வசூலை தரும்போது எதற்காக 2ம் பாகத்துடன் நிறுத்த வேண்டுமென தயாரிப்பாளர்கள் நினைக்கிறார்களாம்.



சுனாய சோலாங்கி

## மீண்டும் வில்லனாக பாபிசிம்ஹா!

வில்லனாக இருந்து ஹீரோவானவர் பாபி சிம்ஹா. இனி வில்லனாக நடிக்க மாட்டேன் என அறிவித்து அவர் ஹிரோவாக நடித்த எந்தப்படமும் ஓடவில்லை. இதை பார்த்து, மீண்டும் வில்லனாக நடிப்பதென்ற முடிவிற்கு வந்துவிட்டார் பாபிசிம்ஹா. இப்பொழுது விஜய்சேதுபதி நடிக்கும் கருப்பன் படத்தில் வில்லன் வேடத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். விரைவாக படப்பிடிப்பு நடந்து வருகிறது. இந்த படத்தில் விஜய்சேதுபதி ஜோடியாக தான்யா நடித்துள்ளார்.

## கவர்ச்சி படங்களை கசியவிட்ட நந்திதா!

கிராமத்து வேடங்களில் நடிக்க மட்டுமே நந்திதாவிற்கு லாயக்கு என்ற அபிப்பிராயம் உள்ளது. செல்வராகவனின் இயக்கத்தில் அவர் நடித்த நெஞ்சம் மறப்பதில்லையை அதிகம் எதிர்பார்த்திருக்கிறார். இந்த படம் வெளியானால் தன்னைப்பற்றிய இமேஜ் மொத்தமாக மாறிவிடும் என எதிர்பார்க்கிறார். இந்தப்படத்தில் அசூஷன் ஹீரோயினாகியுள்ளார். அதுதவிர, இனி மொடர்ன் ஹீரோயினாக உலாவ முடிவெடுத்து சூடான போட்டோசூட் ஒன்றை நடத்தி கவர்ச்சிப்படங்களை இணையத்தில் உலாவவிட்டுள்ளார்.



## பாகுபலி ஜோடி நிஜத்திலும் இணைகிறது?

பாகுபலியின் ஜோடி நிஜத்திலும் ஜோடியாகுவார்களா என்பதுதான் இப்போதைய பரபரப்பு. பாகுபலி படத்தில் பிரபாஸ் அனுஷ்கா ஜோடி தத்ரூபமாக இருந்ததாக கூறுபவர்கள், நிஜத்திலும் பெருத்தமான ஜோடியென்ற பேச்சு பரவலாக உள்ளது. இந்த பேச்சு எப்படி ஏற்பட்டதென தேடிப்பார்த்தால், இருவருக்குள்ளும் சம்திங் உள்ளதென்கிறார்கள். பொதுநிகழ்ச்சிகளில் ஒன்றாக கலந்து கொள்ளும் இந்த ஜோடி மிக நெருக்கம் காட்டுகிறார்கள். இருவரும் காதலிக்கிறார்கள், வீட்டின் சம்மதத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள் என கூறப்படுகிறது. அனுஷ்காவின் வீட்டில் சம்மதம் சொல்லிவிட்டார்கள். பிரபாஸ் வீட்டில்தான் தடங்கலாக உள்ளதென கூறப்படுகிறது.


பட பூஜை ஒன்றில் எம்.ஜி.ஆருடன் இயக்குநர் ஸ்ரீதர் (இடது ஓரம்), நடிகை லதா, அவர் அருகே இயக்குநர் கே.சங்கர்.


'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் மனதை மயக்கும் வாலிபனின் சிரிப்பு.


எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 56

ஸ்ரீதர் சுவாமிநாதன்

# கேட்காமலேயே கொடுத்தவர்!

**எம்.ஜி.ஆர்.** சொந்தமாக மூன்று படங்களை தயாரித்தார். 'நாடோடி மன்னன்', 'உலகம் சுற்றும் வாலிபன்' ஆகிய இரண்டு படங்களை அவரே இயக்கினார். மற்றொரு படமான 'அடிமைப் பெண்' படத்தை அவர் இயக்கவில்லை. தானே சிறந்த இயக்குநராக இருந்தும் தனது சொந்தப் படத்தை இயக்கும் வாய்ப்பை வேறு இயக்குநருக்கு கொடுத்தார். அந்தப் பெருமையைப் பெற்றவர் இயக்குநர் கே.சங்கர்.

'நல்லவன் வாழ்வான்' படப்பிடிப்பு மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் நடந்து கொண்டிருந்தபோது, முதன்முதலாக எம்.ஜி.ஆரை சந்தித்தார் கே.சங்கர். தான் பணியாற்றிய படங்களைப் பற்றி கே.சங்கர் கூறினார். ஒவ்வொரு படத்திலும் சிறந்த காட்சிகளையும் 'ஷாட்'களையும் குறிப்பிட்டு எம்.ஜி.ஆர் பாராட்ட, இந்த அளவுக்கு தனது படங்களை கவனித்திருக்கிறாரே என்று வியந்துபோனார் கே.சங்கர்.

ஜி.என்.வேலுமணி தயாரிப்பில் தான் நடித்த 'பணத்தோட்டம்' படத்தை கே.சங்கர் இயக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர் விரும்பினார். சங்கர் அதுவரை எம்.ஜி.ஆர் பாணியிலான படங்களை இயக்கியதில்லை. இந்த தயக்கத்தால், கதையை காரணம் காட்டி படத்தை தட்டிக் கழிக்க விரும்பினார். ஆனால், கதையை மாற்றும்படி எம்.ஜி.ஆர் கூறிவிட்டதால், கள்ள நோட்டு பிரச்சினையை மையமாக வைத்து 18 நாட்களில் தயாரிக்கப்பட்டது 'பணத்தோட்டம்' படம்.

"எம்.ஜி.ஆர் படங்களில் வேலை செய்தால் நிறைய குறுக்கீடுகள் இருக்கும். தொந்தரவுகள் இருக்கும் என்று படவுலகில் பயமுறுத்தியிருந்தார்கள். ஆனால் அது உண்மையல்ல. அவர் நல்ல ரசிகர். ஒவ்வொரு காட்சியையும் கேமரா கோணத்தில் கண்டு மகிழ்வார்" என்று சங்கர் பின்னர் தனது அனுபவத்தைக் குறிப்பிட்டார். 'பணத்தோட்டம்' பட வெற்றிக்குப் பின், சங்கரிடம் எம்.ஜி.ஆர். "என் படத்தை டைரக்ட் செய்யத் தயங்கினீர்களே? இப்போது என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு சங்கரின் பதில், "என்னை மன்னித்து விடுங்கள்."

பின்னர், 'கலங்கரை விளக்கம்', 'சந்திரோதயம்', 'குடியிருந்த கோயில்', 'உழைக்கும் கரங்கள்', 'பல்லாண்டு வாழ்க', 'இன்றுபோல் என்றும் வாழ்க' என்று இருவர் கூட்டணியில் வெற்றிப் படங்கள் வந்தன. தனது சொந்தத் தயாரிப்பான 'அடிமைப் பெண்' படத்தை இயக்கும் வாய்ப்பை சங்கருக்கு எம்.ஜி.ஆர் கொடுக்கும் அளவுக்கு இருவரின் நட்பும் பலப்பட்டது. படத்தை ஜெய்ப்பூரில் எடுக்கலாம் என்று யோசனை சொன்னதே சங்கர்தான். அதை எம்.ஜி.ஆர் ஏற்றுக் கொண்டார்.

சாதாரணமாகவே எம்.ஜி.ஆர் செலவு செய்வார். தனது சொந்தப் படம் என்றால் கேட்கவே வேண்டாம். படத்துக்காக மட்டுமின்றி, படப்பிடிப்புக்குழுவினருக்கும் எந்த குறையும் வைக்காமல் தாராளமாக செலவு செய்தார். பாலைவனப் பகுதியில் குடிநீர் கிடைப்பது கஷ்டம் என்பதால் 'கோககோலா'வையே கொண்டுவந்து நிறுத்தினார்.

"ஜெய்ப்பூர் அரண்மனையில் ஆறாவது மாடியில் உள்ள மன்னரின் அறையில் காட்சிகளை படமாக்கினால் நன்றாக இருக்கும். ஆனால், தரையில் உள்ள விரிப்புக்கு பதிலாக சன்மைக்கா பதித்து காட்சிகளை எடுத்தால் சிறப்பாக இருக்கும்" என்பது சங்கரின் யோசனை. சன்மைக்கா அறிமுகமான சமயம் அது. எம்.ஜி.ஆர் உடனே, டெல்லிக்கு ஆள் அனுப்பி விமானம் மூலம் சன்மைக்காவை வரவழைத்தார். அந்த நாளிலேயே அதன் மதிப்பு ரூ.40 ஆயிரம். படத்தின் காட்சிகள் சிறப்பாக வரவேண்டும் என்பதற்காக, அரண்மனையில் தன் செலவிலேயே சன்மைக்காவை பதித்துவிட்டார் எம்.ஜி.ஆர்! 'ஆயிரம் நிலவே வாஞ்' பாடலின் இறுதியில் வரும் காட்சிகள் அந்த அறையில்தான் படமாக்கப்பட்டன.

'கலங்கரை விளக்கம்' படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது, தன் மகளுக்கு வரன் பார்த்து வரும் விஷயத்தை எம்.ஜி.ஆரிடம் சங்கர் சொன்னார். "கல்யாண வயதில் உங்களுக்கு மகள் இருக்கிறாளா? கொஞ்சம் இருங்கள்" என்று கூறிய எம்.ஜி.ஆர், உடனே தனது அண்ணன் சக்ரபாணிக்கு போன் செய்து, "சங்கரின் பெண்ணை நம்ம ராமுவுக்கு (சக்ரபாணியின் மகன் ராமமூர்த்தி) பார்த்தால் என்ன?" என்று கேட்டார். சங்கருக்கோ தயக்கம் ஒருபக்கம், மகிழ்ச்சி மறுபக்கம். "சார் ஏன் அவசரப்படுறீங்க?" என்றார்.

அதற்கு, "ராமுவை நான் வளர்த்து படிக்க வைத்தேன். அவன் என் பையன். அவனுக்கு உங்கள் மகளை திருமணம் செய்து வைக்க வேண்டும்" என்று எம்.ஜி.ஆர் கேட்டுக் கொண்டார். சங்கர் அவரது சம்பந்தியானார். ஐயப்ப பக்தரான சங்கர், "எம்.ஜி.ஆர் படங்களை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது மட்டுமின்றி, அவருக்கே சம்பந்தியாக என்னை ஆக்கியது ஐயப்பனின் கருணை" என்று சிலிர்த்துப் போனார்.


'அடிமைப் பெண்' படத்தில் கண்கவரும் ஜெய்ப்பூர் அரண்மனையில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா.

பிறருக்கு உதவும் குணமும் மொழி, இன, மாநில எல்லைகளைத் தாண்டி மக்களின் துயரைத் துடைக்க உதவும் மனப்பான்மையும் எம்.ஜி.ஆரின் உடன்பிறந்தவை. 'அடிமைப் பெண்' படப்பிடிப்புக்காக அவர் ராஜஸ்தான் சென்றபோது, அங்கு கடும் வறட்சி. மாநில அரசிடம் வறட்சி நிவாரண நிதியாக ரூ.50 ஆயிரத்தை எம்.ஜி.ஆர் அளித்தார்.

'இன்றுபோல் என்றும் வாழ்க' படத்தின் படப்பிடிப்பு கர்நாடக மாநிலம் மணிப்பாலில் நடந்தது. அந்த சமயத்தில் கொல்லூரில் உள்ள மூகாம்பிகை கோயிலுக்கு முதன்முதலில் எம்.ஜி.ஆரை சங்கர் அழைத்துச் சென்றார். கோயிலுக்கு பின்புறம் சங்கரபீடம் இருக்கிறது. அங்கே தான் ஆதிசங்கரர் தவம் செய்து பின்னர், மூகாம்பிகையை பிரதிஷ்டை செய்தார். சிறப்பு அனுமதி பெற்று சங்கரபீடத்தின் உள்ளே எம்.ஜி.ஆர் தனிமையில் தியானம் செய்ய சங்கர் ஏற்பாடு செய்தார். ஒரு மணி நேரத்துக்கு பின் வெளியே வந்த எம்.ஜி.ஆர், "நிம்மதியாக இருந்த இந்த தருணத்தை வாழ்க்கையில் மறக்கவே முடியாது" என்று கூறியிருக்கிறார்.

சங்கர் வீட்டில் மற்றொரு திருமணத்தின்போது, அவருக்கு பண உதவி செய்வதாக கூறியவர்கள் கடைசி நேரத்தில் கைவிட்டனர். திருமண வரவேற்பு நடந்து கொண்டிருந்தது. அது முடிந்தவுடன் வேலை செய்தவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டும். என்ன செய்வதென்று தெரியாமல் விழிபிதுங்கிக் கொண்டிருந்தார் சங்கர். திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்த எம்.ஜி.ஆர், மணமக்களை வாழ்த்திவிட்டு சங்கர் கையில் இரண்டு பாக்கெட்களை திணித்தார். அவற்றில் சங்கருக்குத் தேவையான பணம் இருந்தது.

சங்கர் நெகிழ்ந்து கூறினார்: "மகாபாரதக் கர்ணன்கூட கேட்டவர்களுக்குத்தான் கொடுத்தான். கேட்காமலேயே மற்றவர்களுக்கு கொடுத்தவர் எம்.ஜி.ஆர்!"


தொடரும்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை வடமாகாணசபை ஒப்பேற்றி முடித்திருக்கிறது. ஒரு நிகழ்வை வடமாகாணசபை செய்கிறது என்றாலே அது எப்படியாக முடியுமென்பதை கற்பனை செய்யலாம். அதற்குள் அரசியலும் சேர்ந்தால்?... அதன் சீத்துவம் எப்படியிருக்குமென்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

யுத்தத்தின் பின் தமிழ் மக்களை அமைப்புரீதியாக ஒருங்கிணைக்கும் சக்தியுள்ள ஒரு தலைவனோ, அமைப்போ உருவாகவில்லை. வடமாகாணசபை தேர்தலில் விக்னேஸ்வரனின் வெற்றி, தேர்தல்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் வெற்றிக்கு உள்ள பிரதான காரணம் அது புலிகளால் உருவாக்கப்பட்டது. அவர்களை விட்டால் வேறு யாரும் இல்லை என்ற காரணங்கள்.

பலசந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் எடுத்த முடிவுகளின் பின்னால்தான் தமிழ்தேசிய கூட்டமைப்பு வந்தது. இயல்பாக மக்களை திரட்டும் வல்லமையும், செயலாற்றலும் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் இல்லை. செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்ற வெகுஜன கவர்ச்சிமிக்க தலைவர்கள் அந்த கட்சிக்குள் இப்பொழுது இல்லை.

யுத்தத்தின் பின்னரான கடந்த ஏழு ஆண்டுகளில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் செயலாற்றல் என்னவென்பதை பார்த்துக் கொண்டுதான் வருகிறோம். இதில் உச்சபட்ச கையாலாகாதனம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கூட வெகுஜன



# சத்தியலிங்கத்தின் வன்மம்... சுரேஷ் இழக்கும் அடுத்த விக்கெட்!

## அஞ்சலி நிகழ்வின் பின்னாலிருந்த அசிங்கப்பக்கம்



திரட்சியுடன் செய்ய முடியாமல் உள்ளது.

முள்ளிவாய்க்கால் மாபெரும் அவலத்தின் துயர நினைவு ஒவ்வொரு ஈழத்தமிழனின் நெஞ்சிலும் உள்ளது. வாழ்வின் துயரக்கனவுகளில் ஒன்றாகத்தான் அதை ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். எல்லோருடனும் தொடர்புபட்ட, நெஞ்சைத் தொட்ட நிகழ்வொன்றையே சனத்தை திரட்டி செய்ய முடியாதவர்கள் நமது மக்கள் பிரதிநிதிகள்.

இரண்டு வாரங்களின் முன்னர் யாழ்ப்பாணத்தில் படையினர் வெசாக் வலயமொன்றை ஏற்படுத்தியிருந்தனர். அந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையையும் முள்ளிவாய்க்கால் நிணைவேந்தலில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டு பார்த்தால் நாம் நிற்கும் இடத்தை புரிந்து கொள்ளலாம்.

கடந்த சில ஆண்டுகளாகவே நமது மக்கள் பிரதிநிதிகள் இப்படியான அஞ்சலி நிகழ்வுகளிற்கு அழைப்பு விடுத்து வருகிறார்கள். ஆனால் மக்கள் இதில் ஆர்வம் காட்டுவதில்லை. இதைப்பற்றிய சுயமதிப்பீடு நமது மக்கள் பிரதிநிதிகளிடம் இருப்பதில்லை. அப்படி இருந்திருந்தால், அஞ்சலிகளை வேடிக்கையாக செய்ய மாட்டார்கள். மக்கள் பிரதிநிதிகள் யாரையும் சீரியஸாக மக்கள் பார்ப்பதுமில்லை. மக்கள் பிரதிநிதிகளும் எதையும் சீரியஸாக செய்வதுமில்லை.

உன்னத வீரவரலாற்றை கொண்ட இனம், இன்றும் வீடில்லாமல் பெருந்தொகையானவர்கள் தகரக்கொட்டகைகளிற்குள் வாழ்ந்து கொண்டிருக்க, ஓடியோடி ஒவ்வொரு பிரதேசத்திலும் காந்திக்கு சிலை வைக்கிறேன் என்ற பெயரில் கொமடி பண்ணிக் கொண்டிருக்கிறார் சிவமோகன் எம்.பி. கட்டாயம் செய்ய வேண்டிய நினைவேந்தலை மக்கள் பங்கேற்புடன் செய்ய முடியாமல் உதவியாளர்களுடன் மட்டும் செய்து கொண்டிருக்கிறார் சிவாஜிலிங்கம். அஞ்சலி நிகழ்வுகள் என்றாலே அந்தப்பக்கமே வராமல் தலைமறைவாக இருந்து எஜமான விசுவாசத்தை நிரூபிக்கிறார்கள் இன்னும் சில தலைவர்கள். இப்படித்தான் இருக்கிறது நமது மக்கள் பிரதிநிதிகளின் சீத்துவம்.

இதில் இன்னொரு முக்கிய விடயமும் உள்ளது. கூட்டமைப்பாக இருந்து கொண்டு கட்சி முரண்பாடுகளில் ஈடுபடும் நம்மவர்களின் இயல்பு அஞ்சலிகள் வரை வருவதால் மக்கள் எரிச்சலடைகிறார்கள். ஆனால் நமது மக்கள் பிரதிநிதிகளிற்குத்தான் சூடு, சொரணையே கிடையாதே. அவர்கள் இருக்கும்வரை அதைசெய்துகொண்டுதான் இருப்பார்கள். இம்முறை அஞ்சலி நிகழ்விலும் நிறைய உள் அரசியல் ஓடியது. மாகாணசபையாக அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்தாலும், இறுதியில் கட்சியாகவே நிகழ்த்தி முடித்தனர். நமது மக்கள் பிரதிநிதிகளின் சில்லறை செயற்பாடுகள் தொடர்கின்றது என்பதற்கு இது உதாரணம்.

அஞ்சலி நிகழ்வு ஏற்பாடுகளை அனேகமாக தமிழரசுக்கட்சியே செய்தது. ஆட்களை திரட்டுவதற்காக ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். நியமனம் மாகாணசபை உறுப்பினர்களாக அல்லாமல் தமிழரசுக் கட்சி உறுப்பினராகவே வழங்கப்பட்டது.

கைதடி பிரதேசத்திற்கு பொறுப்பாக அருந்தவபாலன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மாகாணசபை உறுப்பினரே கிடையாது. தமிழரசுக்கட்சிக்காரராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுபோல ஓரிரு விதிவிலக்குகள் தவிர்த்து மிகுதி எல்லாமே தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள்தான். இருக்கும் வெகுஜன கவர்ச்சி மிக்க தலைவர்களிடம் மக்களை அணிதிரட்டும் பொறுப்பை ஒப்படைக்காமல் “நம்ம ஆள்” பார்த்து பொறுப்பளிக்கப்பட்டதால் பெருமளவு மக்களை திரட்டி, எதையும் மறக்காமல் இருக்கிறோம் என்பதை உலகத்திற்கு உணர்த்தியிருக்கலாம்.

வவுனியா என்ற பரந்த பிரதேசத்தின் ஆட்களை திரட்டும் பொறுப்பை அமைச்சர் சத்தியலிங்கமே வைத்துக்கொண்டார். அங்குள்ள வெகுஜன கவர்ச்சிமிக்க தலைவர் சிவசக்தி ஆனந்தன். ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை இணைத்து செய்யக்கூடாதென்ற கட்சியின் வன்மம் சத்தியலிங்கத்திடமும் இருந்திருக்கிறது. இந்த போக்குவரத்து ஒழுங்குகளை சத்தியலிங்கம்தான் ஒருங்கிணைத்திருந்தார். அவரது ஒழுங்கமைப்பில் பங்காளி கட்சிகளின் பங்களிப்பை இல்லாமலாக்கும் வன்மம் தெரிந்தது.

தமிழ்மக்கள் எல்லா வேறுபாடுகளையும் களைந்து ஒன்றுபட வேண்டிய மாபெரும் அஞ்சலி நிகழ்வில் கட்சி முரண்பாட்டு அரசியல் செய்பவர்கள் எப்படி மக்கள் அரசியல் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்?

அஞ்சலி நிகழ்வில் முக்கிய பாத்திரம் வகித்தது ரவிகரன். அவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை சேர்ந்தவர்தானே, அதைவிட வேறென்ன சமத்துவம் என யாராவது சொல்லலாம். ஆனால் இந்த அஞ்சலி நிகழ்வில் ரவிகரனும் தமிழரசுக்கட்சிக்காரராகவே செயற்பட்டதாக கூறப்படுகிறது. அதனால்தான் அஞ்சலி நிகழ்வு ஏற்பாட்டுகுழுவில் அவர் இருந்தார். அடுத்த நாடாளுமன்ற, மாகாணசபை தேர்தலில் வேட்புமனு கோரி ரவிகரன் தமிழரசுக்கட்சி முக்கியஸ்தரை சந்தித்ததாகவும், விடயத்தை அறிந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்காரர்கள் தொலைபேசியில் அவருடன் மல்லுக்கட்டியதாகவும் கூறப்படுகிறது. ஆக, ஈ.பி.ஆர்.எல்.எவ் இல் இருந்து பறக்க அடுத்த கிளியும் தயாராகிறது. இன்னொருமுறை “பாலூட்டி வளர்த்த கிளி” என சுரேஷ் பிரேமச்சந்திரன் பாடினாலும் ஆச்சரியமில்லை. ●



# வாட்ஸ்ஆப்பில் தமிழில் டைப் செய்வது எப்படி?

வட்ஸ்அப்பில் தமிழில் தகவல்கள் பரிமாறக்கொள்ள விரும்புகிறீர்களா? அல்லது முகநூல் பக்கத்தில் உங்களின் கருத்துக்களை தமிழில் போஸ்ட் செய்ய விரும்புகிறீர்களா? அல்லது உங்கள் அண்ட்ரோய்ட் ஸ்மார்ட்போன், ரப்ளெட் அல்லது பிசியில் தமிழ் மொழி பயன்படுத்தி ஒரு மின்னஞ்சலை உருவாக்க வேண்டுமா? ஆம் என்றால் நீங்கள் சரியான இடத்தில்தான் இருக்கின்றீர்கள்.


ஸ்மார்ட்போன் பயன்பாடுகளின் உதவியுடன் பல அம்சங்களை அனுபவிக்க முடியும். அந்த வகையில் உங்களின் அண்ட்ரோய்ட் மற்றும் விண்டோஸ் மொபைல்போனில் இங்கு தொகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றுவதின் மூலம் நீங்கள் உங்களின் வட்ஸ்அப்பில், பேஸ்புக்கில் தமிழில் டைப் செய்ய முடியும்.



1. உங்கள் அண்ட்ரோய்ட் சாதனத்தின் மூலம் கூகுள் இண்டிக் கீபோர்ட் என்ற (Google Indic Keyboard) பயன்பாட்டை பதிவிறக்கம் செய்து, நிறுவவும்.




2. ஒருமுறை உங்கள் சாதனத்தில் இந்த அப் நிறுவப்பட்டதும் அதை உங்கள் ஸ்மார்ட்போன் அப் டிராயரில் இருந்து திறக்கவும்.




3. இப்போது பயன்பாட்டின் பிரதான திரையில் "எனேபிள் இன் செட்டிங்ஸ்" (Enable in settings) என்ற பொத்தானைத் தட்டவும்.




4.இப்போது "கூகுள் எனேபிள் கீபோர்ட்" என்ற ஒப்ஷனை தேர்ந்தெடுப்பதன் மூலம் இயக்கம் பெற செய்ய முடியும்.





5.பின்னர், அடுத்த திரையில் "செலெக்ட் இன்புட் மெத்தேட்" என்ற பொத்தானைத் தட்டவும். பின்னர் "இங்கிலிஷ் மற்றும் இந்தியன் லேங்குவேஜ்ஸ்" விசைப்பலகை என்பதைத் தேர்வு செய்யவும்.





6. அடுத்த கட்டத்தில், கூகுள் அநாமதேய பயன்பாட்டு புள்ளிவிவரங்களை அனுப்ப ஒப்புக்கொள்கிறீர்கள் என்றால் டிக் செய்யவும் அல்லது அதை புறக்கணித்து விட்டு இடது புறம் தேய்க்க "அக்செப்ட்" தேர்வுப்பெட்டியை காண்பீர்கள் அதை தேர்ந்தெடுக்கவும்.




7. இப்போது, அடிஷனல் லேங்குவேஜ்ஸ் (கூடுதல் மொழிகள்) விருப்பத்தைத் தட்டவும். பின்னார் "தமிழ் - ஆங்கிலம்" என்ற உள்ளீட்டு முறை பொத்தானை இயக்கவும்.





8. இப்போது வட்ஸ்அப்பை திறந்து, நீங்கள் தமிழ் டைப் செய்ய விரும்பும் மெசேஜ் பொக்ஸை தட்டவும். இப்போது திரையில் கூகுள் இன்க் விசைப்பலகை பொப்அப் ஆவதை காண்பீர்கள்.




9. இப்போது நீங்கள் கீபோர்டின் மேல் பக்கம் "இந்திய மொழிகளின்" பொத்தானை பார்ப்பீர்கள், அதை தட்டவும். இப்போது பொப் அப் விண்டோவில் "தமிழ்" மொழியை தேர்ந்தெடுக்கவும்.

இறுதியாக, தமிழில் தட்டச்சு செய்ய ஒலிபெயர்ப்பு அல்லது நேட்டிவ் விசைப்பலகை (transliteration or Native keyboard mode) முறையை தேர்வு செய்ய உங்களால் தமிழில் டைப் செய்ய முடியும். (உடன் நீங்கள் பின்னர் எப்போது வேண்டுமானாலும் விசைப்பலகை அமைப்பை மாற்றலாம்.



## பவர் பட்டன் உடைந்த பின்பு போனை இயக்கலாமா?

ஸ்மாரட்போன்களின் பவர்பட்டன் உடைந்தால் அதை சரி செய்யலாமா? பவர் பட்டன் உடைந்தபின்பு மொபைல்போன் ஓன்ஓப் செய்வது எப்படி என்பது பற்றிய குறிப்புக்கள்.

ஸ்மார்ட்போன் பவர் பட்டன் உடைந்தால்; அவற்றின் பனல் நீக்கி பவர்பட்டன் பொருந்தியிருக்கும் இடைத்தை பார்த்தால் ஒரு புள்ளி அளவு இடம் இருக்கும், அதை இலேசாக டச் செய்தால் போதும் போன் ஓன் செய்ய முடியும். சில சமயங்களில் வொலியூம் பட்டன் பொருந்தியிருக்கும் இடத்தை டச் செய்யும்போது போன் ஓன் செய்ய அதிக வாய்ப்புள்ளது.

பவர் பட்டன் உடைந்துபோன பின்பு மற்றோரு வழியே ஓன்ஓப் செய்யமுடியும், யுஎஸ்பி கேபிளின் வழியே சார்ஜ் செய்யும்போது சிலசமயம் போன் எளிமையாக ஓன் ஓப் செய்ய முடியும்.

பவர்பட்டன் உடைந்த இடத்தில் அதற்க்கு தகுந்த வேறொரு பவர்பட்டன் பொருத்தி மிக எளிமையாக ஸ்மார்ட் போன்களை ஓன்ஓப் செய்யமுடியும். ஸ்மார்ட்போன்கள் பொருத்தமாட்டில் எதுவும் பயன்படாத நிலைமையில் சர்வீஸ் சென்டர்கள் எடுத்து சென்று சரி செய்வது மிகவும் நல்லது.






▶ கொற்றை பி.கிருஸ்ணானந்தனின் சாம்பல் பூத்த வானமும் சில நட்சத்திரங்களும் , கொற்றாவத்தையில் உலவும் குட்டிக்கதைகள் ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கொற்றாவத்தை செட்டித்தறை சித்திவிநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.




▶ 26 வருடங்களின் பின் மீள்குடியேறிய பலாலி வடக்கு அன்ரனிபுரம் சிறுவர் முன்பள்ளி போதிய வளங்கள் இன்றி இயங்கி வருகிறது. வலிவடக்கு மீள்குடியேற்றகுழு தலைவர் சஜீவனின் ஏற்பாட்டில், ஜெனவாவில் வசிக்கும் திருமதி நர்சிகா தம்பதிகளால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.




# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்





கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்

**பெண் (வயது 20)
பம்பலப்பிட்டி**

**நான் கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் உயர்கல்வி கற்கிறேன். கடந்த ஒருவருடமாகவே என்னிலும் ஐந்து வயது அதிகமான சிங்கள இனத்தவர் ஒருவரை காதலிக்கிறேன். நாங்கள் உண்மையாகவே காதலிக்கிறோம். திருமணம் செய்வோம். ஆனால் எங்கள் வீட்டில்இதற்குகடும்எதிர்ப்பாகஉள்ளது. சிங்களவர்கள் ஏமாற்றிவிடுவார்கள், நமது சமூகம் ஏற்காது என வீட்டில் சொல்கிறார்கள். இதற்குள் எங்காவது சுற்றுலா செல்லலாம் என காதலர் கேட்டுக்கொண்டே இருக்கிறார். வீட்டில் பொய் சொல்லிவிட்டுத்தான் செல்லலாம். நான் என்ன செய்வதென்றே தெரியவில்லை. வீட்டில் சம்மதம் பெற்றுவிட்டு காதலனுடன் செல்வதா? அல்லது பின்னாளில் வீட்டை சமாளிக்காலாமென விட்டுவிடலாமா?**

**பதில்:** சகோதரி! பூகோள மயமாக்கலின் பின்னணியில் பன்மைத்துவ சமூகத்தில் வாழும் இனங்களுக்கிடையில் இவ்வகையான காதல்கள் மலர்வது ஒன்றும் புதியதல்ல. அது மட்டுமன்றி எமது நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினையை இல்லாமல் செய்வதற்கு உமது காதல்கூட ஒரு வழியே. நல்ல மனிதர்கள் எல்லா இனங்களிலும் உண்டு. அதேபோல் மிகக் கெட்ட மனிதர்களும் உண்டு. உமது வீட்டார் கூறுவது போல் சிங்கள இனத்தவர் என்பதால் ஏமாற்றுவார்கள் என்று கூறுவது மடத்தனம். தமிழர்களும் ஏமாற்றுவார்கள்.

உண்மையில் நல்ல பண்பான பழக்கவழக்கங்கள் கொண்ட பாரம்பரியமான குடும்பப் பண்பாடுகளைப் பேணுவதில் எமது சமூகத்தைவிட சிங்கள சமூகத்தில் அதிக வெளிப்படுத்தல்கள் இருக்கின்றது. எனவே சிங்கள இனத்தவர் என்பதால் உமது காதலைக் கைவிடத் தேவையில்லை. ஆனால் காதலனின் குடும்பம், அவர்களது நடை, உடை, பாவனை, அவர்களது வாழ்க்கை முறை, பிறரோடு பழகும் விதம் ஆகியவை தொடர்பாக மிகக் கரிசனையுடன் அக்கறை செலுத்துங்கள். மற்றபடி உமது வீட்டிற்கோ, காதலனின் வீட்டிற்கோ சுற்றுலா மற்றும் களியாட்டங்களுக்குச் செல்வது மிகவும் ஆபத்தானது. காதலிக்கும் போது பெண்கள் கட்டுப்பாட்டையும், கௌரவத்தையும் எப்போதும் பாதுகாக்கும்படியான சுய எல்லைக்கோடுகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் காதலே கேள்விக் குறியாவதுடன் எல்லைகளை மீறத் தூண்டிய காதலனே உங்கள் கண்ணியம் தொடர்பாகச் சந்தேகப்படுவான்.


எனவே உங்கள் காதலன் தொடர்பாக இன்னும் நீண்ட தேடல்களைச் செய்யுங்கள். அவரின் குடும்பம், சமூகம் தொடர்பான சுய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். காதலனின் பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளுடன் விரைவாகத் தொடர்பை ஏற்படுத்துங்கள். உங்கள் குடும்பத்தாரையும் காதலரின் குடும்பத்தாரையும் ஒன்று சேர்த்து ஒரு சுற்றுலாவை ஏற்பாடு செய்யுங்கள். அதன் பின் மேளம் கொட்டி, தாலி கட்டி காதல் கணவனுடன் சுற்றுலா செல்லுங்கள். (நான் கூறிய எதுவும் சாத்தியமாகாது எனின் காதலைக் கைவிட்டு கல்வியை முடித்துக் கொண்டு ஊர் திரும்பும் வழியைப் பார்க்கவும்)

**ஆண் (வயது 24)
கிளிநொச்சி**

**நான் உயர்கல்வி நிறுவனமொன்றில் கற்கிறேன். எனக்குள்ள பிரச்சனை, இரவில் தானாகவே விந்து வெளியேறி விடுகிறது. இதனால் நண்பர்களின் கேலிக்கு ஆளாக வேண்டியேற்படுகிறது. சுயமைதுனம் செய்தால் இந்த பிரச்சனையிலிருந்து தப்பிக்கலாமென நண்பர்கள் சொல்கிறார்கள். அது உண்மையா? இந்த பிரச்சனையிலிருந்து மீள என்ன வழி?**

**பதில்:** அன்புத் தம்பி! 20 வயது இளைஞனுக்கு பொதுவாக இருக்கக் கூடிய ஒரு பிரச்சினைதான் இது. இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இலிங்க முதிர்ச்சியடைந்த, கட்டிளம் பருவ ஆணுக்கு விந்து மற்றும் அதனுடன் தொடர்புடைய சுக்கிலப்பாயம் ஆகியவை உற்பத்தியாவது இயற்கையான ஒன்றே. இவ்வாறு உற்பத்தியாகிய விந்து மற்றும் சுக்கிலப்பாயம் அளவுக்கு அதிகமாகும் போது தானாகவே வெளியேறுகின்றது. பொதுவாக நித்திரையில் பாலியல் தொடர்பான கனவு ஏற்படும்போது இது இயற்கையாகவே வெளியேறுகின்றது. இதை சொப்பனஸ்கலிதம் என்பார்கள்.

உண்மையில் இச் செயற்பாடு நரம்புத் தூண்டல் தொடர்பானது. மூளைக்கு சுக்கிலத்தை வெளியேற்றும் கட்டளை கிடைத்தவுடன் மூளை அதற்குரிய உறுப்பிற்கு அக் கட்டளையைப் பிறப்பிக்கின்றது. இது கனவிலும் நடக்கலாம். நனவிலும் நடக்கலாம். நடுச் சாமத்தில் நித்திரையில் எழுந்து கதவைத் திறந்து பாடசாலைக்கு நடந்தவர்கள்கூட உண்டு. அதேபோன்ற ஒரு செயற்பாடுதான் இது.



உமது நண்பர்கள் கூறியது சரியே. சுய இன்பத்தின் மூலம் (நனவில்) மூளை சுக்கிலத்தை வெளியேற்றும் கட்டளையைப் பிறப்பித்தால் அளவுக்கதிகமாகத் தேங்கி கனவில் வெளியேற வேண்டிய தேவை இருக்காது. தம்பி! உமக்கு இன்னும் தெளிவும், விளக்கமும் தேவை எனின் க.பொ.த சா.த விஞ்ஞானப் பாடத்தில் மின் மோட்டருக்கும், மின் பிறப்பாக்கிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொண்டால் பூரணமாக விளங்கும்.

**சர்மினி (வயது 27)
சண்டிலிப்பாய்**

**எனது குடும்பம் வறுமையானது. ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். நான் கறுப்பாக இருக்கிறேன். சற்றுமெலிவாகவும் இருப்பேன். நான் அழகானவளாக இல்லையென நினைக்கிறேன். எனது நண்பிகள் எல்லோருக்கும் காதல் உள்ளது. இதுவரை எனக்கொரு காதலும் ஏற்படவில்லை. இதுவரை எந்த இளைஞனும் என்னைக் காதலுடன் பார்த்ததே இல்லை. எனக்கு இந்த வாழ்க்கையை நினைக்க உண்மையிலேயே கவலையாக உள்ளது. திருமணமாகாமல் இப்படியே இருந்தால் பின்னாளில் என்ன நடக்குமென நினைக்க, தற்கொலை செய்துவிடலாமென தோன்றும். எனக்கு என்ன பிரச்சனையென்றே தெரியவில்லை. உங்களை நான் நம்புவதால் கேட்கிறேன். என்ன செய்யலாம்?**

**பதில்:** அன்புச்சகோதரி! உங்களது கவலை, பயம் எனக்குத் தெளிவாய்ப் புரிகின்றது. உங்களிடம் ஒரு கேள்வி கேட்கின்றேன். அழகு என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்தையோ, விளக்கத்தையோ யார் மூலமாகவாவது கூற முடியுமா? அழகு, சுவை, இரசனை போன்றவை மன உணர்வுகள். அவற்றிற்கு வரைவிலக்கணமோ அல்லது பெறுமானமோ கூற முடியாது. ஒவ்வொருவரின் கண்ணுக்கும் ஒவ்வொன்றின் அழகும் ஒவ்வொரு விதமாய்த் தோன்றும். எனக்குத் தேவதையாய்த் தோன்றுபவள் எனது நண்பனுக்குச் சூர்ப்பனகையாய்த் தெரிவாள். அதேபோல் நேற்று எனக்கு அழகானவள் இன்று நடந்து போகும்போது அடக் கடவுளே என்று கூறத் தோன்றும்.

எனவே நீர் அழகானவள் இல்லை என்று உமக்கு நீரே வளர்த்துக் கொண்டுள்ள மனப்பாங்குதான் பிரச்சினையே. உமது எதிர்மறையான மனப்பாங்கின் வெளிப்பாடு உமது ஒவ்வொரு செயலிலும் வெளிப்படும்போது அதுவே எதிர்மறையான விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது.

சின்ன உதாரணம் கூறுகின்றேன். யாழ்ப்பாண வீதிகளில் மோட்டார் சைக்கிள்களில் பெண்கள் பயணிக்கின்றார்கள். வெயில் பட்டு தோல் கறுத்து விட்டால் அழகு கெட்டுவிடும் என்று ஒரு நீளக்கையுள்ள கோட் போன்ற சட்டை போட்டுக் கொள்கின்றார்கள். வெள்ளைப் பெண்கள் போட்டல் நியாயம் உண்டு. ஆனால் இனிக் கறுக்க இடமுண்டா என்று யோசிக்க வைக்கும் கறுப்பழகுப் பெண்களும் போடுகின்றார்களே. ஏன்? அவர்களின் மனதளவில் அவர்கள் தாங்கள் அழகானவர்கள் என்று எண்ணுகின்றார்கள். இந்த மனப்பான்மையே அவர்களின் ஆளுமை.

ஏன் நீர் அனுராதா ஸ்ரீராமின் கறுப்புத்தான் எனக்குப் புடிச்ச கலரு பாடல் கேட்கவில்லையா? உமது அழகை இரசிக்கவும் நிச்சயமாகப் பல ஆடவர்கள் உள்ளனர். உமது மனப்பாங்கை மாற்ற நீர் அழகு என்றெண்ணி இன்னும் அழகை மெருகூட்ட என்ன செய்யலாம் என்று எண்ணுங்கள். இன்னும் சொன்னால் உடலழகை விட உள்ளத்தழகே உயர்வானதும், நிலையானதுமாகும். எனவே உடல் நிறம் பற்றிய எதிர்மறையான எண்ணத்தை முதலில் மாற்றுங்கள். சத்துள்ள உணவுகளை உண்ணுங்கள். மிகவும் தூய்மையான, நேர்த்தியான, நாகரிகமான, உடல் தோற்றத்துக்கேற்ற ஆடைகளைத் தெரிவு செய்து அணியுங்கள். எப்போதும் கலகலப்பாகவும், மகிழ்வாகவும் இருக்கப் பழகுங்கள். பிறருடன் பழகும்போது சிறு புன்முறுவலுடன் பேசுங்கள். இவற்றின் மூலம் உங்கள் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கான காதலன் உங்களைத் தேடி வருவான். உங்கள் எதிர்கால வாழ்வு வளம் பெற எனது வாழ்த்துக்கள்.

# 12 ராசிக்காரர்களின் பணப்புழக்கம் எப்படி இருக்கும்?

ஒவ்வொரு ராசியினருக்கும் ஒவ்வொரு விதமான பணப்புழக்கம், யோகம் என்பன அவரவர் ராசியைப் பொறுத்து அமையும் என்பது ஜோதிட நம்பிக்கை. அதன்படி பன்னிரு ராசிகளும் அவற்றின் பணப்புழக்கம், யோகம் என்பன குறித்து பார்ப்போம்.


**மேஷம்:** கண்ணிமைக்கும் வேகத்தில் முன்னணிக்கு வருவதில் உங்களுக்கு நிகரானவர்கள் யாரும் இல்லை. எதிலுமே வெற்றி பெறும் யோகம் கொண்ட நீங்கள் புத்திசாலித்தனமாக எந்த காரியத்தையும் உற்று நோக்குவதால் எல்லா பணிகளிலும் லாபம் அடைவீர்கள். உங்களிடம் பணப்புழக்கம் மிக சிறப்பாக காணப்படும்.

**ரிஷபம்:** நீங்கள் வேலையில் முழுமனதுடன் உழைப்பவர், பணத்தை கடவுளாக நினைப்பவர். இருப்பினும் உங்களிடம் பணம் தங்குவது கடினம். எந்தளவுக்கு உழைக்கின்றீர்களோ அதேயளவு செலவு ஆகும். பணம் சம்பாதிப்பதில் வல்லவரான நீங்கள், மற்றவர் மீது அதிகாரத்தை பயன்படுத்து வதனால் மற்றவர்களுக்கு நீங்கள் சுயநலவாதியாக தெரிவீர்கள். நீங்கள் இலகுவாக பணக்காரனாக முடிவதில்லை.

**மிதுனம் :** உங்களிடம் பணப்புழக்கம் அதிகமாகவும் இருக்காது, பற்றாக்குறையும் ஏற்படாது. பிறப்பு முதல் இறப்பு வரை உங்களிடம் பணப்புழக்கம் ஒரே சீராக இருக்கும்

**கடகம் :**நீங்கள் உங்களது வாழ்க்கைத் துணையிடம் குடும்ப பொருளாதாரத்தை ஒப்படைத்துவிடுவீர்கள். பயணத்தால் உங்களுக்கு லாபம் அதிகரிக்கும். 14, 26, 30 வயதுகளில் நல்ல யோகத்தை பெறும் வாய்ப்பு உண்டு. பணத்தை சேமிக்கும் எண்ணம் இருக்கும். பணத்தை சம்பாதிக்க பாடுபடுவீர்கள். இருப்பினும் சிலவேளைகளில் பணத்தட்டுப்பாடு இருந்து வரும்.

**சிம்மம்:** உங்களிடம் பணப்புழக்கம் மிகச் சிறப்பாக இருக்கும். எப்போது தேவைப் பட்டாலும் உங்களுக்கு பணம் கிடைத்து விடும். நீங்கள் பணத்தை செலவழிக்க பயப்படுவீர்கள். செலவு ஏற்பட்டாலும் அதை நினைத்து கவலை கொள்வீர்கள். பண வரவு இருந்தாலும் அதற்கேற்ப செலவும் இருக்கும். பணத்தை சேமிப்பது உங்களுக்கு எளிதானதல்ல. வீட்டில் திருடு போகவும், பொருள் காணாமல் போகவும் பொருட்களை மறந்து வைத்து விடவும் வாய்ப்புண்டு. நீங்கள் வீட்டில் ஏதேனும் மிருகமோ அல்லது பறவையோ வளர்ப்பது நல்லது.



**கன்னி:** நீங்கள் பண விஷயத்தில் சிக்கனமாக இருப்பவர் மாத்திரமன்றி, பணத்தினுடைய மகத்துவத்தை நன்றாக புரிந்து கொண்டவரும் கூட. பணத்தை பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டும் என விருப்பமுடையவர். மனை வாங்கும் விஷயத்தில் பணம் செலவழித்தால் வெற்றி பெறுவீர்கள்.

**துலாம்:** வியாபாரத்தில் நீங்கள் அதிக லாபம் அடைவீர்கள். உங்களது குணநலத்தின் காரணமாக எந்த காரியத்தை செய்தாலும் அதில் அதிக லாபம் விரைவிலேயே கிடைக்கும் வாய்ப்பு உண்டு. உங்களுக்கு பணவரவு நன்றாக இருக்கும்.

**விருச்சிகம்:** உங்களது ஆசைகள் அனைத்தும் பூர்த்தியாகும். ஆனால், அதற்கு கடின உழைப்பு அவசியம். செலவை குறைப்பது நல்லது. எந்த காரியத்தையும் முழுவதுமாக முடித்தால் பண வரவு நிச்சயம். எங்கே சென்றாலும் அங்கிருந்து பணம் வரும். பணவரவால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**தனுசு:** உங்களுக்கு கொடுக்கல் வாங்கல், வாங்குதல்விற்றல் எல்லாமே இழு பறியாக இருக்கும். உங்களுக்கு அதிகம் செலவாவதால் சேமிக்க இயலாது. உங்களது வாழ்நாளில் ஒரு பெரும் செலவு செய்யும் வாய்ப்புண்டு. ஏமாற்றப்படவும் வாய்ப்புண்டு. பணம் இருந்தால்தான் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை உங்களுக்காகவே செலவழிப்பீர்கள்.

**மகரம்:** உங்களது திறமையால் லாபத்தை பெருக்கிக் கொள்ளும் ஆற்றல் கொண்டவர் நீங்கள். எந்த தொழிலை செய்தாலும் நஷ்டம் அடைய மாட்டீர்கள். தர்மம் செய்ய அஞ்சமாட்டீர்கள். உங்களது செலவை குறைக்க முடியாது. மற்றவர்களுக்கு உதவி செய்வதிலேயே பாதி நேரம் செலவழியும். சாதாரண பண நடமாட்டம் இருக்கும்.

**கும்பம்:** உங்களது வீட்டு செலவைக் கூட நீங்கள் புத்திசாலித்தனமாக குறைத்து விடுவீர்கள். உங்களுக்கு நண்பர்களை விட எதிரிகளின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும். உங்களுக்கு அசையும்அசையா சொத்துக்கள் கிடைக்கும் யோகம் உள்ளது. எப்போதும் பண நடமாட்டம் இருக்கும் நபராகவே திகழ்வீர்கள். உங்களுக்கு 25 வயதில் இருந்தே யோகம் ஆரம்பிக்கிறது. 25, 28, 40, 45, 51 மற்றும் 63ஆம் வயதுகளில் உங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். எனினும் சிறப்பான யோகம் ஏதும் உங்களுக்கு இல்லை. செலவை குறைக்க வாய்ப்பும் இல்லை. ஆனால், சொத்து சேரும் யோகம் உண்டு.

**மீனம்:** உங்களது சுய முயற்சியாலேயே பணத்தை சம்பாதிப்பீர்கள். அதிர்ஷ்டத்தை நம்பி லொத்தர் மற்றும் தரகு வேலைகளில் ஈடுபட்டால் அதிக நஷ்டம் உண்டாகும். அப்படி இருந்தாலும் உங்களது வாழ்நாள் முழுவதும் பணம் குறையாது. பணம் தேவைப்பட்டால் உடனடியாக கிடைக்கும். பணம் உங்களுக்கு சாதாரணமான ஒன்று. நீங்கள் வாங்கும் இடங்களில் அதிக கஷ்டம் ஏற்பட வாய்ப்புண்டு. வியாபாரங்களில் ஏற்ற தாழ்வு நிகழும், அவதானம் தேவை.

## இந்தவார ராசி பலன்கள்

### 21.05.2016 - 27.05.2016

**மேஷம்:** யோகாதிபதி சூரியன் இரண்டாம் வீட்டில் இருப்பதால் கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். குடும்பத்தில் சுப பேச்சு வார்த்தைகள் தொடங்கும் சூழல் உள்ளது. செவ்வாய் பலம் காரணமாக பூர்வீக சொத்து விஷயங்களில் நல்ல முடிவுகள் ஏற்படும். 5ல் ராகு தொடர்வதால் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்தனை செய்வீர்கள். சந்திரனின் சஞ்சாரம் காரணமாக அலைச்சல், பயணங்கள் இருக்கும். பயண ஏற்பாடுகளை சரிவர செய்து கொள்வது நலம் தரும். வியாபாரம் செழிப்படையும். புதிய தொழில் தொடங்கும் யோகம் உள்ளது.




**ரிஷபம்:** ராசிநாதன் சுக்கிரனின் உச்சபலம் தொடர்வதால் மகிழ்ச்சி, மனநிறைவு உண்டு. குடும்பத்துடன் இன்பச்சுற்றுலா சென்று வருவீர்கள். சூரியன் ராசியில் இருப்பதால் தடைகள் நீங்கும். நின்று போன கட்டிட வேலைகள் மீண்டும் தொடங்கும். பழைய வண்டியை மாற்றி புது வண்டி வாங்குவீர்கள். முடிந்தவரை நண்பர்களின் கோரிக்கையை தவிர்க்கவும். புதன் பார்வை காரணமாக கல்வி வகையில் செலவுகள் அதிகரிக்கும். வேலை தேடியவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் இருந்து வேலைக்கான அழைப்பு வரும். உயர்பதவியில் இருப்பவரின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும்.

**மிதுனம்:** செவ்வாய், சூரியன் விரைய ஸ்தானத்தில் இருப்பதால் நிறை, குறை உண்டு. வராது என்று நினைத்த பணம் கை வந்து சேரும். சொந்த, பந்தங்களிடம் எதையும் வெளிப்படையாக பேச வேண்டாம். மருத்துவ சிகிச்சையில் இருந்தவர்கள் குணமடைவார்கள். புதன் பார்வை காரணமாக விலையுயர்ந்த ஆபரணங்கள், ஆடைகள் வாங்குவீர்கள். சனி, சந்திரன் மூலம் சில மனக்குழப்பங்கள், தடுமாற்றங்கள் வந்தாலும் சுக்கிரனின் அருளால் சமாளித்து விடுவீர்கள். சுப விஷயமாக புதன் அல்லது வியாழக்கிழமை நல்ல தகவல் வரும்.

**கடகம்:** சனி சஞ்சாரம் காரணமாக எல்லாத் தடைகளும் நீங்கும். அலைச்சல், மனக்குழப்பம் நீங்கி புதிய உற்சாகம் பிறக்கும். சுக்கிரனின் பலம் காரணமாக பெண் மூலம் சந்தோஷம், லாபம் உண்டு. செவ்வாய் பார்வை காரணமாக புதிய சொத்து வாங்குவீர்கள். புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியம் எதிர்பார்க்கலாம். சொந்தபந்தங்கள் வருகையால் மனமகிழ்ச்சி, செலவுகள் இருக்கும். ஷேர் மற்றும் வட்டி மூலம் பணம் வரும். ஆன்மிக தாகம் அதிகரிக்கும். தொழில் லாபகரமாக இருக்கும். பெரிய ஓர்டர்கள் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.

**சிம்மம்:** ராசிநாதன் சூரியன் வலுவாக இருப்பதால் எல்லா விஷயங்களும் கூடிவரும். செவ்வாய் பார்வை காரணமாக திடீர் யோகம் உண்டு. வழக்குகளில் சாதகமான நிலை ஏற்படும். ராகு, சந்திரனின் சஞ்சாரம் காரணமாக எதையாவது யோசித்துக் கொண்டே இருப்பீர்கள். பொது விஷயங்களில் வெளிப்படையாக கருத்து சொல்ல வேண்டாம். வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல வீடு அமையும். கண் சம்பந்தமான சில உபாதைகள் வர வாய்ப்புள்ளது. உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். தொழில் சீராக நடக்கும். பணவரவு உண்டு. வேலையாட்கள் பிரச்னைகள் தீரும்.

**கன்னி:** சுக்கிரன் சுப பலமாக இருப்பதால் குடும்பத்தில் குதூகலம், மனநிறைவு உண்டு. பெண்கள் விரும்பிய இரண்டு சக்கர வண்டி வாங்கி மகிழ்வார்கள். புதன் பார்வை காரணமாக போட்டி பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். முக்கியமான பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடியும். மகள் கர்ப்ப சம்பந்தமாக இனிக்கும் செய்தி வரும். சனி பார்வை காரணமாக அலைச்சல், செலவுகள் இருக்கும். உத்யோக பணி காரணமாக ஊர் விட்டு ஊர் செல்ல நேரிடும். நண்பர்களிடையே சிறு மனவருத்தங்கள் வரலாம். வியாபாரம் லாபகரமாக நடக்கும். பணபுழக்கம் உண்டு. வேலையாட்களால் செலவுகள் இருக்கும்.

**துலாம்:** ராசிக்கு 7ல் புதன் இருப்பதால் நயமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். தந்தையிடம் இருந்து உதவி கிடைக்கும். கேதுவின் மூலம் மன சலனம், செலவுகள் இருந்தாலும் தன ஸ்தானத்தை செவ்வாய் பார்ப்பதால் எல்லாம் அனுகூலமாய் முடியும். வெளிநாடு செல்வதற்கு விசா கைவந்து சேரும். புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியம் எதிர்பார்க்கலாம். மனைவி வீட்டில் இருந்து உதவிகள் கிடைக்கும். சனி சஞ்சாரம் காரணமாக அசையும், அசையா சொத்து வாங்கும் யோகம் உள்ளது. குலதெய்வ நேர்த்திக் கடன்களை செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** செவ்வாய் சாதகமாக இருப்பதால் ஸ்திரமாக முடிவெடுப்பீர்கள். சொத்து சம்மந்தமாக நல்ல முடிவுகள் வரும். கேது 4ல் தொடர்வதால் குடும்பத்தில் ஏதாவது மருத்துவ செலவுகள் வந்து போகும். பழைய வண்டியை மாற்றி புது வண்டி வாங்குவீர்கள். குரு, சுக்கிரனின் சம சப்தம பார்வை காரணமாக செல்வாக்கு உயரும். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பெண்கள் நகைகளை இரவல் வாங்கவோ, கொடுக்கவோ கூடாது. பாடல் பெற்ற திவ்ய திருத்தலங்களுக்கு சென்று வருவீர்கள். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம்.

**தனுசு:** புதன் பார்வை காரணமாக புதிய எண்ணங்கள், திட்டங்கள் போடுவீர்கள். 4ல் சுக்கிரன் பலமாக இருப்பதால் அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். பழைய வண்டியை மாற்றி புதுவண்டி வாங்குவீர்கள். குருபார்வை காரணமாக வெளிநாடு செல்லும் யோகம் உள்ளது. சகோதர உறவுகளால் அலைச்சல், செலவுகள் இருக்கும். உத்யோகத்தில் நல்ல மாற்றங்கள் வரும். வேலைச்சுமை குறையும். கன்னிப் பெண்கள் பிடிவாத போக்கை மாற்றிக் கொள்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும் வங்கியில் இருந்து உதவி கிடைக்கும்.

**மகரம்:** பூமிக்கு அதிபதி செவ்வாய் பலம் காரணமாக எதிர்பார்ப்புகள் நிறைவேறும். புதிய சொத்து வாங்கும் யோகம் உள்ளது. தாயிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். கேது 2ல் தொடர்வதால் தேவையற்ற செலவுகள் இருக்கும். வீண் பேச்சுக்களை குறைப்பது நல்லது. சுக்கிரனின் அருளால் பொன், பொருள் சேர்க்கை உண்டு. மகளின் ஆசைகள், கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். உத்யோகத்தில் உயர் அதிகாரிகளால் மனவருத்தம் வரலாம். வியாபாரம் ஸ்திரமாக இருக்கும். புதிய ஏஜென்சிகள் எடுப்பீர்கள். பணத்தட்டுபாடு நீங்கும்.

**கும்பம்:** சுக்கிரன் 2ல் தொடர்வதால் மன மகிழ்ச்சி, பண வரவு உண்டு. இல்லறம் இனிக்கும். பேரன், பேத்திகளால் செலவுகள் வரும். ராகு 7ல் தொடர்வதால் நண்பர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். பயணத்தின் போது உடைமைகளை பாது காப்பாக வைத்துக் கொள்ளவும். தந்தை உடல்நலம் பாதிக்கப்படலாம். சனி பார்வை காரணமாக நிறைகுறை உண்டு. புதிய முயற்சிகள் வெற்றியடையும். அதிகம் சிந்தனை செய்வீர்கள். உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். பிரசித்தி பெற்ற பரிகார கோயில்களுக்கு சென்று வருவீர்கள்.

**மீனம்:** செவ்வாயின் பார்வை காரணமாக சுப விஷயங்கள் கூடி வரும். பூர்வீக சொத்தில் இருந்த இழுபறி நீங்கி நல்ல முடிவு வரும். புதன் 2ல் இருப்பதால் சாதுர்யமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல வீடு அமையும். மாமனார் மூலம் உதவிகள் கிடைக்கும். சனி பகவானின் பார்வை காரணமாக உத்யோகத்தில் திடீர் இடமாற்றம் இருக்கும். தாயார் மூலம் மருத்துவ செலவுகள் வந்து நீங்கும். புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும்.


✍ பீஷ்மர்

ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கையை வெற்றிகொள்ள வேண்டுமென்றால் கிளிநொச்சியிலுள்ள படையினருக்கு ஆனையிறவு பின்தளத்திலிருந்து உதவி கிடைக்ககூடாது. உதவியை தடுக்கும் பொறுப்பு பால்ராஜிற்கு கொடுக்கப்பட்டது.

கிளிநொச்சிக்கும் பரந்தனிற்குமிடையில் இரகசியமாக ஊடறுத்து நகர்ந்து அணியுடன் நிலையெடுத்தார் பால்ராஜ். கிளிநொச்சி மோதலில் தாக்குபிடிக்க முடியாமல் தப்பியோடி வந்த படையினர் ஊடறுத்த போராளிகளுடன் கைகலப்பில் ஈடுபட்டதை கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தேன்.

லெப்.கேணல் செல்வியின் நிலைக் கருகில் இராணுவம் குழுமிவிட்டது. ஆனமட்டும் சுட்டு படையினரை


கவச வாகனத்தை செலுத்தி சென்ற சரா


காமினி குலரட்ன

வீழ்த்தினார்கள் போராளிகள். இறுதியில் போராளிகளின் கையிருப்பில் இருந்த வெடிபொருள் தீர்ந்துவிட்டது. இராணுவம் போராளிகளை சூழ்ந்துவிட்டது. அடுத்து என்ன செய்யலாம்?

செல்வி ஒரு அதிரடி முடிவெடுத்தார். போராளிகளிற்கு உதவியாக ஆட்லறி தாக்குதல் செய்து கொண்டிருந்த ஆட்லறி அணியை தொடர்பு கொண்டார். தமது நிலை அமைந்துள்ள அமைவிடத்தை கணித்து, அந்த இடத்திற்கு ஆட்லறி செல் அடிக்க சொன்னார். எனினும், ஆட்லறி அணி தயங்கியது. போராளிகள் இருக்குமிடத்தை குறிவைத்து எப்படி செல் அடிப்பதென தயங்கி, மறுத்தார்கள். ஆனால் செல்வி உறுதியாக இருந்தார். தான் அறிவித்த அமைவிடத்திற்கு செல் அடிக்க சொல்லி உறுதியாக இருந்தார். இயன்றவரை பதுங்குகுழிக்குள் இருந்து கொள்வதாக செல்வி கூறினார். பகுதி கட்டளை தளபதியுடன் கலந்துரையாடி செல்வியின் நிலை மீது எறிகணை தாக்குதல் நடத்துவதாக முடிவாகியது.

இதற்குள் செல்வியின் நிலை வாசல் வரை இராணுவம் வந்துவிட்டது. எஞ்சிய ரவைகளை வைத்து அவர்களையும் போராளிகள் வீழ்த்திக் கொண்டிருக்க, புலிகளின் எறிகணை மழை ஆரம்பித்தது. அந்த பகுதியில் குழுமிய படையினர் பெரும்பாலானவர்கள் வீழ்ந்தார்கள்.

செல்வி இருந்த பதுக்குகுழி "ஐ" பங்கர் வகையை சேர்ந்தது. அதாவது, மேல்ப்பக்கம் மூடப்படாமல் நான்கு,


ஆனையிறவில் உள்ள கவச வாகனம்

## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 30


குடாரப்பு தரையிறக்கத்திற்கு தயாராகும் புலிகள்


குடாரப்பில் தரையிறங்கி மோட்டார் ஒன்றை நீருக்குள்ளால் கொண்டு செல்லும் பெண்போராளிகள்

# 'எனக்கு மேலேயும் செல் அடியுங்கள்'

## கட்டளை மையத்தை நிலைகுலைய வைத்த செல்வி

ஐந்து அடி நீளத்தில் வெட்டப்படும், ஒரே நீளமான பங்கர். அன்று இரவு இராணுவ பகுதிக்குள் நுழைந்து அவசர அவசரமாக வெட்டிய சிறிய பதுக்குகுழிகள் அவை. நேரடி துப்பாக்கிச் சூட்டிலிருந்து பாது காத்து கொள்ளத்தான் உகந்தவை. எறிகணை தாக்குதலிலிருந்து தப்பிக்க உகந்தவை அல்ல.

அந்த எறிகணை தாக்குதலில் ஏராளம் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். செல்வியும் சில போராளிகளும் மரணமானார்கள். இப்படியான அர்ப்பணிப்புக்களால் அந்த ஊடறுப்புசமர் வெற்றியடைந்தது. அனைத்திற்கும் முக்கிய காரணம், பால்ராஜின் திட்டமிடல், வழிநடத்தல்.

இதன்பின் பால்ராஜின் பெயர் சொன்ன அடுத்த பெரிய தாக்குதல் குடாரப்பு தரையிறக்கம். விடுதலைப்புலிகளின் பெருங் கனவுகளில் ஒன்று ஆனையிறவை கைப்பற்றல். ஆனால் பன்னிரண்டு வருடங்களாக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அதற்கு இரும்புக் கோட்டையென இராணுவம் சும்மா பெயர் வைத்திருக்கவில்லை. உண்மையிலேயே இரும்புக்கோட்டையாகத்தான் இருந்தது.

1991 இல் ஆகாய கடல் வெளி சமர் என பெயரிட்டு பிரமாண்ட தாக்குதல் ஒன்றை ஆனையிறவின் மீது தொடுத்தார்கள். அதில் போராளிகள் மரணமடைந்தார்கள். 53 நாட்கள் நடந்த இந்த சமரில் புலிகள் வெற்றியடைய முடியவில்லை. இப்பொழுதும் ஆனையிறவு பகுதியால் பயணிப்பவர்கள் ஒரு காட்சியை காணலாம். படையினர் ஒரு யுத்த கவச வாகனத்தை காட்சிப்படுத்தி, ஒரு இராணுவவீரனை நினைவு கூர்கிறார்கள். முன்னர் புலிகள் அந்த இடத்தை நினைவுகூர்ந்தனர்.

வெட்டைவெளியை கடந்து இராணுவ பகுதியை நெருக்க முடியாமலிருந்து புலிகள் கவச வாகன உத்தியை பாவித்தார்கள். இரும்பு கவசங்களால் டோசர் ஒன்றை மறைத்து, கையெறி குண்டுகளால் தாக்கப்பட முடியாதவாறு நெற் அடித்து வாகனமொன்றை தயார் செய்தனர். அதை லெப்.கேணல் சராவும் (கல்வியங்காட்டை சேர்ந்தவர்) மேஜர் குததாசும் கவச வாகனத்தை நகர்த்தி செல்ல, அதன் மறைவில் போராளிகள் முன்னேறுவது திட்டம். இந்த கவசவாகனத்தை படையினரால் தடுத்து நிறுத்தவே முடியவில்லை. படையினரின் நிலையை நெருங்கிய சமயத்தில் லான்ஸ் கோப்ரல் காமினி குலரத்ன என்ற சிப்பாய் திடீரென கவச வாகனத்தில் ஏறி, அதற்குள் கையெறி குண்டை வீசிவிட, வாகனத்திலிருந்தவர்கள் கொல்லப்பட்டனர். காமினி குலரத்னவும் உயிரிழந்தார். அவரது நினைவிடத்தையே படையினர் தற்போது உருவாக்கி வைத்துள்ளனர்.

அதன்பின் 1998 இலும் ஆனையிறை புலிகள் தாக்கினார்கள். வெற்றியடையமுடியவில்லை. இந்த அனுபவங்களை வைத்து, 2000 இல் ஒரு திட்டம் தீட்டினர். வெட்டைவெளி, மற்றும் கடலால்சூழப்பட்ட இயற்கை பாதுகாப்பை கொண்ட ஆனையிறவை நேரடியாக மோதி வெற்றிபெற முடியாதென்பதை தெரிந்த புலிகள் தீட்டியது, உலகப்போரியல் அறிஞர்களையே மலைக்க வைக்கும் திட்டம்.

வெற்றிலைக்கேணியில் இருந்து புறப்பட்ட புலிகளின் அணி 5 கடல் மைல் பயணம் செய்து குடாரப்பில் தரையிறங்கினார். கடற்படை மற்றும் கரையோர இராணுவ நிலைகளிற்கு தெரியாமல் கடலில் சுமார் 1,200 போராளிகளை கொண்டு செல்வது சாதாரண காரியமல்ல.

குடாரப்பில் தரையிறங்குவதற்கு வசதியாக இராணுவத்தை திசைதிருப்ப புலிகள் ஒரு கரும்புலி தாக்குதல் செய்தனர். பளையில் அமைந்திருந்த ஆட்லறி நிலைகள் மீது ஒரு திடீர் தாக்குதல் நடத்தினர். படையினரின் கவனம் திசைதிரும்பியிருந்த சமயத்தில் குடாரப்பில் தரையிறங்கிய போராளிகள் சுமார் பத்து கிலோமீற்றர் தூரம் மணல், சதுப்பு பகுதிகளை கடந்து இத்தாவிலில் பிரதான வீதியை ஊடறுத்து நிலைகொண்டனர். இதுவே பின்னாளில் பிரபலமான குடாரப்பு தரையிறக்கமும், இத்தாவில் BOXஉம்!

ஆனையிறவு, யாழ்ப்பாணப் பகுதியில் 40,000 இராணுவம் நிலைகொண்டிருந்தது. இத்தாவிலில் நிலைகொண்டிருந்த 1,200 போராளிகளையும் சுற்றிவளைத்து இராணுவம் மூர்க்கமாக தாக்கியது. டாங்கிகள், கவசவாகனங்கள், ஆட்லறிகள் கொண்டு இராணுவம் மூர்க்கமாக தாக்கியது. கற்பனைக்கெட்டாத பெரும் போர் அது. ஆனையிறவிற்கான உண்மையான யுத்தமுனை அதுதான். பால்ராஜ் அதை வழிநடத்தினர். வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதியிலுள்ள தளங்களை தாக்கும் முனைகளை தீபன் வழிநடத்தினார். இந்த இடங்களை கைப்பற்றியதன் மூலம் பால்ராஜ் அணிக்கான தரைத்தொடர்பு ஏற்பட்டது.


34 நாட்கள் பால்ராஜ் அணி அங்கு நிலைகொண்டதன் மூலம் ஆனையிறவு படையினருக்கு உணவு, வெடிமருந்து தட்டுப்பாடு ஏற்பட்டது. இதையெல்லாம் விட குடிதண்ணீர் பிரச்சனை ஏற்பட்டது. ஏனெனில் ஆனையிறவு படையினருக்கான குடிதண்ணீர் இயக்கச்சி பகுதியில் இருந்துதான் சென்றது. புலிகள் அதை தடைசெய்த பின்னர் படையினரால் ஆனையிறவில் நிற்க முடியவில்லை. கிளாலி கரையோரத்தால் தப்பியோடிவிட்டனர். குடாரப்பு தரையிறக்கம், இத்தாவில் ஙிளிஙீ மூலம் பால்ராஜ் இந்த அதிசயத்தை நிகழ்த்தினார்.

குடாரப்பு தரையிறக்கத்திற்கு புறப்படுவதற்குமுன் போராளிகள் மத்தியில் பால்ராஜ் சொன்னது இதைதான் "இப்பொழுது எங்களை கொண்டுபோய் இறக்கிவிடுவார்கள். பாதையெடுத்து நாங்கள்தான் திரும்பி வர வேண்டும்"

(தொடரும்)

# விருப்பம் போல் அணிய ஏற்ற பாண்ட்கள்

இளம்பெண்கள் அதிகம் விரும்பும் சுடிதார், பிஜாமா போன்றவைகளில் அணியப்படும் பாண்ட் வகைகள் போன்று ஜீன்ஸ் ரக ஜெத்கிங்ஸ், லெக்கிங்ஸ், பாட்டியாலா, பலாஸோ போன்றவை பிரபலமாகி வருகின்றன. பெண்கள் அணிகின்ற பாண்ட் ரகங்கள் ஒன்று இறுக்கமானதாக கச்சிதமானதாக உள்ளது. மற்றொன்று மிக தளர்வாக, தொளதொளவென்று உள்ளது. எப்படியிருந்தாலும் பெண்கள் தங்களுக்கு ஏற்றவாறு காலத்திற்கும், விழாக்களுக்கும் ஏற்ப அந்த பேண்ட் வகை அணிந்து அதற்கேற்ற மேல் டாப் ஆடைகளை அணிகின்றனர்.



**புதிய பொக்கெட் லெக்கிங்ஸ்:**

லெக்கிங்ஸ் அனைத்து தரப்பு பெண்களும் அணிகின்ற இறுக்கமான பாண்ட் வகை, இதில் எண்ணற்ற கலர்கள் உள்ளதால் எந்த விதமான மேலாடைக்கும் பொருத்தமான பாண்ட் வகையாக உள்ளது. லெக்கிங்ஸ் பாண்ட்கள் சுலபமாக அணியும் வகையில் அதற்கேற்ற துணிவகைகளால் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் இறுக்கமான அமைப்பு பெண்களை சற்று ஒல்லியான உருவ அமைப்பில் காட்டுவதால் பலதரப்பட்ட மேல் சட்டை வகைக்கும் ஓர் லெக்கிங்ஸ் ஒன்றும் சேர்த்து எடுத்து கொள்கின்றனர்.

லெக்கிங்ஸ் என்பவை பிளைன், பிரிண்டட் என்றவாறு வந்தன. தற்போது அதில் பொக்கெட் வைத்த லெக்கிங்ஸ் வந்துள்ளன. பிளைன் என்பவை நூறுவிதமான வண்ணங்களில் கிடைக்கின்றன. பிரிண்டட் என்பதில் விலங்குகளின் மேல் தோல் அமைப்பு, ஜிக்சார், பெட்டிகள், பூக்கள், மிலிட்டரி போன்றவை வருகின்றன. அது போல் அதிக வண்ண கலப்பின்றி பிளைன் லெக்கிங்ஸ் மாதிரியே மெல்லிய கோடுகள் பிரிண்ட் செய்யப்பட்ட லெங்கிங்ஸ் வருகின்றன.

பிரிண்டட் லெக்கிங்ஸ் 93 சதவீத கொட்டன் மற்றும் 7 சதவீதம் எலாஸ்டிக் துணி வகை இணைந்து தயாரிக்கப்பட்டதால் கோடை காலத்திலும் அணிய ஏற்றது. அது போல உடலோடு ஒட்டி பிடித்து கொள்ளும் அதிக எலாஸ்டிக் துணிவகை லெக்கிங்ஸ்ம் கிடைக்கின்றன.


**பாவையர் விரும்பும் பலாஸோ:**

பெண்கள் தற்போது பலாஸோ எனும் அதிக தளர்விலான பாண்ட் வகையின் மீது விருப்பம் கொண்டு உள்ளனர். பெரிய பாவாடை அமைப்பை வெட்டி பிரித்து தைத்த பாண்ட் போன்று இருக்கும் இதனை இரவு, பகல் என எப்போதும் அணிய ஏற்றது. குறிப்பாக இக்கோடையின் வெம்மையில் இருந்து பாதுகாக்க காற்றோட்டமான பலாஸோ பாண்ட் உதவுகிறது.

**மடிப்புகள் கொண்ட பாட்டியாலா பாண்ட் :**

லெக்கிங்ஸ், பலாஸோ போன்றவை ஒரே நேர் அமைப்பு பேண்ட் வகையாக உள்ளது. ஆனால் பாட்டியாலா என்பது கணுக்கால் பகுதி இறக்கிபிடிக்குமாறும் அங்கிருந்து மேலேழுந்தவாறு விரிவடைந்தவாறு அகலப்படுத்தப்பட்டு இடுப்பு பகுதி வரை அடுக்கடுக்கான மடிப்புகள், சுருக்கங்கள் கொண்டவாறு உள்ளன. இவை பெரும்பாலான கொட்டன் துணி வகையில் அழகிய பூக்கள் மற்றும் டிசைன்கள் பிரிண்ட் செய்யப்பட்டவாறு உள்ளது.

பெண்கள் தங்கள் மேல் சட்டைக்கு ஏற்ற வண்ணத்தில் பல வண்ணங்களில் பாட்டியாலா கிடைக்கின்றன. நவீன யுவதியர் தேவையறிந்து பாட்டியாலாவிலும் பொக்கெட் வைத்து வருகின்றன.



# குளிர்ச்சியாகவோ சூடாகவோ சாப்பிட்டா பல் கூச்சமா?

இனிப்பு, புளிப்பு, சூடான அல்லது குளிந்த உணவுகளை உண்ணும் போது பல் கூச்சம் ஏற்படுகிறதா? இதனால் உங்களுக்கு பிடித்த உணவை உண்பதில் சிரமம் ஏற்படுகிறதா? இதோ உங்கள் பல் கூச்சத்திற்கான காரணங்களும் தீர்வுகளும்...


பல் துலக்கும் போது மிகவும் கடினமான பிரஷைக்கொண்டு பல் துலக்குவதாலும், தீவிரமாக அழுத்தி பல்துலக்குவதாலும் எனாமல் பாதிப்படைகிறது. இது பல் ஈறுகளை பாதிப்படைய செய்யலாம்.


ஈறுகளில் ஏற்படும் அழற்சி மற்றும் புண்களை கவனிக்காமல் விட்டுவிடும் போது அவை ஈறு நோய்க்கு காரணமாகிறது. கிருமி தொற்று மோசமாகி, பற்களை ஆதரிக்கும் திசுக்கள் மற்றும் எலும்புகளை சேதப்படுத்துகிறது. பல் கூச்சம் இதற்கு ஒரு அறிகுறியாகும். நீங்கள் பற்களை கடித்தல் அல்லது பிடுங்குவது போன்று செய்யும் போது பற்களின் மீது மெல்லியதாக காணப்படும் எனாமல் பாதிப்படுகிறது.


பற்களின் ஈறு பகுதி சேதமடைந்து, தோல் பகுதி குறைகிறது. இதனால் பற்களின் வேர்பகுதி வெளியில் தெரியும் படியாகிறது. இதனால் பல் கூச்சம் ஏற்படுகிறது. கடுமையான பிரஸ் உபயோகிப்பது மற்றும் அழுத்தமாக பல் தேய்ப்பது ஆகியவை இந்த பிரச்சனைக்கு காரணமாக அமைகிறது.



# பெண்களின் மனதை கவரும் பூநகைகள்








பல வண்ண நிறங்களிலும் வடிவங்களிலும் பூக்களின் டிசைன்கள் தங்க, வெள்ளி மற்றும் கல் நகைகளாக தற்போது வருகின்றன. தற்போது பல புதிய வித்தியாசமான பூ டிசைன் நகைகள் வந்துள்ளன. அவை பார்க்க அசல் பூக்கள் போலவே மெல்லிய இதழ்களை கொண்டவைகளாகவும், அடுக்கடுக்கமான தோற்றம் கொண்டவைகளாகவும் காட்சியளிக்கின்றன.

***தங்கத்தில் பூக்கள்:*** மிகமிக மெல்லிய தங்கத்தகடுகளில் பூ இதழ்கள் வடிவமைக்கப்படுகின்றன. ஒளி ஊடுருவக்கூடிய அளவிலான மெல்லிய தகடாக இவை இருப்பதால் ஒவ்வொருஇதழும் மெல்லிய இழைகளாக பின்னப்பட்டது போல் காட்சியளிக்கின்றன. பல இதழ்கள் கொண்ட சிறு சிறு பூக்களை ஒன்றினைத்து மாலைகளாகவும், வரிசையாகவும் இணைத்து வளையலாகவும், ஒற்றைப் பூக்கள் கொண்ட கம்மல்களாகவும் இந்த நகைகள் வடிவமைக்கப்படுகின்றன. இந்த பூக்களின் நடுவில் சிவப்பு நிற கெம்பு அல்லது பச்சை நிற கற்கள் பதிக்கப்பட்டு மிக அழகாக உள்ளன.

***கற்களில் பூக்கள்:*** சிவப்பு நிற கெம்பு, பவள முத்து, பச்சை நிற ஜேட் கற்கள் போன்றவற்றில் அழகழகான பூக்கள் செதுக்கப்பட்டு மாலைகளாகவும், நெக்லசாகவும், வளையலாகவும், கம்மலாகவும் வடிவமைக்கப்படுகின்றன.

கற்களால் செதுக்கப்படும் இந்த பூக்கள் தங்கம் மற்றும் வெள்ளியில் எவற்றில் பதிக்கப்பட்டாலும் எடுப்பாகவும் அழகாகவும் தோற்றமளிக்கிறது. பூ வடிவத்தில் இருக்கும் தங்க டிசைனில் வண்ணக் கற்கள் பதிக்கப்பட்டு வரும் நகைகளில் ஆர்வமில்லாதவர்கள், கற்களே பூக்கள் வடிவத்தில் உள்ள இந்த நகைகளை விரும்பி அணிவார்கள்.

பூக்கள் போலவே தோற்றமளிக்கும் இப்புதிய டிசைன் நகைகள் இலைகள், காம்புகள் போன்றவற்றிற்கு பச்சை நிறம் மற்றும் இதழ்களுக்கு மற்ற வண்ணங்கள் கொண்ட எனாமல் பொலிஷ் செய்தும் பூக்களின் வடிவத்தில் நகைகள் செய்யப்படுகின்றன. அசல் பூக்கள் போல் காட்சியளிக்கும் இந்த புதிய டிசைன் நகைகள் இன்றைய இளம் பெண்களை வெகுவாகவே கவர்ந்துள்ளது.






# வீட்டு அலங்காரம்

சிறிய 'பட்ஜெட்' வீடாக இருந்தாலும் அழகாக காண்பிக்கவே பெண்கள் விரும்புவார்கள். பொதுவாக, எல்லா அறைகளுக்கும் உள் அலங்காரம் தேவை என்ற நிலையில், ஒரு சில அறைகளை நமக்கு பிடித்தமான வகையில் அழகுபடுத்த முடியும்.

*ஒரே தோற்றம்:* சமையல் அறை, 'வார்ட்ரோப்ஸ்' என்ற அலமாரிகள், பூஜை அறை, டிவியை வைப்பதற்கான 'கபினட்டுகள்', பிள்ளைகளின் புராஜக்ட் மற்றும் பரிசு கோப்பைகள் வைக்கும் கண்ணாடி பொருத்திய அலமாரிகள், பல்வேறு 'லேமினேஷன்கள்' ஆகியவற்றை ஒரே மாதிரியாக அமைத்தால், வித்தியாசமான அழகாக இருக்கும். சமையல் அறையில் 'வோட்டர் புரூப்' கொண்ட பொருட்களையும் பயன்படுத்தலாம்.

*அலமாரிகள் அவசியம்:* சுவர் அலமாரிகள் 'ஸ்லைடிங்' கதவுகள் கொண்டதாக இருப்பது வழக்கம். வீட்டில் குறைவான உபயோகம் கொண்ட பொருட்களை சுவர் அலமாரிகள் அல்லது மர கதவு பொருத்தப்பட்ட 'லாப்ட்' அமைப்புகளில் வைத்து பராமரிப்பது வழக்கம். பொதுவாக கொன்கிரீட் லாப்ட்கள் அதிகமாக அமைப்பதில் பலரும் ஆர்வம் காட்டுவதில்லை. 'வார்ட்ரோப்' அமைக்கும்போது மேற்கூரையை தொடும் வகையில் உயரமாக அமைத்துவிட்டால், சூட்கேஸ்கள் உள்ளிட்ட 'டிராவல் பேக்' போன்றவற்றை அவற்றில் வைப்பது சுலபமாக இருக்கும்.

*சுவர் அலமாரிகள்:* 'வோல்க் இன் க்ளோசட்' என்ற அலமாரிகளை உள்ளே அமைத்து ஒற்றை கதவு பொருத்தப்படும் முறையானது இப்போது மெதுவாக பல இடங்களில் பரவி வருகிறது. ஒற்றைக் கதவு என்பதால் பொருட்கள் வைக்க நிறைய இடம் கிடைக்கும். நமது செலவுகளை பொறுத்து இரண்டு அறைகளுக்கு இடைவெளிகளில் இதை அமைத்துக்கொள்ளலாம். வீட்டு கட்டுமான பணிகளின்போதே இந்த முறைக்கான இடத்தை கச்சிதமாக தேர்வு செய்து கொள்வது சிறப்பு.

*'ஸ்கர்டிங்' பலகைகள்:* நவீன சமையலறை அமைப்பில் கவனிக்க வேண்டிய விஷயம், கபினட்டுகளை தாங்கக்கூடிய 'புஷ்' அமைப்பை மறைக்கும் 'ஸ்கர்டிங்' என்ற சிறிய பலகைகள் ஆகும். அங்கே குப்பைகள் சேராமல் தடுக்கவும் இந்த அமைப்பு பயன்படும். இது மரத்தால் செய்யப்பட்டதாக இல்லாமல் 'பி.வி.சி' தயாரிப்புகளான 'பிளாஸ்டிக்' பொருள்கள் மூலம் அமைத்து, தண்ணீர் பாதிப்புகள் வாராமல் தடுக்கலாம்.

*அழகிய படுக்கையறை:* படுக்கையறை கதவு திறந்தவுடன் கண்ணில் படுக்கை படாதவாறு அமைக்கவேண்டும். போதுமான வெளிச்சம் இருக்குமாறு ஜன்னல்களை கச்சிதமாக அமைக்கவேண்டும். அறை நடுவில் கட்டில் போடும்போது 'சைட் டேபிள்' இருப்பின் அவற்றின் மீது புத்தகங்களை வைத்து உபயோகப்படுத்தலாம்.



# பெண்களிடம் மலட்டுத்தன்மை இருப்பதை வெளிப்படுத்தும் அறிகுறிகள்

பெண் கருவுறாமைக்கு இண்டோமெட்ரியோசிஸ் (endometriosis), ஃப்லொபோபியன் குழாய்களில் அடைப்பு அல்லது பாலிசிஸ்டிக் கருப்பை அறிகுறி (பிசிஓஎஸ்), ஹார்மோன் சமநிலையின்மை, உண்ணும் கோளாறுகள், மன அழுத்தம், எடை அதிகரிப்பு அல்லது நீர்க்கட்டிகள் ஆகியவை காரணமாக உள்ளன. சில அறிகுறிகளை வைத்து இது போன்ற பிரச்சனைகளை கண்டறியலாம்.

உங்களால் அறிய முடியவில்லை என்றால் மருத்துவரை அணுகி தீர்வு பெறலாம். கீழ்காணும் பிரச்சனைகள் உங்களுக்கு இருந்தால், உங்களது குழந்தைக் கான கனவு இதோடு முடிந்துவிட்டது என கவலைப்பட வேண்டாம். இவை பெரும்பாலும் தீர்வுகான கூடிய பிரச்சனைகள் தான். சிறிது தாமதம் ஆனாலும் கட்டாயம் நீங்கள் குழந்தை பெற முடியும்.

உங்களுக்கு மிகவும் சீக்கிரமாகவோ அல்லது நீண்ட காலம் தள்ளியோ மாதவிடாய் ஏற்படுவது கூடாது. மாதவிடாய் சரியாக தான் இருக்கிறது என்றால், மாதவிடாய் காலங்களில் இடுப்பு பகுதியில் அதிக வலி இருக்கிறதா என பார்க்க வேண்டும். அதிகமான வலி கூட கருவுறுதலை பாதிக்கும். மாதவிடாய் வராமல் போவது பிரச்சனையை இரண்டு மடங்காக்கும். காலம் தவறிய மாதவிடாயானது பிசிஓடி பிரச்சனைக்கும், வலி மிகுந்த மாதவிடாய், இண்டோமெட்ரியோசிஸ் பிரச்சனைக்கும் காரணமாகிறது.

உங்கள் கருப்பை வாய் சளி தடிமனாக இருந்தால் அது விந்தணு உள்ளே செல்வதை தாமதமாக்குகிறது. விந்தணு கர்ப்பபைக்குள் செல்வதற்குள் இறந்துவிடுகிறது. கருப்பை வாய் சளி வளமான தூரத்தில் இருக்கும் போது அது விந்தணுவை வறட்சியாக விடுவதில்லை மற்றும் எளிதாக கருப்பைக்கு எடுத்து செல்கிறது. உங்கள் கருப்பை சளியானது, முட்டையின் வெள்ளை திரவத்தை போன்று இல்லை என்றால் நீங்கள் கருவுறுதலில் பிரச்சனை இருக்கலாம்.

கருப்பை இரத்தப்போக்கிற்கும் மாதவிடாய்க்கும் சம்பந்தம் இல்லை. இந்த கட்டிகள், கருப்பையில் உள்ள தசை திசு அதிகரிக்கும்போது உருவாகும். துரதிருஷ்டவசமாக, ஃபைப்ராய்டுகள் கூட அசாதாரண இரத்தப்போக்கு மற்றும் கருவுறாமைக்கு காரணமாக அமைகின்றன. உட்புற குழி அல்லது கருப்பை மையத்தின் அருகில் இருந்தால், அவற்றை நீக்க அறுவைச் சிகிச்சை செய்து அவசியமாகலாம். நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்களா? இதனால் கருச்சிதைவு ஏற்படலாம். அதனால் தான் ஆரம்ப காலத்திலேயே கண்டறிவது அவசியமாகிறது.

உடலுறவு வலியை தராது. உடலுறவு எண்டோமெட்ரியோசிஸின் போது அல்லது அதற்குப் பின் உங்களுக்கு வலி ஏற்பட்டால் அது பிரச்சினையாக இருக்கலாம். இந்த நிலை கருவுறாமை ஒரு முக்கிய காரணம் ஆகும்.

மனநிலை மாற்றம் மற்றும் தூக்கமில்லாத இரவுகள் தவிர, PID தாடை திசுக்கள் பல்லுயிர் குழாய்களில் உருவாகலாம். இந்த வடுக்கள் கர்ப்பம் அடைவதற்கு கடினமாக இருக்கும், இதனால் கர்ப்பத்திற்கு கூடுதல் தடை ஏற்படுகிறது. உண்மையில், PID இன் 10 நிகழ்வுகளில் ஒரு முறை கருவுறாமைக்கு காரணமாக இருக்கும். காலம் தாமதப்படுத்தப்படுகிறது . பின் வயிற்றுப் பகுதியில் அல்லது அடி வயிற்றுப் பகுதியில் வலி இருந்தால் PID குற்றம் இருக்கலாம். இண்டோமெட்ரியோசிஸ் இருந்தால், கால் மற்றும் பின்புற இடுப்பு வலி ஏற்படலாம்.

இது போன்ற அறிகுறிகளை உணர்ந்தால் உடனடியாக மருத்துவரை சந்தித்து தீர்வு காணுங்கள்.



# விக்கி vs கூரே

## நடுவில் புகுந்து விளையாடும் அதிகாரிகள்!

ஸ்கானன்

வடமாகாண முதலமைச்சருக்கும் ஆளுனருக்கும் இடையில் ஒரு பனிப்போர் ஏற்பட்டுள்ளது. அதிகாரிகளின் நியமனம், இடமாற்றம் தொடர்பில் ஏற்பட்டுள்ள இந்த பனிப்போர், மீண்டும் மாகாணசபை எதிர் ஆளுனர் என்ற நிலைக்கு கொண்டு செல்லுமா என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதலமைச்சர் செயலாளர் உள்ளிட்ட சில அதிகாரிகளை அதிரடியாக இடமாற்றம் செய்து ஆளுனர் "இறங்கி விளையாட" தொடங்கியதும் இந்த சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இந்த சர்ச்சைகள் ஏன் ஏற்பட்டது, இதன் பின்னணி என்ன என ஆராய்ந்தபோது, கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக பல அதிர்ச்சி தகவல்கள் கிளம்பின.

வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் ரூபினி வரதலிங்கம் உள்ளிட்ட சிலரது இடமாற்றம் முதலமைச்சருக்கு தெரியாமல் நடந்ததை தொடர்ந்தே இந்த சர்ச்சை ஏற்பட்டுள்ளது. முதல்வருடன் கலந்தாலோசிக்காமல் முதலமைச்சர் அமைச்சின் செயலாளரை எப்படி மாற்றலாம் என்ற சர்ச்சையே இப்பொழுது விஸ்பரூபம் எடுத்துள்ளது.


இந்த சர்ச்சையை ஆராய்ந்தபோது, இது கடந்த சில வாரங்களாகவே இரகசியமாக நடந்து கொண்டிருந்தது தெரிய வந்தது. வடக்கு விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன் இடமாற்றத்துடன் இந்த இழுபறி ஆரம்பித்துள்ளது.

அரச நிர்வாக சேவையில் இளையவரான பற்றிக் நிரஞ்சன் விவசாய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார். பொதுவாக செயலாளர்களை நியமிக்கும்போது அமைச்சர்களின் விருப்புத்தான் முக்கியமான கவனிக்கப்படுகிறது. அமைச்சரும் செயலாளரும் ஒத்திசைவாக செயற்பட முடியாதவர்களாக இருந்தால் அந்த அமைச்சு செயலற்றதாகிவிடும் என்பதால், உத்தியோகப்பற்றற்ற முறையில் இது நடைமுறையில் உள்ளது.

விவசாய அமைச்சு மற்றைய அமைச்சுக்களுடன் ஒப்பிடும்போது ஓரளவு வினைத்திறனுடன் செயற்பட்டதை அவதானிக்கலாம். இதில் பற்றிக் நிரஞ்சனின் பங்கும் முக்கியமானது. எனினும், பற்றிக் நிரஞ்சன் அந்த பதவிக்கு தகுதியானவர் அல்லவென திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

பற்றிக் நிரஞ்சன் இடமாற்றம் செய்யப்பட்டு முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஸின் இடத்திற்கு நியமிக்கப்பட்டார். மோகன்ராஸ் மாகாண நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டார். இதன் அர்த்தம் அவர் விவசாய அமைச்சின் செயலாளராக்கப்படுவார் என்பதே. எனினும், மோகன்ராஸை விவசாய அமைச்சு அதிகாரிகள் விரும்பாததால், அந்த நியமனம் தவிர்க்கப்பட்டு வரதீஸ்வரன் விவசாய அமைச்சின் செயலாளராக்கப்பட்டார்.

பற்றிக் நிரஞ்சன் ஏற்கனவே மத்திய அமைச்சு நிர்வாகத்தில் செயற்பட்டு, மாகாண நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டு ஒரு வருடத்திற்குட்பட்ட காலப்பகுதிதான் ஆகியிருந்தது. இந்த குறுகிய காலப் பகுதியில் அவர் மீண்டும் மத்திய நிர்வாகத்திற்கு மாற்றப்பட முடியாது. இந்த நிர்வாகப் பிடியை பற்றிக் நிரஞ்சன் பிடித்தபோது, அவர் மீண்டும் மாகாண நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டார். ஆனால் ஒரு குறிப்பான சம்பவம் நடந்தது. அவர் மாகாண நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டபோது, அவரது தகுதிக்கு பொருத்தமான பணிதான் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. வழக்கமான இடமாற்றங்களில் இப்படியான குறிப்புக்கள் இடப்படுவதில்லை, இதன் பின்னணியில் அதிகாரமுள்ள கைகள் உள்ளன என்கிறார்கள் முதலமைச்சர் ஆதரவாளர்கள்.



விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் முதலமைச்சர் ஆதரவாளர். முதலமைச்சர் ஆதரவாளர்களை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்களில் ஒன்றுதான் இது என்பது அவர்கள் வாதம்.

இதேபோன்ற ஒரு சர்ச்சை வடமாகாண கூட்டுறவுத்துறை நியமனங்களிலும் நிகழ்ந்துள்ளது. கூட்டுறவு அமைச்சு முதலமைச்சரின் நிர்வாகத்தில் செயற்பட்டவரை, அப்போதைய அதன் ஆணையாளர் மதுமதிதான் முழுமையாக அதனை கட்டுப்படுத்தினார். முதல்வர் அந்தப்பக்கம் தலைவைத்தும் படுப்பதில்லை. வடக்கு அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் நீண்டகாலம் கூட்டுறவுத்துறையில் பணியாற்றியவர். இதனால் அவரது செல்வாக்கு அங்கு இருந்ததாகவும், கூட்டுறவு அமைச்சு ஐங்கரநேசனிடம் மாற்றப்பட்ட பின்னர் அதற்கு வாய்ப்பில்லாமல் போனதாகவும் கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக மாகாணசபை அமர்வில் மதுமதியை பகிரங்கமாக உறுப்பினர்களால் விமர்சிக்கப்பட்டார். இதனால் விரக்தியடைந்து மதுமதியே பதவியிலிருந்து இடமாற்றம் பெற்றுசென்றுவிட்டார். பதிவாளராக செயற்பட்ட வாகீசனும் மாநாகரசபைக்கு மாற்றப்பட்டதால், கூட்டுறவுத்துறை சிக்கலிற்குள் இருந்தது.

கூட்டுறவுத்துறையை நிர்வகிக்கும் இரண்டு அதிகாரிகள் பதவியும் வெற்றிடமாக இருந்ததால், ஆணையாளர் பதவியையாவது நிரப்ப கூட்டுறவு அமைச்சு முயற்சித்தது. அண்மையில் பிரதேச செயலாளர்கள் இடமாற்றத்தின்போது, பருத்தித்துறை பிரதேசசெயலராக இருந்த ஜெயசீலன் மாகாண நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டார். கூட்டுறவு ஆணையாளராக அவர் நியமிக்கப்படவிருந்தார். அரசஅதிபர் இதற்கான ஒப்புதலை வழங்கியபோதும், மத்திய அரசு அவரை இதுவரை விடுவிக்காததால் அது சாத்தியமாகவில்லை.

இதன்பின்னர் வடக்கு முதல்வரும், விவசாய அமைச்சரும் வடக்கு ஆணையாளரை சந்தித்து கூட்டுறவு ஆணையாளர் நியமனம் தொடர்பாக பேசியிருக்கிறார்கள். முதல்வரின் சிபாரிசின்படியே ஒருவரை நியமிக்க ஆளுனர் சம்மதித்திருக்கிறார். சிவகரனின் பெயரை அப்பொழுது முதல்வர் சிபாரிசு செய்தார்.

எனினும் நடந்தது வேறு. ஏப்ரல் 19ம் திகதியிடப்பட்ட கடிதம் 21ம் திகதி (வெள்ளிக்கிழமை) விவசாய அமைச்சருக்கு கிடைத்துள்ளது. அதில் 20ம் திகதியிலிருந்து ஆணையாளராக அஞ்சலி செயற்படுவார் என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நியமனத்தில் மாற்றம் செய்யப்படாமலிருப்பதற்காகவே 19ம் திகதியிடப்பட்டாலும் இரண்டுநாள்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

**முதலமைச்சரின் செயலாளர் ரூபினி வரதலிங்கம் உள்ளிட்ட சிலரது இடமாற்றம் முதலமைச்சருக்கு தெரியாமல் நடந்ததை தொடர்ந்தே இந்த சர்ச்சை ஏற்பட்டுள்ளது. முதல்வருடன் கலந்தாலோசிக்காமல் முதலமைச்சர் அமைச்சின் செயலாளரை எப்படி மாற்றலாம்...**

ஆளுனரின் அதிரடிக்கு ஒரு காரணம் கூறப்படுகிறது. கூட்டுறவு ஆணையாளராக இருந்த மதுமிதா அந்த பதவியிலிருந்து விலக விரும்பியபோது, வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் - இடமாற்றம் செய்தார். அது தனது கடமையென ஆளுனர் கருதுவதாக கூறப்படுகிறது. தான் நியமனம் வழங்கியவரை, தனக்கு தெரியாமல் இடமாற்றம் வழங்கப்பட்டதன் பதிலடியாகத்தான், ஆளுனர் அதிரடி காட்டுகிறார் என்றும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுண்டு.



# பேஸ்புக்கிற்கே பேய் பிடித்த சுடலை பிரச்சனை!

பிறைவாணன்

சுடலைப் பக்கம் போனால் பேய் பிடிக்கும் என்று சொல்வார்கள். இந்தக் கதையைச் சொல்லி சிறு பிள்ளைகளை மிரட்டியும் வைத்திருக்கிறார்கள். இறந்த மனிதனின் உடலை எரிப்பதால் அதில் இருந்து வெளியேறும் நச்சுப் புகை சுவாசத்துக்கு கூடாது என்பதால் பேய் பிடிக்கும் என்ற கதையை விட்டிருக்கிறார்கள். இது தெரியாத பலர் சுடலையில் பேய் இருக்கிறது. அந்த வழியால் போகக்கூடாது என்று இந்த நவீன காலத்திலும் சொல்லி வருகின்றனர். பேய் இருக்குதோ இல்லையோ சுடலைக்கு அருகில் மக்கள் குடியேறியும் வருகின்றனர். இதனால் காலப் போக்கில் சுடலையை எடுக்கச் சொல்லி பெரும் பிரச்சினையை உண்டுபண்ணியும் விடுகின்றனர்.

ஒரு ஊரில் வாழ்கிறதுக்கு ஒரு இடம் இருப்பதுபோல் நாங்கள் இறந்தால் எமது உடலை எரிப்பதற்கோ அல்லது புதைப்பதற்கோ ஒரு இடம் இருக்க வேண்டும். அது எல்லா ஊரிலையும் கண்டிப்பாக இருக்கும். எமது மக்கள் வாழ்கிற இடத்துக்காக சண்டை பிடித்த வரலாறு இருக்கிறது. ஆனால் நாம் இறக்கும் போது தகனம் செய்து வந்த மயானத்துக்கு கூட பிரச்சினை எழுகிறது. மயானம் என்று தெரிந்தும் அந்த இடத்தின் உரித்துடையவர்களிடமிருந்து மிரட்டி சண்டை பிடித்து மயானத்தை பிடிக்கும் காலம் இப்பத்த காலமாகிவிட்டது. அதுவும் வலுக்கட்டாயமாக ஒரு இடத்தை பிடிப்பது என்பது பெரும் பிரச்சினைக்கு வழிவகுக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

பெரும்பான்மை பலத்தால் அடிதடி மூலம் சிறுபான்மையிடம் இருந்து எதையும் சாதித்து விடலாம் என்று நினைத்தவர்களின் மயானப் பிரச்சினை இது. அதாவது மைதானத்துக்கு உரிமையுள்ளவர்கள் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட பிரதேசமாகும். அதனை பறிக்க நினைப்பவர்கள் இவர்களை விட கூடுதலான மக்கள் வாழும் பிரதேசமாகும். இரண்டும் அயல் கிராமங்கள் ஆகும். பெருபான்மையினர் தாம் செய்வது நியாயமானதா என்று கூட சிந்திக்காமல் களத்தில் இறங்கிவிடுவது எந்த விதத்தில் நியாயமாகும்.

வலிகாமம் கிழக்குப் பகுதியில் உள்ள சிறுப்பிட்டி மேற்குப் பகுதியில் உள்ள கிந்துசிட்டி இந்து மயானத்தில் உடல் தகனம் செய்ய விடாது அயல் கிராமமான புத்தூர் மேற்கு கலைமதியைச் சேர்ந்த இளைஞர்கள் தடுத்ததால் பிரச்சினை பூதாகரமாக எழுந்துள்ளது. இந்தப் பிரச்சினை நீதிமன்றம் வரை சென்று அடாத்தாக மயானத்தை பிடிக்க முடியாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டும். 200 வருடங்களுக்கு மேலாக மயானத்தை பயன்படுத்தி வந்த மக்கள் இன்று அந்த மயானத்தை பயன்படுத்த முடியாதளவுக்கு பிரச்சினையை அயல் கிராம மக்கள் தொடர்ந்தும் முடுக்கிவிட்டிருக்கிறார்கள்.

அதாவது கலைமதி இளைஞர்கள் ஒரு விளையாட்டு மைதானத்தை இந்த 15 பரப்பு மயானத்தில் உருவாக்குவதற்காக அந்த மயானத்திற்கு உரிமையுடையவர்கள் இறந்த உடலை தகனம் செய்யவிடாமல் தடுத்தும் வருகின்றனர். கடந்த பங்குனி மாதம் 7 ஆம் திகதி இந்த மயானத்தில் இறந்த ஒருவரின் உடலை தகனம் செய்ய முற்பட்ட போது தான் கலைமதி மக்களால் பிரச்சினை எழுந்தது. அதாவது இன்று வரை இந்தப் பிரச்சினை தீர்வின்றித் தொடர்கிறது.

கடந்த சித்திரை மாதம் 6 ஆம் திகதி அடாத்தாக மயானத்தை பிடிப்பதற்காக சில இளைஞர்கள் அந்தப் பிரதேசத்துக்குள் இறங்கி வீதியால் சென்ற அந்தப் பிரதேச இளைஞர்களை தாக்கியும் உள்ளனர். இதனால் 4 இளைஞர்கள் காயங்களுக்கு உள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றும் உள்ளனர். வீதியால் சென்ற பலர் அதாவது பெண்கள் முதியவர்கள் என்று கூடப் பார்க்காமல் இவர்களால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் அருகில் இருந்த சி.சி.ரி கமெராவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கலைமதி பிரதேச மக்கள் மயானத்துக்கு அருகில் குடியிருந்தால் சுகாதார சீர்கேடு ஏற்படும் என்று தெரிந்தும் அருகில் காணியை வாங்கி குடியிருந்து விட்டு இப்பொழுது அந்த மயானத்தில் இறந்தவர்களின் உடலை தகனம் செய்யும் போது கிளம்பும் புகையினால் சுகாதார சீர்கேடு இடம்பெறுவதாக தெரிவிக்கின்றனர். மயானம் என்று தெரிந்தும் அருகில் காணியை வாங்கிவிட்டு மயானத்தை இல்லாமல் செய்ய முயற்சிப்பது எந்த விதத்தில் நியாயமாகும். மயானத்தை பிடிப்பதற்காகவே தான் அருகில் காணியை வாங்கி குடியேறினார்கள் என்று மயானத்துக்கு உரித்துடைய மக்கள் தெரிவிக்கின்றனர்.

விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு மயானத்தைக் கேட்டால் அந்தப் பகுதி மக்கள் இறந்த உடல்களை தகனம் செய்வதற்கு எங்கு போவார்கள் என்று மயானத்தை அபகரிக்க நினைப்பவர்கள் சிந்தித்திருந்தால் இந்தப் பிரச்சினைக்கு ஆரம்பத்திலேயே ஒரு முடிவினை எட்டியிருக்க முடியும். அப்படி நினைக்காததால் தான் இந்தப் பிரச்சினை பல மாதங்களைக் கடந்தும் தொடர்கிறது.

இத் தாக்குதல் சம்பந்தமாக உரிய ஆதாரங்களுடன் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த போதும் பொலிஸார் இந்தப் பிரச்சினையில் நழுவல் போக்காக செயற்பட்டு வருவதாகவும் பிரச்சினையை ஏற்படுத்தும் கலைமதி மக்களுக்கு சார்பாக செயல்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸார் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

இந்த மயான விவகாரம் பேஸ்புக்கில் பேயாட்டம் ஆடுகிறது. இதை தனியே சாதிப்பிரச்சனையாக இருதரப்பு பார்க்கிறது. யார் முதலில் குடியேறினார்கள் என்று சட்டப்பிரச்சனையாக இன்னொரு தரப்பு அணுகுகிறது. இரண்டும் முழுமையற்ற பார்வையென்பதால், இவற்றை பார்த்து பலர் கிலி பிடித்து போயுள்ளனர்.







தாமதமாக வெள்ளிக்கிழமை கிடைத்ததாக முதலமைச்சர் தரப்பு கருதுகிறது.

எனினும் மறுநாள் விவசாய அமைச்சர் ஆளுனரை தொடர்பு கொண்டு தனது அதிருப்தியை தெரிவித்திருக்கிறார். அப்பொழுதுதான் அஞ்சலி நியமனம் தொடர்பில் ஆளுனர் அறிந்ததாக கூறியிருக்கிறார். சிவகரனிற்கு நியமனம் வழங்கும் கடிதத்திலேயே தான் கையெழுத்திட்டதாக ஆளுனர் கூறியுள்ளார். ஒன்றில் ஆளுனர் கையெழுத்திட்ட பின் சிவகரனின் பெயர் மாற்றப்பட்டு அஞ்சலியின் பெயர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அதை அங்குள்ள பொறுப்பான அதிகாரி யாரோதான் செய்திருக்க வேண்டும். அல்லது ஆளுனர் நிலைமையை சமாளிக்க அப்படி கூறியிருக்க வேண்டும். பின்னர் சிவகரன் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இதற்குள் முதலமைச்சர் தரப்பில் ஒரு பலவீனம் இருந்துள்ளது. முதலமைச்சர் அமைச்சின் செயலாளராக இருந்த திருமதி வீ.கேதீஸ்வரன் class I தரத்தை சேர்ந்தவர். எனினும் Super Class தரத்தை சேர்ந்தவர்தான் அந்த இடத்தில் நியமிக்கப்பட வேண்டும். எனினும், முதலமைச்சர் இதை பொருட்படுத்தவில்லை.

இந்த நிலையிலேயே ஆளுனர் அதிரடி நியமனங்கள் சிலவற்றை வழங்கியுள்ளார். முதலமைச்சரின் செயலாளர் திருமதி வீ.கேதீஸ்வரனை சற்று பதவியிறக்கி அதே அமைச்சில் மூத்த உதவிச்செயலாளராக நியமித்துள்ளார். முதலமைச்சின் செயலாளராக ரூபினி வரதலிங்கத்தையும், வடமாகாண பொதுச்சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளராக சி.ஏ.மோகன்ராஸையும் ஆளுனர் நியமித்துள்ளார்.

இந்த தகவல் முதல்வரிற்கு எட்டியபோது, கொதித்துபோனாராம். புதிய பதவிகளை ஏற்க வேண்டாம், மீறி ஏற்றால் நடவடிக்கை எடுப்பேன் என உடனடியாகவே மூவருக்கும் கடிதம்மூலம் அறவித்துள்ளார்.

இந்த இடத்தில் முதலமைச்சர் அவசரப் பட்டு விட்டார் என்பதே சட்ட வல்லுனர்களின் கருத்து. இந்த நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஆளுனரிடம்தான் உள்ளது.தனது அதிகாரத்திற்கு அப்பால் ஆளுனருடன் போட்டிக்களமொன்றில் முதல்வர் குதித்துள்ளார். தனது செயலாளராக இருந்த திருமதி வீ.கேதீஸ்வரனின் இடமாற்றத்தை முதல்வர் ஏற்றுக்கொண்டு, தனக்கு பொருத்தமான ஒருவரை நியமிப்பதே புத்திசாலித்தனமாக இருந்திருக்கும் என்கிறார்கள். ஏனெனில், அதிகார அஸ்திர பலத்துடன் நிற்கும் ஆளுனருடன் வெற்றுக்கையுடன் மோதுகிறார் முதல்வர். விவசாய அமைச்சில் இதே சிக்கல் எழுந்தபோது, பற்றிக் நிரஞ்சனின் இடமாற்றத்திற்கு விவசாய அமைச்சர் இசைந்து கொடுத்து நிலைமையை சமாளித்தார். முதலமைச்சர் அவசரப்பட்டது. முதலமைச்சர் தரப்பிற்கு இன்னொரு பின்னடைவை கொடுக்ககூடும்.


சி.ஏ.மோகன்ராஸைற்கு தகுந்த கடமை வழங்கப்படாததற்கு காரணமாக சாதிய மனநிலை இருப்பதாக மாகாணசபையில் திடீரென ஒரு குண்டு போடப்பட்டது. அண்மைக்காலமாக எல்லா விவகாரத்திலும் சாதிய காரணங்களை தேடும் விசித்திர போக்கொன்று உருவாகிவருவதும் குறிப்பிடத்தக்கது.


# மீண்டும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்த வேலைத்திட்டத்தில் ஊழலா?


**வன்னிமது**


மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தம்மை தேர்ந்தெடுத்த மக்களிற்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றனர். அவ்வாறு மக்களின் தேவைகளின் அடிப்படையில் நேரடியாக முன்னெடுக்கப்படும் வேலைகள் மட்டுமே அவர்களிடம் சென்றடைகின்றது. இவ்வாறான வேலைத்திட்டங்கள் பொதுவாக வடமாகாண சபை உறுப்பினர்களிற்கு ஏதுவானதாக இருக்கின்றது. மாறாக பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு இது பெரும்பாலும் சாத்தியமற்றதாகவே உள்ளது. ஏன் எனில் இவர்கள் மக்களின் தேவைகளிற்காக வழங்கப்படும் நிதியானது அந்தந்த பிரதேச சபை அல்லது பிரதேச செயலகத்தின் ஊடாக கேள்வி கூறல் மூலம் ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்டே வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இவ்வாறு மக்களின் தேவைகளிற்காக தரமான வேலைக்காக வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப் படும் பணம் ஒப்பந்தக்காரர்களினால் தமது இலாபத்தை கருத்திற்கொண்டு செய்வதனால் பாராளுமன்ற உறுப்பினரின் நிதி மக்களிற்கு முழுமையாக சென்றடைவதில்லை.

அத்துடன் ஒருசில ஒப்பந்தக்காரர்களால் மேற்கொள்ளப்படும் தரம் குறைந்த வேலைத் திட்டங்களினால் மக்கள் பிரதிநிதியின் மேல் மக்களிற்கு அதிர்ப்தி ஏற்படு கின்றது. இவ்வாறான ஒரு செயற்பாடு வவுனியா புளியங்குளம் புரட்சி விளையாட்டுக்கழக மைதான புனரமைப்பில் நடைபெற்றுள்ளதாக கழகத்தினால் கூறப்படுகின்றது.


புரட்சி விளையாட்டுக்கழகம்
PURADCHI SPORTS CLUB
Puliyankulam,
Vavuniya North,
Vavuniya







முன்னெடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக அம்மைதானம் மீண்டும் புரட்சி விளையாட்டுக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மீண்டும் வழங்கப்பட்ட மைதானத்தினை தமது விளையாட்டு சார் தேவைக்காக பயன்படுத்த முடியாத நிலையில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தனிடம் புரட்சி விளையாட்டுக்கழகத்தால் மைதான புனரமைப்பிற்கு உதவி செய்ய கேட்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் 200,000 ரூபா நிதியினை மைதான புனரமைப்பிற்காக ஒதுக்கினார். அதன் அடிப்படையில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு இந்த நிதி வழங்கப்பட்டது. புளியங்குளம் புரட்சி விளையாட்டுக்கழக மைதான புனரமைப்பிற்காக வழங்கப்பட்ட 200,000 ரூபா பணத்தில் 6000 ரூபா வரி கழிக்கப்பட்டு 194,000 ரூபா திட்ட வேலைக்காக ஒதுக்கப்பட்டது. இந்நிதியினை கொண்டு பிரதேச செயலகத்தினால் மைதானாத்தை சுற்றி பொலிஸாரினால் அமைக்கப்பட்ட மண் தடுப்பனை வெட்டி அருகில் இருந்த பள்ளம் நிரவுதல் மற்றும் மைதானத்திற்கு மண் பரவல், றோலர் போடுதல் போன்ற வேலைத்திட்டங்களிற்காக கேள்வி மனு கோரல் விடுக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் மூன்று ஒப்பந்தக் காரரின் கேள்வி மனுக்கள் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றது. இதில் 38,800 ரூபா குறைத்து கேட்கப்பட்ட ஒப்பந்த காரருக்கு இவ் மைதான புனரமைப்பிற்கான வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டது. இவ்வாறு குறைக்கப்பட்ட 38,800 ரூபா நிதி அரசிற்கு திருப்பி அனுப்பப் படுகின்றமை இங்கே கவனிக்க வேண்டிய விடயமாகும்.

27.08.2016 மைதான புனரமைப்பிற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதற் கட்டமாக மைதானத்தை சுற்றி அமைக்கப்பட்டிருந்த தடுப்பணையினை அகற்றி அதன் அருகில் உள்ள பள்ளத்தை நிரவும் வேலை டோசர் மூலம் நடைபெற்றது. இதற்கமைவாக 244 கியூப் (692அ) தடுப்ணையின் மண் டோசர் மூலம் அகற்றப்பட்டதுடன், மோட்டர் கிரடர் மூலம் சமன் செய்யப்பட்டது.

இவ்வேலைத்திட்டங்களின் போது புரட்சி விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் இவ்வேலைத்திட்டத்தினை கண்கானித்து டோசர் மற்றும் மோட்டர் கிரேடர்கள் வேலை செய்த நேரங்களின் அளவுகளை குறித்து வைத்ததுடன், புகைப் படங்கள் போன்ற ஆவனப்படுத்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

இது இவ்வாறு இருக்கையில் மழை காரணமாக வேலை நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் எதுவித வேலையும் நடைபெறவில்லை. ஆனால் இவ் மைதான வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டதாக திட்ட முன்னேற்ற அறிக்கை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு அளித்து நிதியினை ஒப்பந்தக்காரர் பெற்றுக் கொண்டுள்ளார். ஆனால் தடுப்பனை மட்டுமே வெட்டி பரவப்பட்டுள்ளதுடன் வேறு எந்தவிதமான நடவடிக்கைகளும் முடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது

இதன் அடிப்படையில்சிறியடோசரினை 16 மணித்தியாலயங்கள் பயன் படுத்தியுள்ளனர். இதற்காக 40,000 செலவளிக்கப் பட்டதுடன், மோட்டர் கிரைடருக்காக 03 மணித்தியாலயம் பயன்படுத்தி 13500 ரூபா செலவளித்துள்ளனர். மோத்தமாக இவ்வேலைத்திட்டத்திற்காக 53,500 ரூபா மட்டுமே செலவளித்துள்ளனர். ஆனால் இவ்வேலைத்திட்டம் நடைபெறும் காலங்களில் வவுனியா வடக்கு பிரதேச செயலக தொழில் நுட்ப உத்தியோகத்தர் சமூகமளித்திருக்கவில்லை. ஆவ்வாறு இருக்கையில் எவ்வாறு நிதியினை முழுமையாக ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்டது என்பதில் கேள்வி எழகின்றது. ஏன் எனில் வேலைத்திட்டங்களை பார்வையிட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர் உறுதிப்படுத்தினால் மட்டுமே வழங்க முடியும்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி வேலைத்திட்டங்கிற்கு வழங்கப்படும் போது அக்கேள்வி கோரல்கள் மூலம் குறைக்கப்படும் நிதி வீனாக அரசிற்கு திரும்ப மிகுதி நிதியினையாவது ஒப்பந்தக் காரர்கள் தரமானதாகவும், பூரணமாகவும் செய்யாமல் விடுவதனால் மக்களிற்கு பிரயோசனமில்லாத திட்டமாக அது மாறுகின்றது.

வவுனியா புளியங்குளம் புரட்சி விளையாட்டுக்கழகம் யுத்த காலத்தின் பின்னர் புளியங்குளம் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தது. அக்காலத்தில் பொலிஸாரினால் தமது பாதுகாப்புக்காக அம்மைதானத்தை சுற்றி மண் அணை இடப்பட்டு பொலிஸ் முகாமாக மாற்றப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் புளியங்கும் மக்கள் மற்றும் புரட்சி விளையாட்டுக்கழகத்தினரால்

**ந.சிவசக்தி ஆனந்தன்**
பாராளுமன்ற உறுப்பினர்



கடந்த காலங்களில் சிறிய நிதியை கூட நேரடியாகவே கிராம மட்டங்களில் இருக்கின்ற பதிவு செய்யப்பட்ட பொது அமைப்புக்களுக்கு வழங்கி அவர்களாகவே வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தனர். ஆனால் தற்போது புதிய சுற்று நிருபம் படி ஒப்பந்தகாரர் மூலமே வழங்க முடியும். இவ்வாறு வழங்கப்படும் பணம் பூரணமாக பயன்படுத்தப்படுவதில்லை. அத்துடன் இவ்வாறு ஒரு வேலைதிட்டத்திற்காக வழங்கப்பட்ட பணத்தினை கேள்வி கோரல் மூலம் போட்டி போட்டு குறைத்து எடுக்கின்றனர். ஆவ்வாறு எடுக்கின்ற வேலைத்திட்டங்களையும் பூரணமாக செய்வதில்லை. இவ்வாறான செயற்பாடு அன்மையில் கூட புளியங்குளம் விளையாட்டு மைதானம் புனரமைப்பில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம். சம்மந்தப்பட்ட அலுவலகம், மற்றும் அலுவலகர் இது தொடர்பாக கவனம் எடுக்க வேண்டும். அத்துடன் ஒப்பந்த தொகைக்கு மிக குறைத்து எடுக்கப்படும் ஒப்பந்தகாரர்களுக்கு வேலைத் திட்டங்களை வழங்காமல் இருப்பதிலும் கவனம் எடுக்க வேண்டும்.

விளம்பரத் தொடர்புகளுக்கு 076 825 5567, 077 152 1586

Anna & Co (Pvt) Ltd.

- Travels & Tours
- International Courier Services
- Educational Consultancy
- Bus & Guest House Booking
- Visa Assistance for all Categories
- Personalized Gift Making
- Real Estate Business
- Marketing

021 221 5656
070 330 5500
No: 976, K.K.S Road, Jaffna.
annaandco.jaffna@gmail.com
akathamarks.com

KTT travels
கொழும்பு - யாழ்ப்பாணம்



இளவாலை இருந்து பண்டத்தரிப்பு ஊடக மானிப்பாய் வீதி ஊடக யாழ்ப்பாணம் உங்கள் முற்பதிவுக்கு எங்களை அழையுங்கள்

யாழ்ப்பாணம் : 077 44 80 216
கொழும்பு : 077 54 84 963
முறைப்பாடு : 077 40 19 227
65 uduvil Road manipay.

VELLAN CONSTRUTION
யாழ்ப்பாணத்தில் உயர் தொழிநுட்பத்தினுடன் கூடிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஸ்தாபனம்.



நியாயமான கட்டணத்தில் தரமான சேவை.
✓ தகுதி பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை.
✓ தரமான மூலப்பொருட்கள்.
✓ வாடிக்கையாளர் திருப்திக்கமைவான சேவை.



- Building constructions
- Building consultancy
- Architectural designs
- Interior design
- Cladding works
- Renovation works
- Molding works
- Landscaping
- Aluminium works

Maththony, karaveddy west karaveddy. Phones no: 0776181414, 0777322720



யாழ். மண்ணில் முதல்தர ஆங்கிலக்கல்லூரியுடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம். சர்வதேச தரத்திலான ஆங்கிலக் கற்கைநெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2017/05/02

IELTS (DURATION 60H WEEK, WEEKEND)
STUDENT VISA, SKILLED MIGRATION, SPOUSE VISA

- தங்களது பெறுமதியான "Band" க்கு நாங்கள் முற்று முழுதாக வழிகாட்டுவோம்
- யாழ்நகரில் IELTS கற்கை நெறி வழிகாட்டலில் முன்னிலையில் திகழும் நிறுவனத்துடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.
- மாணவர்களின் நேர வசதிக்கேற்ப வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
- Lisitening, Reading, Writing, Speaking என்பன ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பயிற்றுவிக்கப்படும்.
- ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்படுவதால் தங்கள் வருகையை உடனடியாக உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

ENGLISH MEDIUM CLASS ஆரம்பம்

GRADE 2-5
- SPEAKING
- READING
- WRITING
- LISTENING

3 MONTH DURATION

GRADE 6-11
ENGLISH MEDIUM
MATHS, SCIENCE AND ENGLISH

- அனுபவம் மிக்க ஆசிரியர்களால் மேற்குறிப்பிட்ட பாடங்கள் கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- ஆங்கிலப் பாடத்திட்டத்திற்கு அமைவாக கல்வி கற்பிக்கப்படும்.
- குறிப்பிட்டளவு மாணவர்களே உள்வாங்கப்படுவதால் தங்கள் வருகையை உடனடியாக உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- மாணவர்களின் ஆங்கில அறிவுக்கு ஏற்றபடி தனிப்பட்ட வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்படும். இதற்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

LMC
LONDON METROPOLITAN COLLEGE
LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
தினேஸ் பேக்கரியின் மேல்புறம்

HOTLINE : 0764190327 I 021 753 8395

# HOME DECOR

தற்போது புதிதாக விரிவுபடுத்தப்பட்ட அலுவலகம் ஊடக எமது உயர் தர சேவையினை உங்களுக்கு வழங்குகிறோம்.

எமது அலுவலகத்துக்கு வருகை தந்து எமது டிசைன்களை பார்வை இடலாம்.

வெளிநாடு ஓடர்களும் குறித்த நேரத்தில் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் மனதுக்கு பிடித்த டிசைன்களை நியாயமான விலைகளில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் தெரிவு Home Decor

No 18/1B, Jumma Mosque Lane,
Grand Bazzar Jaffna
Phone : 077 944 0000
Email : nasserrajeem@gmail.com


**உங்கள் வீடுகள், அலுவலகங்கள் என்பவற்றுக்கான அதி உயர் தர மற்றும் மிகவும் அழகான கேட்டின் வகைகள், சோபா உறைகள் மிக குறுகிய காலத்தில் தைத்து பெற்றுகொள்ள இன்றே நாடுங்கள்.**




# Ciszlei
## guest house and restaurant

WIFI / TV / AC / Non AC / Double Bed rooms / Single rooms / Parking / restaurant
என சகல வசதிகளுடனும் அமைந்துள்ளது.

மிகவும் இனிமையான சுழலில் உங்கள் இனிமையான உறவுகள் உடன் அதித சுவையான உணவுகளை உண்டு மகிழ இன்றே நாடுங்கள்.





வசதிகள்

1.சுற்றுலா பயணிகளுக்கான சகல ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும்.
2.யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துஉள்ளதால் அனைத்து பகுதிகளுக்கும் இலகுவாக பிரயாணிக முடியும்
3.மிகவும் அமைதியான மற்றும் இயற்கையான சூழல்
4.உங்கள். தேவைக்கு ஏற்ப அனைத்து வகை உணவுகளும் ஓடர் செய்து பெற்று கொள்ளலாம்.

337/4B K.K.S Road maruthanarmadam.
Chunnagam jaffna (near hanuman temple)
Phone :021 224 1555 , 077 4713 319 , 076 3046 429

# Ramilesh Digital Photo & Video



அனைத்து சுப காரியங்களும் சிறந்த முறையில் அதிநவீன டிஜிட்டல் கேமரா முலம் குறித்த நேரத்தில் தரமானதாக செய்து கொடுக்கப்படும்.

நவீன அல்ப வகைகள் மற்றும் டிசைன்கள் இந்திய நிபுணர்களால் செய்து வழங்கப்படும்





T.P. 0774530156, 0788880188
ramilesh2012@gmail.com


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 21.05.2017 அன்று வெளியிடப்பட்டது.